
# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"


CONNEMARA P
6 - JUL 1965
MADRAS



ஸ்ரீ மாதவப்பெருமாள்—மயிலாப்பூர்

மலர் 7] விசுவாவசு ஆனி—ஜூலை 1965 [ மணி 10

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், பூம்புகார்க் கீழ்த் திசைப் பண்பாட்டுக் கல்லூரிக்கு நன்கொடையாகத் திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி கோயில் நிதியில் இருந்து, ஒரு லட்சம் ரூபா மதிப்புள்ள அரசினர் கடன் பத்திரங்களை நமது அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A., B.L., அவர்களிடம் வழங்குகின்றார்கள். உடன் இருப்பவர் : தஞ்சைத் துணை ஆணையர் திரு. S. மார்க்கண்டேவேல் ராஜன், B.A. அவர்கள்.

(17—5—65.)

---

## பொருள் அடக்கம்


1. இளங்கோவடிகளும், சேக்கிழாரடிகளும்
2. உலகப்பெருங் கவிஞர்தலைவர்
3. சமயக்கொள்கை வகைகள்
4. சமயப் பொருட் குறிப்புக்கள்
5. பராங்குசமுனியும்—பரகாலகவியும்.
6. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
7. பாரதப் பண்போவியங்கள்
8. மாசாத்தனர்
9. வடதிருச்சிற்றம்பலம்—கல்வெட்டுகள்
10. திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்


---


**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**


### சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 7] விசுவாவசு ஆனி—ஜுலை [மணி 10

# இளங்கோவடிகளும், சேக்கிழாரடிகளும்

**முன்னுரை :**

'இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும்' என்னும் தலைப்பு, மிகப் பெரும்பாலோர்க்கு வியப்பினை விளைவித்தல் கூடும். ஏனெனில், மேம்போக்காகக் காண்புழி இவ்விருவருக்கும் இடையே இயைபு எதுவும் இருப்பதாகப் பொதுவாகப் புலப்படவில்லை. இளங்கோவடிகள் இருந்த காலமும், சேக்கிழாரடிகள் திகழ்ந்த காலமும் வெவ்வேறானவை. இருவர்க்கும் இடைப்பட்ட காலம் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகும். அன்றியும், சேக்கிழாரடிகள் சிவநெறிப் பெருந் தலைவர்களுள் ஒருவராகத் திகழா நிற்க, இளங்கோவடிகளோ சமண சமயத்தினைச் சார்ந்தவர் என்று ஒரு சிலரால் கருதப்படுபவர். இளங்கோவடிகள் உலகியற் கலை நோக்கமே பெரிதும் அமையத் தம் அரும்பெரும் நூலினை இயற்றினர்; சேக்கிழாரடிகளோ அருளியல் இறை நாட்டமே பெரிதும் குறிக்கோளாகக் கொண்டு தமது நூலினை யாத்தருளினர்.

இனைய சில வேறுபாடுகள் காரணமாக, இதுகாறும் ஒருவரேனும் இவ்விரு பெருமக்களையும் இணைத்து ஒப்பிட்டு நோக்கி ஆராயத் தலைப்பட்டிலர். இளங்கோவடிகளையும் சிலப்பதிகாரத்தையும் இன்று பல்வேறு திற மக்களும், மிகவும் போற்றிப் பெருமிதம் கொள்ள முற்பட்டுள்ளனர். ஆனால் சேக்கிழாரடிகளையும் பெரிய புராணத்தையும் சமய அமைப்புகள் மட்டுமே போற்றி வருகின்றன. '**இளங்கோவன்** [1]' என்று பலர், இன்று தமக்குப் பெயர் வழங்கிக்கொண்டு மகிழ்தலைக் காண்கின்றோம். ஆனால் '**சேக்கிழான்**' என்று சமயவுணர்வு மிக்கவர்களுங்கூடத் தம் பிள்ளைகளுக்கு யாண்டும் பெயரிட்டு அழைத்து மகிழ்தலைக் காண்கின்றிலேம். "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் **இளங்கோ**வைப் போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று **பாரதியார்** அண்மையிற் பாடிப் புகழ்ந்ததனால், இளங்கோவடிகளுக்கு இன்று முன்பினும் ஒரு புதிய புகழும் பெருமையும் ஏற்பட்டுள்ளன. ஆனால் சேக்கிழாரடிகள் அத்தகைய புதுப் பெருமைகள் ஏதும் எய்தாமல், ஒருசில அறிஞர்களுக்கும் பக்தியாளர்களுக்கும் மட்டுமே உரியவராக விளங்கிக் கொண்டு வருகின்றார். சிலப்பதிகாரம்

(1) 'இளங்கோ' அல்லது 'இளங்கோன்' என்றலே முறை. 'இளங்கோவன்' என்பது இலக்கண வழக்கு அன்று; உலக வழக்கே ஆகும்.

பற்றிப் பேசுவோர் பெரியபுராணத்தையும், பெரியபுராணம் பற்றிப் பேசுவோர் சிலப்பதிகாரத்தையும், அத்துணை மிகுதியாக மதித்துப் போற்றிப் பாராட்டி மகிழும் வழக்கம் காணப்படவில்லை. எனவேதான், இன்றைய சூழ்நிலையில் இவ்விரு பெருஞ் சான்றோர்களையும் இணைத்து ஒப்பிட்டு நோக்கி ஆராய்ந்துணர்தல் (Comparative Study), மிகவும் நலம் பயப்பதாகும் என்று கருதி விரும்பி, இத்தலைப்பு ஈண்டு எடுத்துக்கொள்ளப் பெற்றது. இப் பெரும் பொருளைக் குறித்து, ஈண்டு இயன்ற வரையில் ஒரு சிறிது ஆராய்ந்து கண்டு, இன்புற முயல்வோம்!

## ஒப்புமை இயல்புகள் சில:

(1) இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும் "முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிஞர்கள்" என்பதில் தடையில்லை. இவ்விருவருமே தமிழகம் போற்றத் தகுந்த தலைசிறந்த சான்றோர்கள், கலைஞர்கள், அறவோர்கள் ஆவர்!

'உலகப் பெருங்கவிஞர்களின் பேரவையில் இங்கிலாந்து நாட்டின் சார்பாளர்களாக விளங்குதற்கு ஷேக்ஸ்பியரும் மில்ட்டனும் மிகவும் தகுதியுடையவர்கள். ஆயினும் அவர்கள் இங்கிலாந்துக்கு மட்டுமேயன்றி, உலகத்திற்கேயுரிய பெருங் கவிஞர்கள் ஆவர்' என்று ஆங்கில அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார் (1). அம்முறையிற் கூறுதலுறின், இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும் உலகப் பெருங்கவிஞர்களின் பேரவையில் தமிழ் நாட்டின் சார்பாளர்களாக விளங்குதற்கு மிகவும் தகுதியுடையவர்கள் ஆவர் என நாமும் துணிந்து கூறலாம்.

(2) இளங்கோவடிகள் சேரர் குலத்துத் தோன்றல்; சேக்கிழாரடிகள் சோழநாட்டின் தலைமை முதலமைச்சர். இருவருமே வாழ்க்கை வளங்கள் பலவும் வாய்ப்புற அமைந்து, 'நிரம்பிய வாழ்க்கை' வாழ்ந்து சிறந்து விளங்கியவர்கள்.

(3) இவ்விருவரும் பல வகையில் தம்முள் உணர்ச்சியொத்த உள்ளத்தினராகக் காணப்படுகின்றனர். புலமைத் துறையிலும் சான்றாண்மை நலங்களிலும், இருவரும் ஒருவருக்கொருவர் 'சரிநிகர் சமானமாகவே' விளங்குகின்றனர்.

(4) அரசுரிமை துறந்த இளங்கோவடிகள் 'குணவாயிற் கோட்டம்' என்னும் கோயிலில் இருந்து சிலப்பதிகாரம் இயற்றினார்; அமைச்சுரிமை துறந்த சேக்கிழாரடிகள் தில்லைத் திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் இருந்து திருத்தொண்டர் புராணம் பாடினார்.

தவநலஞ் சான்ற சிறந்த பெருமக்கள்தாம் அழியாத பேரிலக்கியங்களை இயற்ற முடியும் என்பர் அறிஞர் (2). அவ்வாற்றால் நோக்கினும், தூய துறவுள்ளம் உயரிய தவவொழுக்கம் முதலியவற்றில் இளங்கோவும் சேக்கிழாரும் பெரிதொத்துக் காணப்படுகின்றனர்.

(5) பற்றற்ற தூய 'துறவுணர்ச்சி மிக்க வாழ்வில் இருவரும் தலைசிறந்து விளங்கினராயினும், நாட்டுப் பற்று-மொழிப்பற்று - அருங்கலையார்வம் என்

---

(1) "England may choose to be represented by Milton and Shakespeare at an international congress of World-poets, but they are more than English. They are of all countries; Milton no less than Shakespeare."

—Mark Pattison, English Men of Letters. Page: 220

(2) "He who is not a seer cannot produce a great literature, 'Nan rish kurute kavyam'.. The intense concentration of mind is essential, not only for saintliness but for artistic creation. The impulse for great literature comes from a higher consciousness. The possession of our mind by a master-spirit is the phenomenon of inspiration......".

—Dr. S. Radhakrishnan, in a P.E.N. Conference.

னும் இன்னோரன்ன நலங்களில் ஒரு சிறிதும் குறைவிலா நிறைவினராய், இவர்கள் இருவருமே தமக்கு நிகர் பிறர் எவரும் இன்றித் திகழ்கின்றனர்.

(6) வெறும் கலையறிவும் நூலறிவும் ஆகிய புலமை மட்டுமே எய்தி நிற்கும் ஏனைய சில கவிஞர்களும் புலவர்களும் போல் இன்றி, "காவற் சாகாடு உகைத்து" நாடு காத்தோம்ப வல்ல அறிவாற்றல் ஆள்வினைத் திறங்களும் மிக்குடையவர் களாக இவ்விருவரும் இலங்கினர்.

(7) இசைக்கலையுணர்வும் ஈடுபாடும், மக்கள் மனத்தைப் பண்படுத்திப் புனித மாக்கும் சிறப்புடையன. 'எவன் இசை யுணர்வு இல்லாதவனோ, எவ னுக்கு இசை கேட்டு உள்ளம் உருக வில்லையோ, அவன் வஞ்சகம் சூழ்ச்சி கொலை கொள்ளை முதலிய கொடுஞ் செயல்களைப் புரியவல்ல இயல்பினன் ஆவான்' என்று **ஷேக்ஸ்பியர்** பாடுவர். கலைகளுள் தலைமை சான்ற அத்தகைய இசைக் கலையின்பால் இவ்விருவர்க்கும் பேரீடுபாடு இருந்தது. இளங்கோ வடிகள் இசைக் கலையில் ஈடுபாடு கொண்டவர் என்பது, சிலப்பதிகாரத் துள் ஆங்காங்கு இடையிடையே விரவி வரும் இசைக்கலை பற்றிய நுணுக்கக் குறிப்புகளாலும், இசைநலங் கனிந்த வரிப்பாடற் பகுதிகளாலும், தெளிவுறப் புலனாகின்றது; அங்ஙனமே சேக்கிழா ரடிகளும் "மொழிக்குமொழி தித்திக்கும் மூவர் தமிழ்" இசையிற் பெரிதும் ஈடு பட்டுத் திளைத்து இன்புற்றவர் என்பது, அவர் தம் பெரிய புராணத்தால் தெளியப் படுகின்றது.

வண்டு பாடப் புனற்றடத்து
மலர்ந்து கண்ணீர் அரும்புவன,

கொண்ட வாச முகையவிழ்ந்த
குளிர்பங் கயங்க ளேஅல்ல ;

அண்டர் பெருமான் திருப்பாட்டின்
அமுதம் பெருகச் செவிமடுக்கும்

தொண்டர் வதன பங்கயமும்
துளித்த கண்ணீர் அரும்புமால்!

உள்ளம் ஆர்உரு காதவர்? ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள், பைங்
கிள்ளை பாடுவ ; கேட்பன பூவைகள்!

என்பன போன்று வரும் பெரிய புராணப் பாடல்கள் பல, சேக்கிழாரடிகளுக்குத் திருநெறித் தமிழிசையின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாட்டின் பெற்றியினை விளக்கும்.

(8) இவ்வண்ணமே, நல்லிசைக் கவிஞர் அனைவர் மாட்டும் பொதுமைச் சிறப்பியல்பாகக் காணப்பெறும் இயற் கைப் பொருளழகின் ஈடுபாட்டுத் துறை யிலும், மரம் செடி கொடி மலர் பறவை விலங்கு ஆறு மலை காடு சோலை நாடு நகரம் என்னும் இயற்கைப் பொருள் களின் இயல்புகளை நுனித்துணர்ந்து காண்டலிலும், அவையிற்றின் அழகு களையெல்லாம் இயல்நெறி திறம்பாமல் தன்மை நவிற்சி அமைய உள்ளவாறு விளக்கிப் பாடுதலிலும், இளங்கோவடி களும் சேக்கிழாரடிகளும் பெரிதொத்த நிலையினராகக் காணப்படுகின்றனர். சிலப்பதிகாரத்தும் பெரிய புராணத்தும் ஆங்காங்கே போதரும் அழகிய இனிய இயற்கைப் புனைவுப் பகுதிகள் இவ்வுண் மைக்குச் சான்று பகரும்.

இயற்கைப் பொருளின் அழகுகளைச் சுவையொழுகக் காப்பியத்தின்கண் அமைத்துப் பாடுந் திறனில் இளங்கோ வடிகள் சேக்கிழாரடிகள் போன்ற சான் றோர் பெருமக்களுக்கும், பிற்காலக் கவி ஞர்களுக்கும் பெரிதும் வேறுபாடுண்மை கருத்திற் பதிக்கற் பாலதாகும். இயற் கைப் பொருளின் இயல்புகளை நுனித்து நோக்கி யுணர்ந்து கொள்ளாமல், வெறும் வாய்பாடு மாத்திரத்தான் நூல்களிற் கற்றறிந்தவற்றையே திரும் பப் பாடிச் சென்றொழியும் பிற்காலக் கவிஞர்களைப் போல் அன்றி, இளங்கோ வும் சேக்கிழாரும் இயற்கைப் பொருளி யல்புகளையெல்லாம் கூர்ந்து கூர்ந்து நோக்கி, ஓர்ந்துணர்ந்து ஆராய்ந்து தெளிந்து, புதுமைநலம் தோன்றப் பாடும் மதிநலஞ் சான்றோர் ஆவர்.

(9) இளங்கோவடிகள் தாம் சேரர் குலத்துத் தோன்றல் ஆயினும், ஏனைச் சோழ பாண்டிய வேந்தர்களின் நாடுகளையும், அவர்தம் அறனும் மறனும் ஆற்றலும் பண்பும் விளங்க, நடுநிலை பிறழாது பொதுமையுணர்வு மேலோங்கிய நிலையிற் சேர நாட்டுடன் ஒப்பவைத்துச் சிறந்தெடுத்துப் பாடியருள்கின்றார். இங்ஙனமே, சேக்கிழாரும் தாம் சோழ நாட்டின் முதலமைச்சராகத் திகழ்ந்திருந்தனராயினும், ஏனைப் பிறநாடுகளையும் வேறுபாடின்றித் திறம் தெரிந்து புகழ்ந்து பாடுகின்றார். அடியவர்கள் அனைவரையும், அவர்கள் எந்நாட்டாராயினும் எக்குலத்தினராயினும், 'இவர் தேவர் அவர் தேவர் என்று இரண்டாட்டாது ஒழிந்து ஈசன் திறமே பேணி' வேறுபாடு சிறிதும் கருதாது, ஒத்த நிலையினராகவே வைத்து மதித்துப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பரவுகின்றார்! இத்தகைய நடுவு நிலைப் பொதுமை நல்லுணர்வில் இளங்கோவும் சேக்கிழாரும் எத்தகைய சிறு வேறுபாடும் இன்றி இணைந்தியைந்து நிகரொத்துத் திகழுகின்றனர்.

(10) தேசிய கவிஞர் பாரதியார் பாராட்டிச் சிறப்பித்துப் பாடியதற்கு ஏற்ப, '**நெஞ்சை யள்ளும்**' திறனில் இளங்கோவின் சிலப்பதிகாரம் போலவே, சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமும் ஒப்புயர்வற்றுத் தெய்வப் பெற்றிமை சான்று தலைசிறந்து திகழ்கின்றது. எளிமை இனிமை தெளிவு முதலிய நலங்கள் அமைந்து, சொற்பொருட் சுவை நலங்கள் மிகுந்து, இழுமெனும் இசையில் ஒழுகிய நடையின் விழுமியது பயந்து, கலைத்திறங்கள் செறிந்து, இணையற்று இலங்கும் இலக்கியப் பெருமணிகளாக அறிவொளி பரப்புதற்கண், இவ்விரண்டும் தமக்கு உவமை தாமேயாக விளங்குகின்றன. தமிழ் நாட்டின் பழம்பெருஞ் சிறப்புகளையும் வரலாறுகளையும் பண்பாடுகளையு மெல்லாம் நம்மனோர் தெளிந்துணர்ந்து கொள்ளுதற்கு இவ்விரு பெருமக்களின் நூல்களே நமக்குச் செவ்விய துணைக் கருவிகளாகச் சிறந்தொளிர்கின்றன. தமிழ்நாட்டின் நாகரிகப் பண்பாட்டு நலங்களை உள்ளவாறு உணர்தற்குச் சிலப்பதிகாரமும் பெரியபுராணமும், போன்ற சிறந்த இலக்கியங்களே தலைமை முதலிடம் பெறத் தக்கனவாகும்.

### சேக்கிழாரும் சங்கநூல்களும் :

சேக்கிழாரடிகள் சோழநாட்டின் "முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சர்." அமைச்சர்க்குரிய பண்பு நலங்கள் பலவும் அமைந்து சிறந்தவர். "மதிநுட்பம் நூலோடு உடையவர்." "ஆராய்ந்த கல்விச் செறிவு" மிக்கவர். "நுணங்கிய கேள்வி மேலோர்." எனவே, திருத்தொண்டர் வரலாறுகளை யெல்லாம் திறம்தெரிந்து சிறந்தெடுத்துப் பாடிய அவர், பழந்தமிழகச் செய்திகளையும் பழந்தமிழ் நூற் பொருள்களையும் நுண்ணிதின் ஆராய்ந்து எண்ணிக் கற்றிருந்தாராதல் வேண்டும்! மும்மையால் உலகாண்ட **மூர்த்திநாயனார்** வரலாற்றுள், **மதுரைமாநகர்** பற்றிப் பாட வருங்கால்,

> சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய
> அங்கண் மூதூர்
>
> நூல்பாய் இடத்தும் உள, நோன்றலை
> மேதி பாயப்
>
> பால்பாய் முலைத்தோய் மதுப்பங்கயம்
> பாய எங்கும்
>
> சேல்பாய் தடத்தும் உள, செய்யுள்
> மிக்கேறு சங்கம்

[நிறைவு மிக்க இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழ்களும் தங்கி நிலைபெற்ற அழகிய இடத்தையுடைய அந்தப் பழமையான மதுரை மாநகரில், நூல்கள் பரவுகின்ற இடங்களில் செய்யுட்கள் பெருமைபெற்று அரங்கேறுகின்ற தமிழ்ச்சங்கங்களும்; எருமைகள் மிகுதியாக வந்து பாய்ந்து படிவதனால், அவற்றின் மடியினின்று சுரந்து பெருகும் பாலும், தாமரை மலர்களினின்று ஒழுகும் தேனும் கலந்து எங்கும் பரவுதலால் உண்டு கொழுத்த சேல்மீன்கள்

துள்ளிப பாய்கின்ற நீர்நிலைகளில், வயல்களில் மிகுதியாகத் தோன்றி வரப்புகளில் ஏறுகின்ற சங்குகளும் நிரம்ப உள்ளன.

செய்யுள்—கவிதை ; வயல்களில்.
சங்கம்—தமிழ்ச் சங்கம்; சங்குகள்.
மிக்கேறுதல்—அரங்கேறுதல், வரப்புகளில் ஏறி உலாவுதல்.]

மும்மைப் புவனங்களின் மிக்கது
அன்றே ? அம்மூதூர்

மெய்ம்மைப் பொருளாம் தமிழ் நூலின்
விளங்கு வாய்மைச்

செம்மைப் பொருளும் தருவார்
திருவால வாயில்

எம்மைப் பவம்தீர்ப்பவர் சங்கம்
இருந்தது என்றால் !

[திருவாலவாய் என்னும் கோயிலில் எழுந்தருளி எங்கள் பிறவியைத் தீர்த்தருள்பவர் ஆகிய சிவபெருமான், இறையனார் என்னும் பெயருடைய புலவராக அமர்ந்து தலைமை தாங்கிச் சங்கம் இருந்து தமிழாராய்ந்ததும், மெய்ம்மைப் பொருளாம் தமிழ் நூலின் விளங்கு வாய்மை ஆகிய இறையனார்களவியல் என்னும் நூலைத் தந்தருளியதும், அதற்கு உரை காண்பதில் ஏற்பட்ட சங்கத்தார் கலகம் தீர்த்ததும் ஆகிய திருவிளையாடல்கள் நிகழ்தற்கு ஏதுவாகப் பண்டைத் தமிழ்ச்சங்கம் அமைந்திருந்த தலம் மதுரையே யாகும் எனின், அந்நகரம் மூன்று உலகங்களினும் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத மேம்பாடு உடையதாகும் அன்றோ ?]

எனவரும் இனிய பாடல்களால், மதுரை மாநகரின்கண் 'தமிழ்ச் சங்கம்' அமைந்து விளங்கியிருந்த செய்தியினைப் புகழ்ந்து பாடியருளும் சேக்கிழார், சங்கத் தமிழ் நூல்களைத் தம் இளமையிற் கற்றுச் சுவைத்து மகிழ்ந்திருப்பார் எனத் துணியலாம் அன்றோ? சங்கத் தமிழ் நூல்களைச் சேக்கிழார் தமது இளமைப் பருவத்தில் தகவுறக் கற்றுச் சுவைத்து மகிழ்ந்திருப்பார் என்று துணிந்தனமாயின், நெஞ்சையள்ளும் செஞ்சொற் காப்பியமாம் சிலப்பதிகாரத்தினையும் அவர் கற்று மகிழ்ந்திருப்பார் எனக் கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளின், சிலப்பதிகாரத்தின் சொற்பொருட் கருத்துச் சாயல்கள் ஒரு சிலவேனும், பெரிய புராணத்திற் காணப்படுதல் கூடும். ஆதலின், அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் ஈண்டுக் காண்போம் !

## இமயத்திற் புலிக்கொடி :

(1) பழந்தமிழ்ச் சோழ வேந்தர்கள் இமயம் வரையிற் சென்று புலிக்கொடி பொறித்து மீண்டு வந்த செய்தியினை, அச் சோழநாட்டின் முதலமைச்சராக விளங்கி யிருந்த சேக்கிழாரடிகள் பெருமிதம் தோன்றப் பாடுகின்றார்.

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்.

பொன்மலைப் புலிநின் றோங்கப்
புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியே ஆக
அயல்வழி அடைத்த சோழன்

எனவரும் பெரியபுராணப் பாடல்கள், சோழவேந்தர்கள் இமயத்திற் புலிக்கொடி நாட்டிய செய்தியை வற்புறுத்துதல் காணலாம். இங்ஙனம் சேக்கிழார் பாடியருளியமைக்குரிய சான்றுகளுள்,

இகல மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலில் திருமா வளவன்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்,
அசைவில் ஊக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலை என,
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர்வோன்
இப்பால் இமயத்து இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா, எப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்,
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே !

என்பன போல வரும் சிலப்பதிகாரப் பகுதிகள் குறிப்பிடத்தக்க சிறப்பின வாதல் ஒருதலை. சேக்கிழாரடிகள் மேலைச் சிலப்பதிகாரப் பகுதிகளைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்திருப்பார்! மகிழ்ந்த தன் பயனாகவே, சோழ வேந்தர்கள் இமய வெற்பிற் புலிக்கொடி பொறித்த செய்தியைப் புகழ்ந்து பாடி யிருப்பார் என நாம் கருதி மகிழலாம்.

### கார் எனும் பருவ நல்லாள்

(2) சேக்கிழாரடிகள் **ஆனாய நாயனார்** புராணத்துள் முல்லை நிலத்துக்குரிய கார்காலத்தினையும், மாலைப் பொழுதினை யும் அழகுறப் புனைந்து பாடுகின்றார். கார்காலம் தோன்றினால் காட்டில் முல்லைப் பூக்கள் மலரும், மயில்கள் ஆடும், வண்டுகள் பாடும், சிவந்த பட்டுப் பூச்சிகள் தோன்றிப் பறக்கும். மேகங் கள் வானத்தில் திரண்டு கவியும். மாலை வேளைகளில் மின்னல்கள் தோன்றி அசைந்து பளிச்சிடும். இவ்வியற்கை நிகழ்ச்சிகளைப் பாடலுறும் சேக்கிழார். "**கார்காலம்** என்னும் அழகிய பருவ நங்கை யானவள், **மயில்கள்** அகவவும், **வண்டுகள்** பாடவும், **முல்லை** மலர்களைப் பற்களாகவும், இந்திரகோபப் பூச்சி களைத் தன் சிவந்த உதடுகளாகவும் கொண்டு, மின்னலைப் போன்ற இடை யுடன், மாலையை அணிந்த தன் கொங்கை கள் அசையும்படி, **உலகம்** ஆகிய நாடக மேடையின் மீது, காண்பவர்களின் கண்ணும் கருத்தும் கவரும் வகையில், நடித்துக் காட்டுதற்காக வந்து தோன்றி னாள்" என்னும் கருத்தமைய,

> நீலமா மஞ்ஞை ஏங்க
> நிரைக் கொடிப் புறவம் பாடக்
>
> கோலவெண் முகைஏர் முல்லை
> கோபம் வாய் முறுவல் காட்ட
>
> ஆலும்மின் இடைசூழ் மாலைப்
> பயோதரம் அசைய வந்தாள்
>
> ஞாலநீ டரங்கில் ஆடக்
> கார்எனும் பருவ நல்லாள்

[மஞ்ஞை - மயில், ஏங்க - அகவ, நிரை - வரிசை, கொடி - கொடிகளில் உள்ள வண்டுகள், புறவம் - முல்லைப்பண், முகை - அரும்பு, ஏர் — அழகு, கோபம் - இந்திர கோபம் என்னும் தம்பலப்பூச்சி, ஆலும் - அசைகின்ற, இடை - நடு, இடுப்பு, மாலை - மாலைக்காலம், பூமாலை. பயோதரம் - மேகம், கொங்கைகள், பருவநல் லாள் - பருவம் ஆகிய பெண், பருவம் அடைந்த அழகிய பெண், அரங்கு - மேடை ]

என உருவக முறையிற் சிறந்த சொல் லோவியம் ஒன்றைப் பெரிய புராணத் துள் அமைத்துக் காட்டுகின்றார். இதனை ஒரு புடையே ஒத்து, இதனுடன் தொடர் புடையதோ என நம்மனோர் எண்ணு தற்கு இடனுண்டாமாறு.

> விரிகதிர் பரப்பி உலகம் முழு தாண்ட
> ஒருதனித் திகிரி உரவோற் காணேன்!
> அங்கண் வானகத்து அணிநிலாத் திகழ்தரும்
> திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்? எனத்
>
> திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
> முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
> திரைநீர் ஆடை இருநில மடந்தை
> அரைசுகெடுத் தலமரும் அல்லற் காலை

எனவரும் இளங்கோவடிகளின் "**அந்தி மாலைச் சிறப்புச் செய்காதை**" வரிகள், அழகுற அமைந்து விளங்குதல் ஒப்பு நோக்கி யுணர்ந்து மகிழற்பாலதாகும்.

'தன் கதிர்களை உலகம் முழுவதும் பரப்பி ஆண்ட ஒற்றைச் சக்கரத்துத் தேரையுடைய சூரியன் ஆகிய **பேரரசன்** மறைந்தான். அடுத்துத் தோன்றி முடி சூடி ஆளுதற்குரிய சந்திரன் ஆகிய **இளவரசன்** எங்கே இருக்கின்றானோ? தெரியவில்லையே என்று, திசை ஆகிய **முகம்** பசலை நிறம் அடைந்து, சிவந்த மலர் போன்ற **கண்**களினின்று நீர்பெருக, வானம் ஆகிய **உடம்பு** முழுவதும் பனி கொண்டு, கடல் ஆகிய ஆடையை உடுத்த நிலம் ஆகிய **அரசி**யானவள், தன் கணவனை இழந்து செய்வது அறியாது திகைத்து வருந்துகின்ற **அந்திமாலைக் காலம்**' என்பது, இவ்வினியவரிகளின் பொருள்.

**புகைகளும் ஒலிகளும் :**

(3) இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில், கோவலனும் கண்ணகியும் மதுரைமா நகர் நோக்கிச் செல்லுங்கால், மதுரை நகருக்குச் சிறிது தொலைவில் நெருங்கிக் கொண்டிருக்கும் பொழுது, அங்கே பலவகைப் புகைகள் வெளிப்படுதலைக் கண்டனர் எனப் பாடுகின்றார். சமையலறைப் புகை அப்பவாணிகர் அப்பம் சுடும் புகை, பெண்களும் ஆண்களும் தம் மாடமாளிகைகளில் இடும் நறுமணப் பொருள்களின் புகை, அந்தணர்கள் இயற்றும் வேள்விகளின் புகை முதலிய பலவேறு இனிய நல்ல புகைகள் மதுரைமா நகரினின்று எழுந்து, விசும்பிற் பரவி யுலவுதலைக் கோவலனும் கண்ணகியும் கண்டனர்.

> அட்டிற் புகையும், அகல்அங் காடி
> முட்டாக் கூவியர் மோதகப் புகையும்,
> மைந்தரும் மகளிரும் மாடத்து எடுத்த
> அந்தீம் புகையும், ஆகுதிப் புகையும்,
> பல்வேறு பூம்புகை அளைஇ.........

இங்ஙனமே, கோவலனும் கண்ணகியும் மதுரை நகரினை நெருங்கி மிகவும் அணித்தாக நடந்து சென்று கொண்டிருக்கும் போது, வைகறை ஆகிய விடியற்கால வேளையில், மதுரையினின்று எழும் பல வகை ஒலிகளைக் கேட்கின்றனர். பாண்டிய மன்னனின் அரண்மனையிற் காலை வேளையில் அறையப் பெறும் முரசத்தின் ஒலியும், அந்தணர்கள் ஓதும் வேதங்களின் ஒலியும், முனிவர்கள் மந்திரங்களை ஓதி வழிபடுகின்ற ஒலியும், நாட்காலையில் வாட்போர் வீரர்கள் எழுப்பும் முரசின் ஒலியும், யானைப் படைகள் பிளிறி முழங்கும் ஒலியும், மருத நிலத்து மன்னர்கள் வைகறையிற் கொட்டும் கிணைப்பறையின் ஒலியும் ஆகிய ஒலிகள் பலவும், கடலின் ஒலியைப் போல அவர்களுக்குக் கேட்டன என்று இளங்கோவடிகள் பாடுகின்றார்.

> காலை முரசக் கனைகுரல் ஓதையும்
> நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்
> மாதவர் ஓதி மலிந்த ஓதையும்
> வாளோர் எடுத்த நாளணி முழவமும்
> போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்
> பணைநிலைப் புரவி ஆலும் ஓதையும்
> இணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்
> கார்க்கடல் ஒலியிற் கேட்டனர் ......

இச் சிலப்பதிகாரப் பகுதிகளைப் படிக்கும் போது, சேக்கிழார் பாடல்கள் சிலவும் நம் நினைவுக்கு வருகின்றன. சோழநாட்டு மாட மாளிகைகளையும் சோலைகளையும் பலவகைப் புகைகள் சூழ்கின்றன. அவைகள் கரும்பு ஆலைகளின் நறும்புகையோ, மாதரார் தம் கூந்தலுக்கு இடும் அகிலின் தூபமோ, அந்தணர்கள் நடத்தும் யூபவேள்விப் புகையோ, வானத்திற் பரவும் மேகமோ, இவைதாம் என்று சுட்டிச் சொல்லல் அரிது என்கின்றார் சேக்கிழார்!

> கரும்படு களமர் ஆலைக்
> கமழ்நறும் புகையோ, மாதர்
> சுரும்பெழ அகிலால் இட்ட
> தூபமோ, யூப வேள்விப்
> பெரும்பெயர்ச் சாலை தோறும்
> பிறங்கிய புகையோ வானின்
> வருங்கரு முகிலோ சூழ்வ
> மாடமும் காவும் எங்கும் !

கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள் நாயனார் வாழ்ந்து அரசு செலுத்திய கொடுங்கோளூர் என்னும் சேரநாட்டுத் தலைநகரம் பற்றிப் பாடத் தலைப்படும் சேக்கிழாரடிகள், மதுரை நகரில் வைகறைப் போதில் எழும் பல வகை ஒலிகளையும் பற்றி இளங்கோவடிகள் குறிப்பிட்டிருப்பதனை நினைவு கூரும்வகையில், பின்வருமாறு பாடியருளி யிருத்தல் ஒப்பிட்டு உணர்ந்து மகிழ்தற்கு உரியது.

> காலை எழும்பல் கலையின்ஒலி,
> களிற்றுக் கன்று வடிக்குமொலி,
> சோலை எழும்மென் சுரும்பின்ஒலி,
> துரகச் செருக்காற் சுலவுமொலி,

பாலை விபஞ்சி பயிலுமொலி,
பாடல் ஆடல் முழவினொலி,
வேலை ஒலியை விழுங்கிஎழ,
விளங்கி ஓங்கும் வியப்பினதால்!

**பாலைநிலப் புனைவு :**

(4) கோவலன் கண்ணகி கவுந்தி என்னும் மூவரும் உறையூரினின்று நீங்கி, வைகறையிற் புறப்பட்டுத் தென்றிசை நோக்கிச் செல்கின்றனர், வழியில் ஓர் இளமரக்காவின்கண் தங்கினர். அங்கே மாங்காட்டு மறையோன் என்பவனைக் கண்டு, அவன்பால் உரையாடினர். அவன் திருவேங்கடமும் திருவரங்கமும் கண்டு தொழுவதற்காகத் தான் வந்த செய்தியைக் கூறினான், அது கேட்டு மகிழ்ந்த கோவலன், அவனை, மதுரைக்குச் செல்லும் வழியாது? என வினவினான். வெப்பம் மிக்க கொடிய இவ் வேனிற் காலத்தில், இப்பாலை நில வழியிலோ நீங்கள் செல்லப் போகின்றீர்கள்? என வியந்து வினவி, மதுரைக்குச் செல்லும் நெறியை அவன் தெரிவிக்கின்றான். அப்பகுதியில்,

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்

என்னும் அழகிய சிறந்த வரிகள் வருகின்றன. பாலைத் திணையின் இயல்பினை விளக்குதற்குச் சான்றோர்கள் பலரும் இச் சிலப்பதிகார வரிகளையே, இலக்கண நூல்களில் மேற்கோள் காட்டுவர்! தமிழ் நாட்டில் தனியே பாலை என்று ஒரு நிலம் கிடையாது. வேனிற் கால வெப்பத்தினால் முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தம் வளம் குன்றித் திரிதலால், பாலைநிலமாகத் தோன்றும். எனவே பாலைக்கு 'நடுவு நிலைத்திணை' என்றும் ஒரு பெயர் உண்டு. பாலைத் திணைக்கு வேனிற்காலமும் நண்பகலும் முறையே பெரும்பொழுதும் சிறு பொழுதுமாகக் கூறுவர். பின் பனிக்காலமும் பாலைக்குரிய பெரும்பொழுதாகும். இப்பாலை நிலத்திற்குரிய தெய்வமாக ஞாயிற்றையும் வாயுவையும் ஒரு சிலர் கூறுவது உண்டு எனினும், கொற்றவையினையே பாலைத்திணைக்குரிய தெய்வமாக இளங்கோவடிகள் கொண்டார். **"வேட்டுவ வரி"** என்னும் பகுதியிற் பாலைநில வேடர்கள் கொற்றவையைப் பரவி வழிபட்டதாக அடிகள் பாடியிருத்தல் கொண்டு, இதனை யுணரலாம். இவற்றினையெல்லாம் நினைவூட்டும் முறையில்,

கோல முல்லையும் குறிஞ்சியும்
அடுத்தசில் இடங்கள்
நீல வாட்படை நிலி
கோட்டங்களும் நிரந்து,
கால வேனிலிற் கடும்பகற்
பொழுதினைப் பற்றிப்
பாலையும் சொலல் ஆவன
உள, பரல் முரம்பு.

எனப் பெரிய புராணத்தில் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் வரலாற்றுத் தொடக்கத்தின்கண், தொண்டை நாட்டின் ஐந்திணை வளங்களும் பாடப் பெறும் பகுதியில் வரும் அழகிய இனிய பாடல் அமைந்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியதாகும்,

**மைத்துனக் கேண்மை :**

(5) இங்ஙனமே, திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றுத் தொடக்கத்தின் கண், தொண்டை நாட்டின் சிறப்பினைப் புகழ்ந்து பாடுங்கால், சேரநாடும் தொண்டை நாடும் தம்முள் 'மைத்துனக் கேண்மை' பேண நீடிய முறைமையின எனச் சேக்கிழார் மொழிகின்றார்.

ஆனை யாம்என நீறுகண்டு
அடிச்சேரன் என்னும்
சேண் உலாவுசீர்ச் சேரனார்
திருமலை நாட்டு
வாள் நிலாவுபூண் வயவர்கள்
மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது
பெருந்தொண்டை நாடு

என்பது பெரியபுராணச் செய்யுள். இங்ஙனம் சேக்கிழார் பாடியமைக்கு அடிப்

படை சிலப்பதிகாரமே ஆகலாம் எனத் தோன்றுகின்றது. சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டத்துள்,

**மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா**
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொருஅர் ஏவல் கேளார்
வளநாடு அழிக்கும் மாண்பினர் ஆதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்!

எனவரும் வரிகளால், சேரன் செங்குட்டுவனுக்கு மைத்துனன் ஆகிய சோழன் ஒருவன் இருந்தான் என்பதும்; இளவரசனாக இருந்த அம் மைத்துனச் சோழனுக்குத் தாயத்தார் சிலர் இடையூறு விளைத்து அரசை நிலைகுலையச் செய்து வந்தனர் என்பதும்; **நேரிவாயில்** என்னும் இடத்திற் போர் நிகழ்த்திச் சேரன் செங்குட்டுவன் அத்தாயத்தார்களை வென்று அடக்கித் தன் மைத்துனச் சோழனின் ஆட்சி நிலைபெறுமாறு துணை புரிந்தனன் என்பதும் அறியப்படுகின்றன. இவ்வாற்றால் சேரனுக்குச் சோழன் மைத்துனக் கேண்மையன் ஆதலும், சோழநாட்டின் ஒருபகுதியாகவே தொண்டைநாடு மிகப் பழங்காலத்தில் விளங்கிய தாதலும் கருதியே, சேரனின் மலைநாட்டு வாள்வீரர்கள் மைத்துனக் கேண்மை கொண்டாடத் திகழ்வது தொண்டைநாடு எனச் சேக்கிழார் பாடினராதல் வேண்டும்!

**பார்ப்பனவாகை :**

(6) பெரியபுராணத்துட் புகழ்ந்தோதப் பெறும் அறுபான்மும்மை நாயன்மார்களுள், **சண்டேசுர நாயனார்** ஒருவர். அவர் தோன்றியருளிய தலம் **திருச்சேய்ஞலூர்** என்பது. அங்கே மறையவர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். அவர்கள் திருநீற்றின்பால் **ஒன்றுபட்டு** உறைத்த அன்பு கொண்டவர்கள். உபநயனத்திற்கு முன்பு ஒருபிறப்பும், உபநயனத்திற்குப் பின்பு ஒருபிறப்பும் அடைதல் ஆகிய **இரண்டு** பிறப்பின் சிறப்பினைப் பெற்றவர்கள். ஆகவனீயம் தக்கிணாக்கினீயம் காருகபத்தியம் என்னும் **மூன்று** எரியினையும் வளர்த்துக் காப்பவர்கள். இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் **நான்கு** வேதங்களையும் முறையாகக் கற்றவர்கள். **ஐந்து** புலன்களுக்கு அடிமையாகி அவற்றின் பின்னே தாம் செல்லாமல், தமக்கு அவற்றை அடிமையாகக் கொண்டு தம் பின்னே அவைகள் அடங்கி நின்று தொடர்ந்து வரப்பெறும்மேன்மை வாய்ந்தவர்கள். ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் **ஆறு** தொழில்களையும் தவறுமற் புரிந்து உண்மையான ஒழுக்க நெறியில் நிற்பவர்கள். ஆதலின் **ஏழு** உலகங்களும் அம் மறையவர்களைப் புகழ்ந்து போற்றும் என்று, **எண் அலங்காரம்** என்னும் அணி நலம் அமையுமாறு சேக்கிழாரடிகள் பாடியருள்கின்றார்.

செம்மை வெண்ணீற்று ஒருமையினார்;
இரண்டு பிறப்பின் சிறப்பினார்;
மும்மைத் தழல்ஓம் பியநெறியார்;
நான்கு வேதம் முறைபயின்றார்;
தம்மை ஐந்து புலனும்பின்
செல்லும் தகையார்; அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும்
போற்றும் மறையோர் விளங்குவது!

இப்பகுதியானது, சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்துள் **கட்டுரைக்காதை** என்னும் பகுதியின்கண், **மதுராபதித்தெய்வம்** பாண்டிய வேந்தரின் பழம்பெரும் செங்கோற் பண்பினையெல்லாம் கண்ணகிக்கு எடுத்துக் கூறி விளக்கியதாக வரும் பகுதியில், **பராசரன்** என்னும் பார்ப்பனன் ஒருவனைப் பற்றிக் குறிப்பிடுகையில், மேலே சுட்டிய எண் அலங்காரமே அமையும் வண்ணம்,

ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர் பெறுமுறை வகுக்க
நாவலங் கொண்டு நண்ணார் ஓட்டிப்
பார்ப்பன வாகை சூடினன்...

என்று வரும் வரிகளை நினைப்பிக்கும் நிலையினதாக இருத்தல் காணலாம். மேலைப்

பெரியபுராணப் பாடலும், இச் சிலப்பதிகார வரிகளும் தம்முட் பெரிதொத்து விளங்குதல் நினைந்து மகிழ்தற்குரியது.

**அருமந்த அரசாட்சி :**

(7) மதுரை மாநகரிற் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என வழக்குரைத்ததும், அதனால் தன் தவறுணர்ந்து கலங்கிய பாண்டியன் நெடுஞ்செழியன் தன் உயிர் துறந்ததும் ஆகிய செய்திகளைச் சேரவேந்தன் ஆகிய செங்குட்டுவன் கேள்வியுற்று, மிகவும் மனம் வருந்துகின்றான். அதுபோது செங்குட்டுவன்,

> மழைவளம் கரப்பின் வான்பே ரச்சம்
> பிழையுயிர் எய்திற் பெரும்பே ரச்சம்
> குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
> மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
> துன்பம் அல்லது தொழுதகவு இல்லை

என அரசாட்சிப் பொறுப்பினால் ஏற்படும் அச்சம் கவலை முதலிய அலக்கண்கள் குறித்துக் கூறுவதாக வரும் பகுதி,

> மாநிலங் காவலன் ஆவான்
> மன்னுயிர் காக்கும் காலைத்
> தான் அதனுக்கு இடையூறு
> தன்னால், தன் பரிசனத்தால்,
> ஊனம்மிகு பகைத் திறத்தால்,
> கள்வரால், உயிர் தம்மால்
> ஆனபயம் ஐந்தும் தீர்த்து
> அறங்காப்பான் அல்லனோ ?
> ஒருமைந்தன் தன்குலத்துக்கு
> உள்ளான் என்பதும் உணரான்
> தருமந்தன் வழிச்செல்கை
> கடன் என்று தன்மைந்தன்
> மருமம்தன் தேராழி
> உறவூர்ந்தான் மனுவேந்தன் !
> அருமந்த அரசாட்சி
> அரிதோமற் றெளிதோதான் ?

என்னும் அரிய பெரிய புராணப் பாடல்களை நம்மனோர் நெஞ்சிற் கொணர்ந்து, நமக்கு நினைப்பூட்டி மகிழ்விக்கும் தகைமையதாய் விளங்குதல் காண்கின்றோம் அல்லமோ ?

**இசைக்கலை நுட்பங்கள் :**

இளங்கோவடிகள் இசைக்கலைப் புலமை நிரம்பியவர் என்பதும், அவர்தம் சிலப்பதிகாரம் இசைக்கலை ஆராய்ச்சிக்குரிய கருவூலமாக இன்றும் விளங்கி வருகின்றது என்பதும், தமிழுணர்வு பெற்றார் அனைவரும் நன்கறிந்த தொன்று. அருட்டிரு **விபுலானந்த அடிகளார்** அண்மையில் இயற்றி யருளிய "**யாழ் நூல்**" என்னும் அரும்பெறல் ஆராய்ச்சி நூல், இவ்வுண்மையை மலையிலக்கென விளக்கா நிற்கும். இங்ஙனமே சேக்கிழார் பெருமானும் இசைக்கலையில் நிரம்பிய புலமை கைவரப் பெற்றவர் என்பது, பெரிய புராணத்தாற் புலனாகின்றது. அவற்றுள் ஓரிடம் மட்டுமே காண்டல் ஈண்டைக்கு அமையும்.

திருவைந்தெழுத்தை உள்ளுறையாகக் கொண்டு வேய்ங்குழல் வாசித்து, **ஆனாய நாயனார்** சிவபிரானை வழிபட்ட திறத்தினைச் சேக்கிழார், தமது இசைக்கலைப் புலமை நுண்ணுணர்வு வளம் விளங்கப் பாடி யருள்கின்றார். ஆனாயர் ஏழுவிரல் இடையிட்ட இன்னிசை **வங்கியம்** (Flute) எடுத்தார். அதன் துளைகளில் அழகிய தம் இதழ்களை வைத்து, மலர்களில் வண்டுகள் மகரந்தப் பொடியினைக் கவருங்காற் செய்வது போல, **முரலுதல்-எழுதல்-நிற்றல்** என்பன செய்து ஊதினார். **முத்திரை**[1] முதலிய அனைத்து முறைத் தானங்களையும் சோதித்தார். வைத்ததுளை ஆராய்ச்சி **வக்கரனை**[2] வழி போக்கி ஏற்ற நிலையுணர்ந்தார். உணர்ந்ததற்பின் சட்சம் இடபம் காந்தாரம் மத்திமம் பஞ்சமம் தைவதம் நிஷாதம் என்னும் ஏழு சுரங்களின் படிமுறையாகிய வரிசையினை **ஆரோசை** (எச்சு,

---

[1] முத்திரை—வளைவாய்க்கு அடுத்த எட்டாம் துளை

[2] வக்கரனை—எல்லா இராகங்களும் குழலின் ஆறு துளைகளிலேயே உண்டாகும்படி விரல்களை முறையே செலுத்திச் சமன் செய்து இசை நலனைச் சோதித்தல்.

-ஆரோகணம்) **அமரோசை** (தக்கு, அவரோகணம்) என்னும் ஓசை வேறுபாடுகளில் அமைத்தார். மாறிவரும் **குறிஞ்சிப்** பண்ணின்பின் **முல்லைப்** பண்ணைத் தோற்றினர். பாலை யாழுக்கு அமைந்த **தாரம் உழை** என்னும் இரண்டும் கிழமை கொள்ள இடும் தானங்களில், **இளை**யைக் குரல் எனக் கொண்ட **பட்டடைக்** குரல் ஆகிய **கொடிப்பாலை**யில் நிறுத்தினர். பண் பண்ணியல் திறம் திறத்திறம் என்னும் இசையில் புகல் நான்கிலும், ஆயத்தம் எடுப்பு உக்கிரம் சஞ்சாரம் இடாயம் என்னும் ஐந்து துறைகளிலும் ஏற்ற முறைமைகளை விளைவித்தார். **மந்தரம்** (மெலிவு) **மத்திமம்** (சமன்), **தாரம்** (வலிவு) என்ற மூவகைச் சுருதிகளினும் சுரத்தானத்துக்கு உரியதுளைகளை உரிய அளவு பெறும்படி விரல்களால் அசைத்து இயக்கினர்.

> எண்ணிய நூற் பெருவண்ணம்
> இடைவண்ணம் வனப்பு என்னும்
>
> வண்ணஇசை வகையெல்லாம்
> மாதுரிய நாதத்தில்
>
> நண்ணிய பாணியும் இயலும்
> தூக்கும் நடைமுதற் கதியில்
>
> பண்ணமைய எழும் ஓசை
> எம்மருங்கும் பரப்பினர்.

இங்ஙனம் இசைநுணுக்கக் குறிப்புக்கள் அமைய வரும் பெரிய புராணப் பகுதிகள், இளங்கோவடிகளைப் போலவே சேக்கிழாரடிகளும் இசைக்கலைப் புலமையும் ஈடுபாடும் மிக்கவராக விளங்கிய செய்தியினைப் புலப்படுத்தும்.

### பத்தினிப்பெண் வரலாறு :

(9) சிலப்பதிகாரம் **வஞ்சினமாலை** என்னும் பகுதியிற் கண்ணகியானவள், பத்தினிப் பெண்கள் எழுவரின் வரலாறுகளைக் குறிப்பிட்டு, அத்தகைய கற்பு நலஞ் சான்ற "மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன்; பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே யாம் ஆகில், ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்; என் பட்டிமையும் காண்குறுவீர்" எனச் சூள் உரைத்து வஞ்சினம் சாற்றுகின்றாள். அவ்விடத்தில்,

> "நற்பகலே
> வன்னி மரமும் மடைப்பளியும் சான்றாக
> முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள்"

எனவரும் வரிகள், சிலப்பதிகார காலத்திற்குப் பின்னர்த் திருஞான சம்பந்தப் பெருமான் **வைப்பூர்த்தாமன்** என்னும் வணிகனின் மகள்பால் அரக்கம் கொண்டு, அரவு தீண்டி இறந்த அவள் தன் அருமைக் காதலனைத் **திருமருகல்** என்னும் தலத்தில் திருப்பதிகம் பாடி உயிர்பெற்றெழச் செய்து காத்தருளியதாகப் போதரும் பெரியபுராண வரலாற்றினை, ஒருபுடைக் கதையொப்புமை பற்றி ஓராற்றால் நினைவூட்டா நிற்கின்றன.

### அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன் :

(10) இனி, ஆசிரியர் சேக்கிழாரடிகள் தமது பெரியபுராணத்துள் திருநகரச் சிறப்பின்கண், **மனுநீதிச் சோழன்** வரலாற்றினை மனமுருகவும், சுவைநலங்கள் பெருகவும் அழகுறப் பாடியருளி இருக்கின்றார்! இவ்வாறு அவர் பாடியிருத்தற்கு அடிப்படைக் காரணமும், சான்றும் சிலப்பதிகாரமே யாகும் எனத் துணிந்து கூறலாம்.

> "புறவு நிறைபுக்கோன்,
> கறவை முறைசெய்தோன்"
>
> "எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
> புள்ளுறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்
> ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத்
> தான் தன்
> அரும்பெறற் புதல்வனை ஆழியின்
> மடித்தோன்"
>
> புறவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
> குறைவில் உடம்பரிந்த கொற்றவன் யார்
> அம்மானை?
>
> குறைவில் உடம்பரிந்த கொற்றவன்
> முன்வந்த
>
> கறவை முறைசெய்த காவலன்காண்
> அம்மானை!
>
> காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை!

எனச் சிலப்பதிகாரத்துள் ஆங்காங்கு இடையிடையே வரும் சில வரிகளின் விரிவான பொருள் விளக்கமாகவே பெரிய புராணத்துள் மனுநீதிச் சோழனின் வர

லாறு, சோணாட்டமைச்சராய சேக்கிழாராற் சிறப்புறப் பாடப் பெற்றுள்ளது. கறவை முறைசெய்த காவலன் ஆகிய மனுவேந்தனைப் பற்றிய மிகப் பழமையான குறிப்பு, சிலப்பதிகாரத்தின்கண் தான் முதன்முதற் காணப்படுகின்றது. எனவே, சேக்கிழாரடிகள் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் செஞ்சொற் சுவை நலங்களில் ஈடுபட்டு மகிழ்ந்ததன் பயனாகவே, மனுவேந்தனின் அரிய வரலாற்றினை அழகிய முறையில் தமது நூலுட் சுவை துளும்பப் பாடினார் எனத் துணிதல் பொருந்துவதேயாம்.

**மற்றும் சில மாட்சிகள் :**

இம்மட்டோ! கோவலனும் கண்ணகியும் புணர்ந்து மகிழ்ந்தனர் என்னும் செய்தியினை இடக்கர் அடக்கித் "தாரும் மாலையும் மயங்கிக் கையற்றனர்" என இளங்கோவடிகள் குறிப்பிட்டார். அவ்வாறே **திருநீலகண்டர்** பரத்தைபால் அணைந்து போந்த செய்தியினை "இளமை மீதூர இன்பத் துறையினில் **எளியரானார்**" எனச் சேக்கிழாரடிகள் நயத்தக்க நாகரிகநலம் தோன்றக் கூறியிருக்கும் மாட்சிமையினை என்னென்பேம்!

மதுரையிற் பாண்டியமன்னன் உயிர் துறந்ததனையும், அவனுக்கு நேர்ந்த பழிச் சொல்லினையும் "தென்னர் கோமான் தீத்திறம்" என்றும் "செம்மையின் இகந்த சொல்" என்றும் செங்குட்டுவன் குறிப்பிட்டதாக இளங்கோவடிகள் இயம்புகின்றார். இம் முறைமைக்கு ஏற்பவே "முனநின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்" எனவும், "தான் நினைந்த அப்பரிசே செய்தான்" எனவும் சேக்கிழாரடிகள் தெரிவிக்கின்றார். இவ்வருமைப்பாடு, எண்ணுந்தோறும் நம் மனத்தை உருக்கி இன்பம் பயக்கின்ற தன்றோ?

மேலும், பெண்மையழகின் இயல் நலங்களைப் பிற்காலக் கவிஞர்கள் பாடும் முறைகளுக்கும், இவ்விருவரும் பாடும் முறைக்குந்தான் எத்துணைப் பெருவேறுபாடு உள்ளது! தமது உயர்ந்த தவவொழுக்க மேம்பாட்டிற்கும், மிக மேலான சான்றாண்மை நலங்களுக்கும் சற்றும் மாறுபடா வகையில், தூய்மையுணர்வே சிறந்து துலங்குமாறு, இளங்கோவும் சேக்கிழாரும் புனைந்து பாடக் காண்கின்றோம்! மாதவியானவள் தன்னை அடிமுதல் முடிகாறும் அழகுபடுத்தி ஒப்பனை செய்து கொண்ட வகைகளையெல்லாம் வகுத்துக் கூறும் **கடலாடு காதைப்** பகுதியும் (75-110), திருஞான சம்பந்தரால் உயிர்பெற்ற திருமயிலைப் **பூம்பாவை** 'அழகினுக்கு அணியாய் நின்ற' தன்மைகளை விதந்து புகழ்ந்து கூறும் (1095—1109) பெரிய புராணப் பாடல்களும், இவ்வுண்மையைச் செவ்விதின் வற்புறுத்துவனவாகும்.

**முடிவுரை :**

இளங்கோவடிகளுக்கும் சேக்கிழாரடிகளுக்கும் இடையே இன்னோரன்ன பல கருத்தொப்புமைகளும், பண்பொப்புமைகளும் காணப்படுதலை, ஒப்புமையாய்வு முறையினாற் கண்டுணர்ந்து, அவ்விருவர் தம் நூல்களையும் பல்காற் பயின்றோதிச் செவ்விதிற் சுவைத்து மகிழ்ந்து, நாம் அனைவரும் தமிழ்ச் சைவ நலங்களெல்லாம் பெற்று, நன்கினிது வாழ்ந்து உய்வோமாக!

[பூவாளூர்ச் சைவ சித்தாந்த சபையின் 55 ஆம் ஆண்டு விழாவில், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன குருமகா சந்நிதானம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது (23-5-65).

—ஆசிரியர்.]

---

**வெண்பா**

இளங்கோ, நற் சேக்கிழார் என்னும் இருவர்
உளங்கோளும் ஒத்துணர்வும் ஓர்ந்து —விளங்க
இயன்றவரை கண்டோம்! இருவர்தம் நூலும்
பயின்றினிது வாழ்வோம்! பணிந்து.

—ஆசிரியர்

CONNEM... LIBRARY
1 0 JAN 1966
MADRAS



வில்லேந்திய வேலன், திருச்சாய்க்காடு, பூம்புகார்.

# உலகப்பெருங் கவிஞர்தலைவர்

**முன்னுரை :**

உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராகவும், ஒப்புயர்வு அற்றவராகவும் உணர்ந்து போற்றத் தகுந்தவர் **திருவள்ளுவர்.** திருவள்ளுவரை எல்லா நாட்டவரும், எல்லா மொழியாளரும், எல்லாச் சமயத்தவரும் பெரிதும் புகழ்ந்து போற்றத் தலைப்பட்டுள்ளனர். திருவள்ளுவரின் சிறப்பு, இற்றை ஞான்று உலகெங்கணும் உள்ள அறிஞர்களிடையே ஓரளவு பரவிப் பெருகி வருகின்றது.

இன்று உலகப் புகழ்பெற்று வாழ்ந்து வரும் **ஆல்பெர்ட் ஷுவைட்சர்** என்னும் மேலைநாட்டுப் பேரறிஞர், 'இத்துணைச் சிறந்துயர்ந்த மெய்யுணர்வு நிரம்பிய ஒரு நீதியுரைத் தொகுப்பு, உலக இலக்கியங்களில் யாண்டுமே இல்லை' (1) எனத் திருவள்ளுவர் இயற்றியருளிய திருக்குறளைச் சிறப்பித்து வியந்து மகிழ்ந்து புகழ்கின்றார் !

பேரறிஞர் திரு. **ஜி யூ. போப்** பாதிரியார் அவர்கள், 'இந்திய மக்கள் எல்லோருள்ளும் தமிழ் மக்களே சிறப்பு மிக்கவர்களாக முன்னணியில் நிற்கின்றனர். திருக்குறளும் நாலடியாரும் இங்ஙனம், விளங்குமாறு அவர்களுக்கு உதவிபுரிந்துள்ளன' (2) எனக் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார் !

(1) "There hardly exists in the literatures of the world a collection of maxims in which we find so much lofty wisdom."

—**Dr. Albert Schweitzer,**

Indian Thought and Its Development, p. 200—205.

(2) "The Tamils are the foremost among the peoples of India. The **Kural** and the Naladi have helped to make them so..."

—**The Rev. Dr. G. U. Pope,**

இங்ஙனமே பேரறிஞர்கள் பலர் திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றி வியந்து மொழிந்து, மிகவும் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

**சிவப்பிரகாசர் :**

பிற்காலத்தில் விளங்கிய பெருங்கவிஞர்களுள், துறைமங்கலம் சிவப்பிரகாசர் சிறப்பு மிக்கவர். அவர் ஏனைய எத்துணையோ பல புலவர்களைப் போலவே, திருக்குறளின்பாற் பெரிதும் ஈடுபாடு மிக்கவர். திருக்குறட் பாக்களின் கருத்துக்களைத் தமது நூல்களில் ஆங்காங்கே அழகுற அமைத்து, அவர் சுவை துளும்பப் பாடல்கள் பல பாடியுள்ளார். இங்ஙனம் திருக்குறள் நூலிற் பெரிதும் ஈடுபாடு வாய்ந்த அவர், அதன் சிறப்பினை நயமுற எடுத்து நன்கினிது விளக்குதற்குச் சிவபிரானின் சிறப்பினையே நினைவு கூர்கின்றார்

திருக்குறள் தனக்கு இணையொன்றும் இல்லாத தனிப்பெருஞ் சிறப்புடையது; சிவபிரானும் தனக்கு உவமை இல்லாத தனிப்பெரும் சிறப்பு மிக்கவர். திருக்குறள் இரண்டு அடிகளை யுடையது; இரண்டுமே இணையற்றவை; ஆனால் அவற்றுள் ஒன்று நாற்சீர்த்தாய்ச் சற்றுப் பெரிதாகவும், மற்றொன்று முச்சீர்த்தாய்ச் சற்றுச் சிறிதாகவும் இருக்கும் திருக்குறளின் இவ்வியல்பு, '**அர்த்த நாரீசுவரர்** வடிவத்தின் இணையற்ற திருவடிகள் இரண்டனுள், ஆண் பகுதியின் கால் நீண்டும் பெண்பகுதியின் கால் சிறியதாய்க் குறுகியும் இருத்தல் போன்றுள்ளது' எனச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

இங்ஙனம் சிவப்பிரகாசர் 'மகட்போக்கிய செவிலித்தாய் சுவடுகண்டு இரங்கிக் கூறல்' என்னும் துறையாக

வரும் செய்யுளில், **திருவெங்கைக் கலம்பகம்** என்னும் நூலிற் குறிப்பிட்டிருத்தல், திருவள்ளுவரின் சிறப்பினையும், திருக்குறளின் பெருமையினையும் தெளிவுற உணர்த்துவதாகும்.

**பழமையும் புதுமையும் :**

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்தவர். ஆயினும் அவர்தம் திருக்குறள் இன்றும் அழியாச் சிறப்பினதாக அமைந்து விளங்குகின்றது. காலத்தாற் பெரிதும் பழமை யுடையதெனினும், கருத்துக்களால் மிகவும் புதுமை பெற்றுத் திருக்குறள் பொலிகின்றது. இவ்வாற்ருல் 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே' என விளங்கும் சிவபெருமானைப் போலவே, திருக்குறள் திகழ்கின்றது.

ஏறத்தாழ நானூறு ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் ஷேக்ஸ்பியர், சாசர் போன்ற ஆங்கில நாட்டுப் புலவர்கள் எழுதிய அண்மைக் கால நூல்களின் மொழி நடையே பலவகைகளில் எவ்வளவோ மாறுபட்டும் வழக்கிழந்தும் சிதைந்து இருக்கக் காண்கின்ருேம். (1)

ஆனல் நம் அருமைத் திருக்குறளோ, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இயற்றப்பட்டதாயினும், இன்று இயற்றப் பெற்றது போலவே யாவருக்கும் தெளிவுறப் புரியும் வண்ணம், மாறுதல் சிறிதும் அடையாமல், எளிய இனிய நடையில், ஓரசை ஈரசைச் சொற்களாலேயே பெரிதும் இயன்று, பளிங்கென விளங்க வல்லதாகச் சுடர்விட்டு ஒளிர்கின்றது! உலகில் வேறு எந்நாட்டிலும், வேறு எம்மொழியினும், இங்ஙனம் இரண்டாயிரம் ஆண்டுகளாகியும், எத்தகைய சிறிய மொழிநடை மாறுதலையும் எய்தாமல், மக்களிடையே பெருகப் பரவி வழங்கி வரும் நூல் ஒன்றினைக் காண்டல் அரிது. இஃதொன்றுதானே, திருவள்ளுவரின் பெருமையினையும், திருக்குறளின் சிறப்பினையும் உணர்த்தப் போதிய சான்று ஆகும்.

(1) "Just compare the language of **Caedmon,** of **Langland**, of **Chaucer**, of **Shakespeare**, of **Milton,** and of **Tennyson**, one with the other, and see to what great an extent the language of one poet differs from that of another."

—Dr. Meiklejohn.

**'காழில் கனி'**

அதுமட்டுமோ! உலகப் பேரறிஞர்கள் மிகப் பழங்காலத்தில் எழுதிய எத்துணையோ கருத்துக்கள், இன்று நடைமுறைக்கு ஒவ்வாமலும், அறிவுக்குப் பொருந்தாமலும், எள்ளி நகையாடும் வகையிலும் இருக்கக் காண்கிருேம். உதாரணமாக, மேல் நாடுகளிலெல்லாம் மிகப் பெரிய **வித்**தகர் எனப் போற்றப் பெறும் **அரிஸ்டாட்டில்** என்னும் பேரறிஞர் எழுதிய நூல்களிற் காணப்படும் கருத்துக்கள் பலவற்றை 'அறிவுத்துறைக் **குப்பைகள்**' எனக் குறிப்பிட்டு, இன்று **பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்** என்னும்பேரறிஞர் அருவருத்து ஒதுக்கி எள்ளி நகையாடுவதைக் காண்கின்ருேம்[2]. அவ்வாறே ஏனைய பல பழங்காலப் பேரறிஞர்கள் பிறரின் நூல்களிலும்கூட, இந்நாளைய உலகத்துக்கு ஒவ்வாத எத்துணையோ பல பிழைபட்ட கருத்துக்கள் இடம் பெற்றிருத்தலை அறிஞர்கள் அறிவர்.

அங்ஙனமெல்லாம் இன்றி, நூற்றுக்கு நூறு விழுமிய கருத்துக்களே பொருந்தி,

[2] "**Aristotle,** in spite of his reputation, is **full of absurdities**. He says that children should be conceived in the winter, when the wind is in the North, and that if people marry too young the children will be female.

He tells us that the blood of females is blacker than that of males; that the pig is the only animal liable to measles; that an elephant suffering from insomnia should have its shoulders rubbed with salt, olive-oil, and warm-water; that women have fewer teeth than men, and so on.

Nevertheless, he is considered by the great majority of philosophers a paragon of wisdom."

— **Dr Bertrand Russel,** on 'Intellectual Rubbish.'

ஒதுக்கித் தள்ளத் தக்கது எதுவும் இன்றி, '**காழில் கனி**' எனக் கட்டுரைக் கலாம்படிக் கவின்மிகச் சிறந்து, காலம் இடம் இனம் நாடு மொழி முதலிய எல்லைகளை யெல்லாம் கடந்து, அறிவுக்கும் இயற்கைக்கும் நடை முறைக்கும் உண்மைக்கும் அணுத்துணையும் பிறழா மல், தன்னிலையிற் றிழாமலும் மாறுமலும் நிலைபேறுற்று நிகரின்றித் திகழ்கின்றது, நம் திருக்குறள்! இஃது, எண்ணு தொறும் நமக்கு மிகவும் இறும்பூது பயப்பதன்றோ?

**திட்பநுட்பம்:**

ஓவியப் புலவன் தூரிகை கொண்டு பல்வேறு காட்சிகளைத் தீட்டிக் காட்டு கின்ருன். அதுபோலவே காவியப் புல வன் தன் கற்பனைத் திறனால், பலவேறு உணர்ச்சி நிலைகளைச் செவ்விதின் வெளிப் படுத்தி விளக்குகின்ருன். ஓவியப் புலவ னுக்குப் பலதிற வண்ணங்களும் கோடு களும் பயன்படுமாறு போன்று, காவியப் புலவனுக்குச் சொற்களும் இலக்கண முறைகளும் உதவி புரிகின்றன. உலகப் பெருங்கவிஞர்களின் தலைவர் ஆகிய திரு வள்ளுவர், தம்முடைய திருக்குறளின் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் அசை யும் கூட மிகவும் பொருள் பொதிந்து விளங்கும் வண்ணம் அழகுற அமைத் திருக்கின்ருர்!

திருக்குறளில் ஒரு சிறு சொல் கூட வறிதாகப் பொருளின்றி அமைக்கப் பட வில்லை. ஒவ்வொரு சிறு அசை கூடப் பொருள் சிறந்து பொலிந்து நிற்கின் றது. திருவள்ளுவர் தம் கருத்துக் களையும், அகவுணர்ச்சிகளையும், அறி வுரைகளையும் எத்துணையோ பலப்பல நுட்ப முறைகளைக் கடைப்பிடித்துத் திட்பமுற உணர்த்துகின்ருர். நவில் தொறும் நயம் பயக்கும் நலமிக்க தாகத் திருக்குறள் திகழ்கின்றது. தொட்டனைத் தூறும் மணற்கேணி போல, ஆராய ஆராய அதன் கருத்துக் கள் ஆழ்ந்து விரிவடைந்து கொண்டு செல்கின்றன. அறிதோறு அறியாமை கண்டற்றல் என்றதற்கு ஏற்ப, நாம் திருக்குறளை ஆராய்ந்து அறியுந்தோறும் நம்முடைய அறியாமையே புலப்படுகின் றது. திருக்குறளின் கருத்துவளம் சிந் தனைக்குப் பெருவிருந்தாகும். திருவள் ளுவர் தம் நுண்மாண் நுழை புலனல் ஒவ்வொரு சிறு சொல்லும் அசையும் கூடச் சிறந்த பல நுட்பக் குறிப்புகளை உட்கொண்டு ஒளிரும் வண்ணம் தம் முடைய நூலை இயற்றியருளியிருக்கின் ருர். அதனை விளக்கும் ஒரு சில உதார ணங்களை மட்டும் ஈண்டுக் காண்போம்.

**'நற்ருள் தொழாஅர்':**

(1) 'கற்றதனல் ஆயபயன் கடவுளைத் தொழுதல்', என்பதே தாம் கூற விழை யும் கருத்தாயினும், திருவள்ளுவர் அங் ஙனம் அதனை நேரே கூறி முடித்து விடாமல், 'கற்றதனல் ஆய பயன் என் கொல்?' என வினவி நம்மையே சிந்திக்க வைக்கின்ருர், 'கல்வியின் பயன்' என்னு மல் 'கற்றதனல் ஆய பயன்' என்றத னல் கலை கலைக்காகவே என்பாரையும், பொருளீட்டல் தொழிலியற்றல் போன்ற செயல்களே பயனென்பாரையும் மறுத்து, இவற்றுக்கெல்லாம் வேருன முடிந்த முடி வான மிகமேலான பயன் ஒன்று உண்டு என்று சுட்டினர். இறைவனை வாலறி வன் என்றும், அவனது திருவடிகளை நற்ருள் என்றும் சுட்டிப் பயன் வகை களைப் பண்புற விளக்கியருளினர். இறை வனைத் தொழுதல் ஓராண்டிற்கோ ஒரு திங்களுக்கோ ஒரு முறையே அமையும் போலும் என நாம் எண்ணுமல், இறை வனை நாம் இடையருது எப்பொழுதும் தொழுதல் வேண்டும் என்னும் குறிப் பினைத் 'தொழாஅர்' என்னும் அள பெடையின் குறிப்பினுற் புலப்படுத்தினர். இங்கே அளபெடை இசை நிறைப்பதற்கு மட்டுமேயன்றி, இடைவிடாமை ஆகிய குறிப்புப் பொருளையும் உணர்த்தி வந்தது.

**'மலர்மிசை ஏகினன்':**

(2) இறைவன் அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சென்று அருள் புரியும் இயல்பினன் என்பதனைக்கூற முற் படும் திருவள்ளுவர், அங்ஙனம் இறைவன்

அருள்புரிவது அன்பர்கள் நினைந்து வழிபட்டு நெடுங்காலம் கழித்த பின்னரன்றி நினைத்த அப்பொழுதேயாகும் என்னும் விரைவுக் குறிப்பை, **'ஏகுவான்' 'ஏகுகின்றான்'** என்னும் சொற்களாற் கூறாமல், **ஏகினான்** என்னும் இறந்தகால வழுவமைதிச் சொல்லால் விளக்கியருளியுள்ள திறம் வியக்கற்பாலது.

**'தினைத்துணையும் தேறான்'**

(3) பிறர்மனை விழைதலின் தீங்கினையுணர்த்தத் தலைப்படும் திருவள்ளுவர், 'எனைத்துணையர் ஆயினும் என்னாம்?' என முதற்கண் மிகவும் உயர்த்திப் பலர்பாலாற்கூறி, அத்தீங்கு செய்வாரைப் பின்னர் 'தினைத்துணையும் தேறான் பிறனில் புகல்' என ஒருமைப்பாலில் வைத்து இழிவுபடுத்தி அவர்கள் மாட்டுத் தமக்குள்ள அருவருப்புணர்ச்சியினையும் சினத்தினையும் அறிவிக்கின்றார். 'பன்மை ஒருமை மயக்கம்' என்னும் இலக்கணக் குற்றமும் ஓர் இலக்கியச் சிறப்பாக அமையும் வண்ணம் அழகுபடக் கையாண்டுள்ள திருவள்ளுவரின் திறம் பெரிதும் போற்றற் பாலது.

**'போஒம் அளவும்ஓர் நோய்':**

(4) பிறர் சொல்லியும் கேளாமல், தாமும் சிந்தித்து உணராமல், தம் மனம் சென்றவாறு நடக்கும் புல்லறிவாளர்களின் புன்மையையும், அவர்கள்பால் தமக்குள்ள வெறுப்பினையும் சீற்றத்தினையும் ஆசிரியர் திருவள்ளுவர், 'ஏவவும் செய்கலான் தான் தேறான்' என முதற்கண் னகர ஒற்றீற்றுச் சொல்லாற் குறிப்பிட்டு, பின்னர் அதற்கேற்ப **'அம்மனிதன்'** என உயர்திணை ஆண்பாலாற் குறியாது **'அவ்வுயிர்'** என அஃறிணையாகச் சுட்டுதலாலும்; அவ்வளவில் அமையாது **நோய்** என உருவகம் செய்தலாலும்; நோய் போலச் சமுதாயத்தைப் பற்றிப் பீழிக்கும் அப்புல்லறிவாளர்கள் **'வாழும்** அளவும்' எனற்பாலதனைப் **'போம்** அளவும்' என்று மாற்றியுரைத்தலாலும்; நல்லவர்களெல்லாரும் மிக விரைவில் மறைந்துவிட இத்தகைய புல்லறிவாளர்கள் நெடுங்காலம் உலகில் உழன்று கொண்டிருக்கும் கொடுமையினைப் **'போஒம்** அளவும்' என்னும் அளபெடைக் குறியாற் புலப்படுத்துதலாலும், உணர்த்துகின்றார்.

**'நன்னயம் செய்து விடல்'**

(5) திருக்குறளின் கருத்துத் திட்பநுட்பத்திற்கு இன்னும் ஒரு சிறு சான்று அமையும் "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்" என்னும் திருக்குறளை யாவரும் அறிவர். இத் திருக்குறளின் அறிவுரை மிகச் சிறந்த ஓர் அறிவுரையாகும். "பிதாவே! இவர்களை மன்னியும். இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் இருக்கின்றார்கள்" என்று பரிந்து கூறியருளிய **இயேசுநாதர்** திருமொழியோடு நினைவு கூர்ந்து கருதின், இத் திருக்குறட் கருத்தின் அருமை பெருமைகள் விளங்கும்.

> தன்னரிய திருமேனி
> சதைப்புண்டு தவிப்பெய்திப்
>
> பன்னரிய பெரும்பாடு
> படும்போதும், "பரிந்தெந்தாய்
>
> இன்னதென அறியகிலார்
> தாம்செய்வது; இவர்பிழையை
>
> மன்னியும்!" என்று எழிற்கனிவாய்
> மலர்ந்தார் நம் அருள்வள்ளல்!

எனவரும் **இரட்சணிய யாத்திரிகச்** செய்யுள், ஈண்டு நாம் எண்ணி மகிழ்தற்குரியது. இத் திருக்குறள் (314) ஒன்றின் மட்டுமேயன்றி,

> இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்,
> என்ன பயத்ததோ சால்பு? (987)
>
> அறிவினுள் எல்லாம் தலைஎன்ப; தீய
> செறுவார்க்கும் செய்யா விடல். (203)
>
> திறனல்ல தற்பிறர் செய்யினும், நோநொந்து
> அறனல்ல செய்யாமை நன்று (157)
>
> மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
> தகுதியான் வென்று விடல். (158)

எனவரும் பிற திருக்குறள்களிலும், இவ் வுயரிய கருத்தினையே திருவள்ளுவர் செவ்வி தின் வற்புறுத்தி விளக்கி யிருத்தல் காணலாம் !

**உரை நயம் :**

இனி, நாம் மேலே குறித்த 'இன்னு செய்தாரை' (314) என்னும் திருக் குறளில், நாம் கருதத் தக்கதொன்றுண்டு அக்குறட்பாவுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் பலரும், 'நன்னயம் **செய்து விடல்**' என்னும் தொடருக்கு 'நல்ல நய முடையவற்றைச் **செய்து விடுக**' என்றே பொருள் வரைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் இதனை ஒரு சொல் நீர்மைத்தாகவே கொண்டுவிட்டனர். ஆனால் ஆசிரியர் **பரிமேலழகர்,** இதனைச் '**செய்து + விடல்**' என இரு சொற் களாகக் கொண்டார். ஏனையோ ரெல் லாரும் '**விடல்**' என்பதனை ஒரு துணை வினைச் சொல் (Auxilary verb) என்றே கொண்டு அமைந்தனர். ஆனல் பரிமே லழகரோ, இதனையே மிகவும் பொருள் பொதிந்த ஒரு முதல் வினைச் சொல் (Principal verb) எனக்கொண்டு, அதன் வாயிலாக அரிய சிறந்த ஆழ்ந்த பொருள் விளக்கம் ஒன்றைச் செய்தருள்கின்ருர் !

> " தமக்கு இன்னுதவற்றைச் செய்தாரை ஒறுத்தலாவது, அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து, **அவ் விரண்டனையும்** அஃதாவது, நமக்கு அவர் தீங்கு செய்தார் என்பதும், நாம் அவர்க்கு நன்மையே செய்தோம் என்பதும் ஆகிய இரு வகை நினைவுகளையும்) **மறந்து விடுதல்.** மறவாவழிப் பின்னும் மேன்மேற் பகைமை வந்து கிளைக்குமாகலின், மறக்கற்பால வாயின. இதனல் அவரை 'வெல்லும் உபாயம் கூறியவாறு."

எனப் பரிமேலழகர் வகுத்துள்ள உரை விளக்கம் எத்துணைச் சிறந்ததாகத் திகழ் கின்றது ! '**விடல்**' என்னும் ஒரு சிறு சொல், எவ்வளவு சிறந்துயர்ந்த பொரு ளைத் தன்கண் பொதிந்து கொண்டுள் ளது. காண்மின்கள் !



**' நன்னயம் '**

மேலைத் திருக்குறளிற் பரிமேலழகர் '**விடல்**' என்னும் சொல்லின் பொருள் நுட்பத்தினை அழகுற விளக்கியருளினர். ஆயினும், '**நன்னயம்**' என்பதற்கு 'இனிய உவகை' என்ற அளவில் மட்டுமே பொருள் குறித்துச் சென்ருர். அவ் 'இனிய உவகை' எஃது? எத்தனை வகைத்து? என்பன போன்றவற்றை அவர் விளக்கிற்றிலர்.

**பிள்ளை லோகாசாரியார்** என்னும் வைஷ்ணவப் பெரியார் ஒருவர் **ஸ்ரீ வசந பூஷணம்** என்னும் சிறந்ததொரு நூலை அருளிச் செய்துள்ளார், அதனை,

> முன்னம் குரவோர் மொழிந்த வசனங்கள்
> தன்னைமிகக் கொண்டுகற்ருேர் தம்முயிர்க்கு
> —மின்னணியாச்
>
> சேரச் சமைத்தவரே சீர்வசன பூடணம்என்
> பேர்இக் கலைக்கிட்டார் பின்.
>
> ஆர்வசன பூடணத்தின்
> ஆழ்பொருள்எல் லாம்அறிவார் ?
>
> ஆர்அதுபோல் ஓர்சொல்
> அநுட்டிப்பார் ?

என்று **மணவாள மாமுனிகள்**, தாம் இயற்றி யருளிய **உபதேசரத்தினமாலை** என்னும் நூலில், உளமுவந்து புகழ்ந்து போற்றி யிருக்கின்ருர்.

இத்தகைய சிறப்பு மிக்க **ஸ்ரீ வசந பூஷணம்** என்னும் நூலிற் காணப்படும் பினவரும் அழகிய வாக்கியம், மேலே நாம் குறித்த 'நன்னயம்' என்னும் சொற்பொருள் நலத்தினை யுணர்த்தும் அற்புதம் மிக்கதாக அமைந்து விளங்கு கின்றது. நமக்கு இன்ன செய்தவர்கள் இடத்தில், நம் உள்ளமானது பொறுமை, இரக்கம், சிரிப்பு, உவப்பு, நன்றி பாராட்டல் என்னும் ஐந்து வகையான உணர்ச்சிகளை யுடையதாக இருத்தல் வேண்டும் என 'ஸ்ரீ வசந பூஷணம்' நம் மைத் தெருட்டுகின்றது.

(1) நமக்குத் தீங்கு செய்தவர்களுக்கு எதிராக நாம் தீங்கு செய்யாமையும், அவர் செய்த தீங்கினை நாம் நினையாமையும், ஆகிய **பொறுமை.**

(2) நமக்குத் தீங்கு விளைவித்த இவனை நாம் மன்னித்துப் பொறுத்தாலும், இறைவன் இவனுக்குத் தண்டனையைப் பின்னர்த் தவறாமல் அளிப்பானே என்று நினைந்து அவன்பாற் கொள்ளும் பரிவு ஆகிய **இரக்கம்.**

தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றி, மற்
றெம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்,— உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்!

—நாலடியார்.

(3) எல்லாம் இறைவன் செயலேயாக நாம் நினைத்திருக்கும்போது, தாம் ஏதோ நமக்குக் கேடு விளைப்பதாகப் பிறழ உணர்ந்து கொண்டு, 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்' என்பதனை யுணராமல், தமக்குத் தாமே இவர்கள் கேடு செய்து கொள்ளுகின்றனரே! என்னே இவர்களின் அறியாமை! என்று எண்ணி, உளம் நெகிழ்தலால் உண்டாகும் **சிரிப்பு.**

(4) ஒருவன் மற்றொருவனுக்குச் செய்யும் கேடுகள், அழிவில் பொருள் ஆகிய உயிரை ஒன்றும் செய்யமாட்டாமையினால், உடலுக்கு மட்டுமே ஊறு பயப்பதாதல் கூடும். நாமோ 'பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை' என்றபடி, இறைவனை அடைதற்கு இவ்வுடம்பு தடையாக உளதே என்று எண்ணி, உடம்பைப் பகையாகக் கருதியிருக்கின்றோம். இங்ஙனம் நமக்குப் பகையாகிய உடம்பிற்குக் கேடு விளைக்க முற்படுவோர், நாம் இறைவனை விரைவில் அடைதற்குத் துணைபுரிபவர்களாய், நமக்கு ஒருவகையில் நண்பர்களேயாவர் அன்றோ? எனக் கருதி உள்ளத்துள்ளே மகிழும் **உவப்பு.**

(5) ஒருமனிதன் 'ஏதிலார் குற்றம் போல் தன் குற்றங்களையும் கண்டுணர்ந்து கொள்ள வல்லவனாதல் வேண்டும்; நாம் அது செய்யாமல் மயங்கி மறந்து கிடக்கின்றோம்; இவர்கள் நம்மைப் புறங் கூறிப் பழித்துத் திரிவதனால், நம்முடைய குற்றங்களை நாம் உணர்ந்து கொண்டு திருந்தி உய்யும் வண்ணம் உதவி புரியப் பாடுபடுகின்

---

The man that hath no music in himself,
Nor is not mov'd with concord of sweet sounds,
Is fit for treasons, strategems, and spoils;
The motions of his spirit are dull as night,
And his affections dark as Erebus.
Let no such man be trusted.

—*Shakespeare.*

றனர் அல்லரோ? என நினைந்து மகிழ்ந்து, அவர்களின் செயல்களை யெல்லாம் ஒரு பெருப்உதவி என்றே கொண்டு அன்பு செய்தல் ஆகிய நன்றி **யுணர்வு.**

ஆகிய இவ்வைந்து செயல்களையும் ஸ்ரீ வசன பூஷணம் அழகுறக் குறிப்பிடுகின்றது.

> "குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும், கிருபையும், சிரிப்பும், உகப்பும், உபகார ஸ்மிருதியும் நடக்கவேணும்."

இவ்வைந்தும் '**நன்னயம்**' எனத் திருவள்ளுவர் தாம் திருக்குறளிற் குறிப்பிட்டருளிய சொல்லுக்குரிய விரிவுரை விளக்கப் பொருளாக விளங்குதல் காணலாம்!

**முடிவுரை :**

இங்ஙனம் 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி' போல, ஆராயுந்தொறும் பொருள் வளர்ந்து செல்லும் தன்மை, திருக்குறளின் தனிப்பெருமாட்சிமை ஆகும்.

இத்தகைய சிறந்த நூலை இயற்றி நமக்கு அளித்துச் சென்ற திருவள்ளுவர்க்கு நாம் செய்யும் நன்றியும் வழிபாடும், அவர்தம் திருக்குறள் நூலினைக் கசடறக் கற்றலும், அதன்வழி நிற்றலுமே யாகும். "தேவர்கள் கடன் வேள்வியானும், **முனிவர்கள் கடன் கேள்வியானும்**, தென்புலத்தார் கடன் புத்திரப் பேற்றானும் இறுக்கப்படும்" எனப் பரிமேலழகர் குறிப்பிடுதல் ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

> "ஞான நூல் தனைஓதல் ஓதுவித்தல்
> நற்பொருளைக் கேட்பித்தல் தான்
> கேட்டல் நன்றா
> ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
> இறைவனடி அடைவிக்கும்
> எழில் ஞான பூசை"

எனச் சிவ ஞான சித்தியார் கூறுதற்கு இயையத் திருக்குறளை நாம் ஓதுதலும், பிறரை ஓதுவித்தலும், அதன் நற்பொருளை அறிஞர்கள் வாயிலாக நாம் கேட்டுணர்தலும், பிறரைக் கேட்பித்து உணர்த்துதலும், அதன் பொருள் நலங்களை இடைவிடாமற் சிந்தித்துச் சிந்தித்துத் தெளிந்து கொள்ளுதலுமே திருவள்ளுவர்க்கு நாம் இயற்றும் சிறந்த வழிபாடாகும்.

[திருவள்ளுவர் வைகாசி அநுஷப்பெருவிழாவில், சென்னை அரசினர் மாளிகைப் பாலர் அரங்கில், டாக்டர் திரு. மு. வரதராசனர் M.A., M.O.L., Ph D. அவர்கள் தலைமையில், நிகழ்த்திய சொற்பொழிவு (11—6—65).

—ஆசிரியர்.]

---

> இனியநல் இசையைக் கேட்டும் இளகிடா திருப்பான் நெஞ்சம்,
> துனிதரு நரகம் போலச் சூழ்ந்திருள் படர்ந்து நிற்கும்;
> முனிதகு வஞ்சம் சூழ்ச்சி முதற்பல தீங்கே செய்வான்;
> நனிமிகக் கொடியன்; அந்தோ! அவனைநாம் நம்பொணாதே!

—ஆசிரியர் மொழிபெயர்ப்பு.

# சமயக் கொள்கை வகைகள்

**முன்னுரை :**

'மதம்' என்னும் சொல் 'கொள்கை' என்னும் பொருளை யுடையது. மதி - அறிவு. அறிவினல் ஆராய்ந்து, மதித்து உணரப்பெற்ற உண்மை அல்லது கொள்கை 'மதம்' என வழங்கப் பெற்றது. பின்னர் நாளடைவில் பல கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டு அமைந்த சமயங்களும் 'மதங்கள்' என வழங்கப்படலாயின. கொள்கைகளின் அடிப்படையில் ஏற்பட்டு அமைந்த வாழ்க்கை நெறிமுறைகளே சமயங்கள் என வழங்கப் பெறுகின்றன. இந்நாளில் 'மதம்' 'சமயம்' என்னும் இருசொற்களும், ஒரு பொருட் சொற்களாகவே கொண்டு பயன்படுத்தப் பெறுகின்றன.

மக்கள் தாம் தோன்றிய காலம் முதலே, தம் அறிவினல் தம்மையும். தாம் வாழும் உலகையும், உலகைப் படைத்த கடவுளையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். அங்ஙனம் தம்முடைய அறிவு அநுபவம் மனநிலை சூழ்நிலை ஆகியவைகளுக்கு ஏற்ற பெற்றி ஆராய்ந்து சிந்தித்துச் சிந்தித்துப் படிப்படியே பல உண்மைகளை உணர்ந்தனர்: பலப்பல கொள்கைகளை வகுத்தனர். "As many heads, so many minds" என்பதற்கு இயைய, ஒவ்வொருவரும் தத்தம் அறிவு ஆராய்ச்சி அநுபவச் சூழ்நிலைகளை ஒட்டி ஆராய்ந்ததனல், அவரவர்கள் கண்ட உண்மைகளும் கொள்கைகளும் முடிபுகளும் பலப்பல திறத்தனவாயின. அதனற் பலப்பல கொள்கைத் திறங்களும், மதப் பாகுபாடுகளும் நாளடைவில் தோன்றின. அவற்றைப் பின்பற்றும் மக்கட் டொகுதியினரும் தனித்தனியே பெருகலாயினர். இந்நாளிற் பிற துறைகளிற் பல்வேறு தனித்தனிக் கொள்கை வகைகள பரவிப் பெருகி வருதல் போலவே, முன்னளிற் சமய தத்துவ நூல்களிற் பல கொள்கை வகைப் பாகுபாடுகள் காணப்படுகின்றன.

மக்களின் சிந்தனை வளர்ச்சியில், இப்பாகுபாடுகள் எல்லைக் கற்கள் போல விளங்குவன ஆகும். இவைகள் கருத்து விளக்கத்தின் பொருட்டே செய்யப்பட்டனவன்றி, மக்களைப் பிரித்து வைப்பதற்காக வகுக்கப்பட்டன அல்ல* ஆதலின் இக்கொள்கை வகைப் பாகுபாடுகளை யுணர்ந்து கொள்ளுவது, நம்முடைய சமய-தத்துவ நூற்பயிற்சி ஆராய்ச்சிகளுக்கு மிகவும் பயன்படும். ஆதலின் பின்வரும் சமயக் கொள்கைவகை விளக்கங்கள், திருவாய்மொழி ஈட்டுரையினின்று எடுத்து, ஈண்டுத் தரப்பெறுகின்றன.

—ஆசிரியர்.

---

* "The distinction, if any, is a relative one, as all empirical distinctions are. If then there is appearance of dogmatism in what shall I say; **it is due simply to the convenience of exposition**. For while dogmatists and narrow nationalists distinguish in order to divide, **a seeker after truth divides only to distinguish**.

**Dr. S. RADHAKRISHNAN,**
East and West in Religion, P 46.

---

Religion ! What a treasure untold
Resides in that heavenly world ;
More precious than silver and gold,
Or all that this world can afford.

*—William Cowper.*

(1) **உலோகாயதிகர்,** உலகமேயுண்டு கடவுளில்லை என்பர். ஆகாயம் நீங்கலாக வுள்ள மண்முதலான பூதங்கள் நான்கனுடைய கூட்டரவிலே அறிவு என்னும் ஒரு தர்மம் பிறக்கும்; அதற்குண்டான இன்ப துன்பங்களே சுவர்க்க நரகங்கள்; அவற்றினுடைய பிரிவிலே அறிவு அழியும்; அவ் வருகு ஒன்றுமில்லை என்பர்.

(2) **ஆருகதர்** என்போர் அருகனை வழிபடும் சமணர்கள். அவர்கள் உலகமானது காரிய ரூபத்தாலே நித்திய அநித்யமும், பிந்ந அபிந்நமும், சத்திய அசத்தியமுமாயிருக்கும்; ஆன்மாக்கள் கர்மங்கட்குத் தகுதியாக எடுக்கின்ற சரீரங்களுடைய அளவையே தமக்கு அளவாகக் கொண்டிருக்கும்; பிறப்பு இறப்புக்கள் அநாதி; மல தாரணை முதலியவைகளாலும், ஆன்ம அறிவினாலும் உலகத் தொடர்பினின்றும் விடுபட்டு மேல்நோக்கிச்சேர்தல் மோட்சம் என்பர்.

(3) **வைபாடிகர்** பௌத்தமதத்தில் ஒரு சாராரான இவர்கள் உலகமானது பரமாணுக்களின் உண்டாயதாய், காட்சியளவையால் அறியக்கூடியதாக இருக்கும்; அதன்வழித் தோன்றிய அறிவும் கணநேரமே இருக்குந் தகையது; வேறோர் ஆன்மா இன்று; பொருள்கள் நிலைத்திருப்பவை என்று நினைக்கும் அறிவே பிறப்பு இறப்புகட்குக் காரணம்; கணந்தோறும் அழியக்கூடியவை என்று நினைக்கும் அறிவே மோட்சம் என்பர்.

(4) **சௌந்திராந்திகர்** புத்த மதத்தின் மற்றொரு சாராரான இவர்களின் கொள்கைகளும் மேற்கூறியனவேயாயினும், அநுமானத்தால் பெறப்படுவது உலகம் என்பர். அதுவே அவர்களுடைய சிறப்பியல்பு.

(5) **யோகாசாரர்,** அறிகின்றவனும் அறியப்படும் பொருள்களும் மயக்குணர்வு; ஞானமே உள்ளது; அந்த ஞானமும் கணநேரமே இருக்கக்கூடியது என்றிருக்கை மோக்ஷம் என்பர்.

(6) **மாத்யமிகர்,** அளவையும் அளவையால் அறியப்படும் பொருள்களும் அறிகின்றவனும் உண்டு என்று அறிதல் மயக்குணர்வு; சூந்யத்தாலே சூந்யம் என்று அறிதல் மோக்ஷம் என்பர்.

(7-8) **நையாயிகர், வைசேடிகர்**-உலகிற்கு முதற்காரணம் பரமாணுக்கள்; அநுமானத்தால் அறியப்படும் இறைவன் நிமித்த காரணம்; பிறப்பு இறப்புக்கள் அநாதி; இறைவனை வணங்கும் வணக்கத்தால் இன்ப துன்ப ஞானம் அழிதல் மோக்ஷம் என்பர்.

(9) **பாசுபதர்,** உலகிற்கு முதற்காரணம் பரமாணுக்கள்; சிவ ஆகமங்களிற் கூறப்படுகின்ற சிவபெருமான் நிமித்த காரணன; பிறப்பு இறப்புக்கள் அநாதி; ஆகமங்களிற் கூறப்படுகின்ற கர்மங்களைச் செய்து கொண்டு வருவதால் சிவபெருமானுடைய சாருப்யத்தைப் பெறுதல் மோக்ஷம் என்பர்.

(10-11) **சாங்கியர், யோகியர்**-மூலப்பகுதியானது வேறொன்றன் உதவியின்றித் தானாகவே உலகிற்குக் காரணமாகின்றது; அந்த மூலப்பகுதியோடு ஆன்மாவிற்கு உண்டான அநாதி சம்பந்தமே பிறப்பு இறப்புகட்குக் காரணம்; அம்மூலப்பகுதி வேறு, புருஷன் வேறு என்று அறிதலே மோட்சம் என்பர்.

(12-13) **பாட்டர், பிரபாகரர்**-உயிர்கள் என்றும் உள்ளவைகளாய், எண்ணிறந்தனவாய், எங்கும் நிறைந்தனவாய், அநாதி கர்மத்தாலே பிறந்து இறந்து

—தொடர்ச்சி 478-ம் பக்கம் பார்க்க

இலகுறு **சமயம்** என்னும் எழிலியல் இறைமைச் சொல்லில்
நிலைபெறு நிதிய வைப்பின் நிறைவெலாம் நிகழ்த்தற் காமோ?
உலைவில்பொன் வெள்ளி மற்றும் உலகிலுள் பொருள்கள் எல்லாம்,
விலைமதித் திடற்கீ டாகா, வியன்பெரும் மாட்சித் தாமே!

—ஆசிரியர் மொழிபெயர்ப்பு.

# சமயப் பொருட் குறிப்புக்கள்

**முன்னுரை :**

[சமய நம்பிக்கையும், சமய அறிவும் வெவ்வேறானவை. உலகிற் சமய நம்பிக்கை யுடையோர் மிகுதியாகவும், சமய அறிவு பெற்றோர் குறைவாகவுமே காணப்படுகின்றனர். சமயத் துறையில் நம்பிக்கையே (Faith) மிகவும் முதன்மையானது. ' நம்பியே கைதொழுவேன் நான் ' என்பது ஒரு பழம்பாடல்! " கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் " எனத் தாயுமானவர் பாடுவது போல, கல்வியறிவில்லாத பாமர மக்களுக்கே கடவுளின்பால் அழுந்திய நம்பிக்கையும் பக்தியும் இருக்கக் காண்கின்றோம். கல்வியறிவுடையவர்களிற் சிலர்க்கு அத்தகைய உள்ளார்ந்த உணர்வு பெரிதும் இருப்பதில்லை. நம்பிக்கையில்லாத அறிவு பயன்படாது; அறிவு இல்லாத நம்பிக்கை உறுதிப்படாது. அறிவும் நம்பிக்கையும் ஆகிய இரண்டும் ஒருசேர அமைவதே சிறப்புடையது.

சமயம் என்பது ஆழ்ந்து அகன்று நுண்ணியதாக விளங்கும் தகையது (A serious subject). அதன்கண் ஈடுபட விழைவோர் வேடிக்கை - விநோதம் - கேளிக்கை ஆகியவற்றை எதிர்பார்த்தல் அமையாது. இந்நாளில் மிகப் பெரும்பாலான மக்கள் பொழுது போக்கின்பம் (Entertainment) குறித்தே, நூல்களையோ இதழ்களையோ புரட்டிப் பார்க்க விரும்புகின்றனர். அறிவு விளக்கம் (Enlightenment) பெற விழைந்து, நுண்பொருள் நூல்களை நுனித்து ஆழ்ந்து கற்க முயலுபவர் சிலரே எனலாம்!

சமய நூல்களைச் செய்தித் தாள்களைப் போலவோ, புதினங்களைப் போலவோ படித்தல் இயலாது. சமயவுணர்வு என்பது ஒருவகை உள்ளத்துடிப்பு (Inner urge). சமய நூல்களைப் பயிலவும், கருத்துக்களை உணர்ந்து மகிழவும், இயல்பாகவே ஒருவகை ஆர்வமும் பண்பாடும் (Interest and aptitude) அமைதல் வேண்டும். அறிவுத் துறையிற் குறுக்கு வழிகள் இல்லை. மிகவும் பாடுபட்டு உழைத்தே அறிவை அடைதல் கூடும்.

---

477-ம் பக்கம் தொடர்ச்சி

வருகின்றன; இவ்வுலகம் நீர்ப்பெருக்குப் போன்று என்றும் உள்ளது; கர்ம அபூர்வமே ஆன்மாவை அடைதலாகிய மோக்ஷத்திற்குக் காரணம்; இறைவன் என்று ஒருவன் தனியே இலன் என்பர்.

*(14)* **மாயாவாதி,** ஜீவபிரமபேதம், அசித்து பிரமபேதம், பிரமத்துக்கும் ஞானம் சக்தி முதலான குணங்களுக்கும் உள்ள பேதம் ஆகிய இம்மூன்று பேதமும் இல்லாததாய், சுயம்பிரகாசமாய் இருக்கிற பரம்பொருள் மாயையின் கலப்பினால், மயங்குதல் உலக நடப்பு; "அது நீ ஆகின்றாய்" (தத்வமஸி) முதலான வாக்கியங்களால், உண்டாகின்ற ஞானத்தாலே அம் மயக்கம் போதல் மோக்ஷம் என்பர்.

*(15)* **பாஸ்கரீயர்,** அந்தப் பரம்பொருள்தானே சத்ய உபாதி கலந்ததாய்க்கொண்டு மயங்குதல் சம்சாரம்; வர்ணாஸ்ரம தர்மங்களோடு கூடினதாய், "நீ அந்தப் பிரமம் ஆகிறாய்" என்பது முதலான வாக்கியங்களால் உண்டாகின்ற ஞானத்தை முன்னிட்டுக் கொண்டுள்ள உபாசந உருவமாயுள்ள ஞானத்தாலே உபாதி அழிதல் மோக்ஷம் என்பர்.

*(16)* **யாதவப் பிரகாசர்,** அப் பரம்பொருள்தானே சத்தியமான சித்து அசித்து ஈஸ்வர உருவமாய்க் கொண்டு மயங்குகிறது; அப் பரம்பொருளுக்கு உண்டான பேதஞானமே உலகத்தின் நடப்பு; ஞான கர்மங்களின் சேர்க்கையினாலே அவ்வேற்றுமை உணர்வு நீங்குதலே மோக்ஷம் என்பர்.

*(17)* **ஏகாயநர்,** திருமகளோடு கூடிய நாராயணனைப் பற்றும் ஸ்ரீ வைஷ்ணவர்களைப் போலாமல், திருமகளை விடுத்து நாராயணனை மட்டுமே பற்றுபவர்கள் ஆகிய **மாத்வ மதத்தினர்,** ஏகாயநர் (ஓரிடத்தையே பற்றியவர்கள்) எனப்படுவர். இவர்கள் இறைவன் நம்மினும் சில பல சக்தி விசேடங்களை யுடையவன் என்று கொள்வர். பரம்பொருள் உலகிற்குக் காரணம் என்று கூறும் வைதிக மதத்திற் காட்டிலும், பிராட்டியினுடைய சம்பந்தத்தை உடன்படாமை ஆகிய கொள்கை ஒன்றே இவர்களின் தனியியல்பு.

*

சமய நூல்களில் எளிமை வேண்டும் என வாளா எதிர்பார்த்துப் பயனில்லை. பொருளின் இயல்புக்கு ஏற்பவே நடையும் இயல்பாக அமைகின்றது. உயர்ந்த பொருள் உயர்ந்த நடையிலேயே அமைவது இயற்கை. "நீங்கள் எங்கள் நிலைக்கு உயர்ந்து மேலே வராவிட்டால், நாங்கள் உங்களுக்காக வளைந்து குனிந்து கீழே வர முடியாது" ("If you cannot rise upto us, we cannot stoop to you") என ஜான்ரஸ்கின், Sesame and Lilies என்னும் நூலிற் குறிப்பிடுவது சிந்தித்து உணர்தற்குரியது. ஆர்வமும் ஈடுபாடும் இருந்தால், யாவும் படிப்படியே எளிதின் விளங்கும் என்பது திண்ணம்.

சமயத்துறையிற் பிறதுறைகளிற் போலவே ஐயங்கள் தோன்றுதல் இயல்பு. "நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் யார்? என்னை யார் அறிவார்," என மாணிக்கவாசகர் போன்ற சான்றோர்களுக்கும் ஐயங்கள் எழுந்தன. நமக்கும் அத்தகைய பல ஐயங்கள் தோன்றுதல் நலமே சமய வேட்கைக்கும் ஞான நிலைக்கும், அதுவே நல்ல தொடக்கம்; பிற துறைகளிற் போலச் சமயத் துறையில் நிகழும் ஐயங்களுக்கு எளிதில் விடைகூறித் தெளிவித்தல் இயலாது.

ஏனெனில், சமயப் பொருள்கள் நம் அறிவுக்கும் அனுபவத்திற்கும் அப்பாற்பட்டு மேலோங்கி நிற்கின்றன. இறையருள் பெற்ற ஞானிகள் அல்லாத எளிய நமக்கு, அவைகள் பெரும்பாலும் ஊகம் (Speculation) என்ற அளவில்தான் எட்டுகின்றன. நாம் அறிந்தது அணுவினும் சிறியது; அறியாதனவோ கடலினும் பெரியன! 'அத்வைதம்' 'தத்வமஸி' முதலிய சிறு சொற்றொடர்கள், பெரிய பெரிய பாஷ்யங்கள் ஆக விரிந்து நிற்கின்றன. ஆயினும் அவற்றின் பொருளை வரையறுத்துத் தெளிந்தவர்கள் உண்டோ? "சும்மா இரு சொல்லற என்றலுமே, அம் மாபொருள் ஒன்றும் அறிந்திலனே" என்கின்றார் அருணகிரிநாதர். "ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள" எனத் தொடங்கும் பெரிய புராணப் பாடலுக்கு அனுபவப் பொருள் யாது? எனக் குருஞான சம்பந்தர் வினவிய வினாவுக்கு விடை கூற மாட்டாமல், குமரகுருபர சுவாமிகள் தாமும் தயங்கினார் என்பது வரலாறு

சமயப் பொருள் பற்றிய ஐயங்களுக்குக் கல்வியினாலும் நூலறிவினாலும் விடைகூறுதல் இயலாது இதனைத் திருஞானசம்பந்தர் "கீதம் வந்த வாய்மையாற் கிளர்தருக்கினார்க்கு அலால், ஓதிவந்த வாய்மையால் உணர்ந்து உரைக்க லாகுமே?" என அருளிச் செய்திருத்தலும் வலியுறுத்தும். "சிந்தை அறியார்க்கு ஈது போதிப்பது அல்லவே; செப்பினும் வெகு தர்க்கமாம்" எனத் தாயுமானவரும் இதற்குச் சான்று பகருதல் காணலாம்.

எனவே, சமயத் துறையில் நிகழும் ஐயங்கள் நீங்கித் தெளிவுபெற விவாதங்களும் வீண் சர்ச்சைகளும் நிகழ்த்துதல், சிறிதும் பயன்படமாட்டா. தாகம் தணித்துக் கொள்ளக் கருதிக் கடல் நீரைப் பருகினால் தாகம் தணியாமல் மேலும் மேலுமே வளர்ந்து பெருகும். அது போலவே, வெறும் நூலறிவினால் நம் ஐயங்கள் ஒரு போதும் தீராமல், மேலும் வளர்ந்தே மிகுதிப்படும்.

சாத்திரங்கள் ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்க்குநலம் வந்துறுமோ? ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ?
தெண்ணீர்மை யாய்! இதனைச் செப்பு! —திருக்களிற்றுப்படியார்.

சமயத் துறையில் நிகழும் ஐயங்களை, நாம் குருவருளும் திருவருளும் கொண்டே தெளிந்து கொள்ளுதல் வேண்டும். "அதுவானால் அதுவாவர்; அதுவே சொல்லும்" என்பர் தாயுமானவர்.

எனினும், சமய நூற் பொருள் கருத்துக்கள்பற்றி ஓரளவேனும் பொதுவாக நாம் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டுவதும் இன்றியமையாததாக இருக்கின்றது. ஆதலின் இயன்ற அளவு "சமயப் பொருட் குறிப்புக்கள்" என்னும் இத்தலைப்பில் சிற்சில விளக்கங்கள், நம் "திருக்கோயில்" இதழில் இனித் தொடர்ந்து வெளிவரும்.

"அறிவிக்க வேண்டா அறிவற் றயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டா அறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற் றறியாமை எய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்அறி வார்அறிவோரே"

எனத் திருமூலர் திருமந்திரம் கூறுதற்கு ஏற்ப, இவ்விளக்கங்கள் இடைநிலைப்பட்டவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். இவ்விளக்கங்களின் தொகுப்புப்பயன் (Cumulative effect), அன்பர்களுக்கு நாளடைவில் - முடிவில் பெருநலம் விளைக்கும். இறையருள் துணை நிற்பதாக!

—ஆசிரியர்.]

# பராங்குச முனியும் - பரகால கவியும்

(மஹாவித்வான் ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசாரிய சுவாமிகள்.)

(முன் இதழ்த் தொடர்ச்சி : பக்கம். 444)

பெண்மை எய்திப் பேசும் பாசுரங்களில் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் இருவர்க்கும் பெரும்பாலும் கருத்தொற்றுமை விளங்குமாற்றை உபபாதிக்கக் கேண்மின். மகள் பாசுரமும் தாய் பாசுரமும் தோழிபாசுரமுமானவை திருவாய்மொழியில் இருபத்தேழு பதிகங்கள் என்று காட்டினோம். திருமங்கையாழ்வார் பாசுரங்களில் தலைவி பாசுரமும் தாயார் பாசுரமுந் தவிரத் தோழி பாசுரமாக ஒரு பதிகமும் அவதரிக்கவில்லை. தலைவி தோழியோடு ஸம்பாஷிப்பதான பாசுரங்களுண்டு; திருவாய்மொழியில் தோழிபாசுரமாகவே மூன்று பதிகங்கள் அவதரித்திருப்பது போல இங்கில்லையென்பது விவக்ஷிதம். பெரிய திருமொழியிற் பதினோராம்பத்தில் (ஐந்தாவதான) *மானமருமென்னோக்கிப்பதிகம் தோழிமார் பாசுரமன்றோ? என்னவேண்டா; தோழியரிருவர் தாங்கள் பரஸ்பரம் ஸம்பாஷிக்கும் முகத்தினால் எம்பெருமானுடைய பரத்வ ஸௌலப்யங்களை வெளியிடும் பதிகம் அது. பரகாலநாயகியின் பிரகிருதியைப் பற்றின பேச்சு கிடையாததனால் தோழி பாசுரமன்றென்க. ஆகவே திருமங்கையாழ்வாரருளிச் செயல்களில் (பெண்மையில்) தலைவி பாசுரமும் தாய் பாசுரமுமே உள்ளதென்றதாயிற்று. எனினும், நம்மாழ்வாரருளிச் செயலிற்போல இங்கும் அந்யாபதேசப் பதிகங்கள் இருபத்தேழு தேறியுள்ளன. அவற்றின் விவரணம் வருமாறு:—

**பெரியதிருமொழியில் தாய் பாசுரமும் தலைவி பாசுரமுமான பதிகங்கள்**

1. திவளும்வெண்மதிபோல்
2. கள்வன்கொல்யானறியேன்.
3. கவளயானை கொம்பொசித்த
4. வெருவாதாள்வாய் வெருவி
5. சிலையிலங்குபொன்னாழி.
6. தெள்ளியீர் தேவர்க்குந்தேவர்.
7. மூவரில் முன்முதல்வன்.
8. புள்ளுருவாகி நள்ளிருள்வந்த (திருநெடுந்தாண்டகத்தில்)
9. பட்டுடுக்கும்பதிகம் —தலைவிபாசுரமான பதிகங்கள்.
10. திரிபுரமூன்றெரித்தானும்
11. தூவிரியமலருழக்கி
12. பொன்னிவர்மேனிமரதகத்தின்.
13. தவளவிளம்பிறைதுள்ளு.
14. தந்தைகாலில் பெருவிலங்கு.
15. தந்தைகாலில் விலங்கற.
16. கரையெடுத்தசுரிசங்கம்.
17. விண்ணவர் தங்கள் பெருமான்.
18. தன்னை நைவிக்கிலென்.
19. காவார்மடற்பெண்ணை.
20. காதில் கடிப்பிட்டு
21. திருத்தாய் செம்போத்தே.
22. குன்றமொன்றெடுத்தேந்தி.
23. குன்றமெடுத்துமழைதடுத்து.
24. மன்னிலங்குபாரதத்து.
25. சிறிய திருமடல்
26. பெரிய திருமடல். (திருநெடுந்தாண்டகத்தில்)
27. மைவண்ண நறுங்குஞ்சிப்பதிகம். ஆக 27.

அந்யாபதேசப்பதிகங்கள் நம்மாழ்வாருடையனவும் 27; திருமங்கையாழ்வாருடையனவும் 27 என்று தேறிற்று. இனி இவற்றிலுள்ள ஸாதர்மிய வைதர்மியங்களாகிற வைலக்ஷண்யத்தை யநுபவிப்போம்.

**திவளும் வெண்மதிபோல்.** திருவாய்மொழியில் *கங்குலும் பகலும் போலேயாம் இப்பதிகம். அவருடைய தாய்ப்



ஸ்ரீ கோதண்டராமர், ஸ்ரீரங்கம்



ஸ்ரீ கலியாணசுந்தரர், திருவேள்விக்குடி

பேச்சில் அது முடிவுபதிகம். இவருடைய தாய்ப் பேச்சில் இது முதற்பதிகம் என்பது வாசி. பிரமேயம் இரண்டிலுமொன்றே. "இவள் திறத்து என்செய்கின்றாயே" என்று வினவுதல் அங்கு. "நின்தாள் நயந்திருந்த இவளை உன் மனத்தால் என்னினைந்திருந்தாய்?" என்று வினவுதல் இங்கு. இந்த வினா பாட்டுத்தோறு மொக்கும்.

**கள்வன் கொல்யானறியேன்.** திருவாய்மொழியில் *உண்ணுஞ்சோறு பருகுநீர் போலேயாம் இப்பதிகம். தாயை விட்டு மகள் பிரிந்து போதல் இரண்டிலுமொக்கும். திருக்கோளூரை வினவிக்கொண்டு தனியே போனாள் பராங்குச நாயகி; வயலாலி மணவாளன் கொண்டு போகப் போனாள் பரகாலநாயகி.

**கவளயானை கொம்பொசித்த.** திருவாய்மொழியில் *ஆடியாடியகங்கரைந்து போலேயாம் இப்பதிகம். இசை பாடிப் பாடியுருகுதல் ஒக்கும். *எனவள்ளலே கண்ணனே யென்னுமென்றாள் பராங்குச ஜனனி; *கவளயானை கொம்பொசித்த கண்ணனென்னுமென்கிறாள் பரகால ஜனனி.

**வெருவாதாள்வாய் வெருவி.** திருவாய்மொழியில் *பாலனாயேழுலகு போலே யாம் இப்பதிகம். அதில் "என்செய்கே னென்னுடைப் பேதை யென் கோமளம், என்சொல்லு மென்வசமுமல்லள் நங்கைமீர்" என்றாள் பராங்குசஜனனி; இதில் "தாய் வாயில் சொற்கேளாள் தன்னாயத் தோடணையாள்" இத்யாதியுரைக்கின்றாள் பரகாலஜனனி.

**சிலையிலங்கு தெள்ளியீர்தேவர்க்கும்.** திருவாய்மொழியில் *கடல் ஞாலம் செய்தேனும் யானேயென்னு மென்கிறவொரு பதிகம் போன்றது இவ்விரண்டு பதிகமும். அதில் பாட்டுத்தோறும் "ஈசன் வந்தேறக்கொலோ" என்று திருத்தாயார் சொன்னாப் போலே *சிலையிலங்கு பொன்னாழியில் பாட்டுத் தோறும் "கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ!" என்கிறாள் திருத்தாயார். அதில் 'யானே, யானே' என்று எம்பெருமானுடைய தாதாத்ம்யானுஸந்தானம் பண்ணின படியைத் திருத்தாயார் சொன்னாப் போலவே *தெள்ளியீரில் "வடவரை நின்றும் வந்து இன்று கணபுரமிடவகை கொள்வது யாம் என்று பேசினாள்" என்று தத் தாதாத்ம்யானுஸந்தானம் பண்ணுகிறபடியை இத் திருத்தாயார் சொல்லுகிறாள்.

**மூவரில் முன்முதல்வன்.** திருவாய்மொழியில் *மண்ணையிருந்து துழாவி போன்றதாமிப்பதிகம். அதில் "பிரான் கிடக்கும் கடலென்னும்" = இதில் "முழங்கார் கடலுள் கிடந்து" அதில் "எல்லாவுலகும் கண்ணன் படைப்பென்னும்" = இதில் "பூவலருந்தி தன்னுள் புவனம் படைத்து." "மூவுலகும் படைத்த முதல் மூர்த்தி தன்னை' இங்ஙனே கண்டு கொள்க. இனி *புள்ளுருவாகி நள்ளிருள் பதிகத்திலும், (திருநெடுந்தாண்டகத்தில்) *பட்டுடுக்கும் பதிகத்திலும் பராங்குச ஜனனியின் பேச்சுக்களின் ப்ரபஞ்சனப்ரணாளிகள் உய்ந்துணரத் தக்கது. திருவிருத்தத்தில்* அருளார் திருச்சக்கரத்தாலென்னும் தாய்பாசுரத்தில் "ஈங்கோர் பெண்பால் பொருளோ வெனுமிகழ்வோ?" என்ற வார்த்தையே *புள்ளுருவாகியில் ஒன்பது பழமொழிகளால் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ' அங்கு அடியேனுடைய திவ்யார்த்த தீபிகையுரையில் விளக்கம் காண்க.

**பட்டுடுக்கும் பதிகத்திலிருந்து கண்டதோர் விசேஷார்த்தம்**—திருநெடுந்தாண்டகத்தில் *பட்டுடுக்கும் அயர்த்திரங்கும் பாவைபேணாள்* என்கிற பதினோராம் பாட்டு முதலாக "தேராளும் வாளரக்கன் செல்வம் மாள" என்கிற இருபதாம் பாட்டு வரையில் தாய்பாசுரமான பதிகம். இதில் *பட்டுடுக்கும் பாசுரத்தில் 'மட்டுவிக்கி மணிவண்டு முரலுங்கூந்தல்" என்று பரகால நாயகி குறிக்கப் படுகிறாள். இதிலிருந்து நாமைகதேச க்ரஹண ந்யாயத்தாலே பரகால நாயகிக்கு மணிவண்டு என்றொரு திருநாமம் ப்ரஸித்தமாகிறது. இதை நெஞ்சில் திடமாக வைத்துக்

கொண்டு மேல் விஷயம் குறிக்கொள்க. பெரிய திருமொழியில் (6-6) *அம்பரமும் பெருநிலனுமென்று தொடங்கும் திருநறையூர்ப் பதிக மொன்றில் "வம்ப விழுந் செண்பகத்தின் வாசமிண்டு மணி வண்டு வகுளத்தின் மலர் மேல் வைகு" என்றுள்ளது. மணிவண்டானது முந்துற முன்னம் செண்பகப்பூவை அநுபவித்து விட்டுப் பிறகு மகிழ மலரிலேயே படுகாடு கிடப்பதாக இங்குச் சொல்லப்படுகிறது. "யஸ்ய ஸாரஸ்வதம் ஸ்ரோத: வகுலா மோத வாஸிதம்" (யதிராஜஸப்ததி.) என்றதற்குச் சேரத் திருவாய்மொழியநுபவத்தில் ஊன்றியிருப்பதுதான் வகுளத்தின் மலர் மேல் வைகுதலாகச் சொல்லிற்றிங்கு. ஆழ்வார்கள் திரளில் திருமங்கையாழ்வார் கடைக் குட்டியாகையாலே மற்றுள்ள வாழ்வார்களனைவருடையவும் திவ்வியப் பிரபந்தங்களை இவர் தாம் அநுபவித்தவர். அதனைச் *செண்பகத்தின் வாச முண்டென்பதனால் காட்டி, அவையெல்லாவற்றினுள்ளும் நம்மாழ்வாரருளிச் செயலிலேயே தாம் ஊன்றியிருந்தபடியை *வகுளத்தின் மலர்மேல் வைகு* என்பதனால் விளக்கினபடி. இங்குத் திருமங்கையாழ்வாராகிய தம்மையே மணிவண்டென்பதனால் குறித்தனரென்பது உறுதி. இதை முன்னடியே நம்மாழ்வார் தெரிந்து கொண்டவராதலால் திருவிருத்தத்தில் "வண்டுகளோ! வம்மின், நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ உண்டு களித்துழல்வீர்க்கு ஒன்றுரைக்கியம், ஏனமொன்றாய் மண்துகளாடி வைகுந்த மன்னுள் குழல்வாய் விரை போல் விண்டு கள்வரும் மலருளவோ நும்வியலிடத்தே" என்றருளிச் செய்தார். இங்கு "**வண்டுகளோ! வம்மின்**" என்றது திருமங்கையாழ்வாரையே விளித்தபடி. விளித்து என்ன வினவுகிறார்? நீர் எவ்வளவோ ஸ்ரீஸூக்திகளையுண்டு களித்துத் திருப்பதிகள் தோறும் உழல்கின்றீரே, திருவாய்மொழி போன்று பரம போக்யமானதொரு பிரபந்தம் கடல் சூழ்ந்த மண்ணுலகில் எங்கேனுங் கண்டதுண்டோ? என வினவுகிறபடி. அந்த வினவுக்கே இவர் விடையிறுக்கிறார்— 'ஸ்வாமிந்! கண்டதில்லை; ஆனது பற்றியே வகுளத்தின் மலர்மேல் தானே வைகிக்கிடக்கிறேன்' என்று ......

ஆக இதுவரையில் தாய் பாசுரமான பதிகங்களின் ரஸாநுபவம் பண்ணினோம்; இனி தலைவி பாசுரமான பதிகங்களின் ரஸாநுபவம் பண்ண ப்ராப்தமாகிறது. இது மிக விரிவாகச் செய்ய வேண்டும்; தற்காலம் ஸம்க்ஷேப ருசியால் "**ரஸிகர்களுக்கும் விசேஷப் பொருத்தங்கள்**" என மகுடமிட்டு அம்மகுடத்திற்கு இணங்கிய இருபது விஷயங்களை நிரூபிப்பதனால் க்ருதக்ருத்யனாகிறேன். பதிகங்களின் மீது விரித்துரைப்பது மற்றொரு காலாகும்.

**ரஸிகர்கள் உகக்கும் விசேஷப் பொருத்தங்கள்:**—(1) வேதத்தில் (தைத்திரிய யஜுர்ப்ராஹ்மணத்தில்) "**க்ருத்திகா: ப்ரதமம். விசாகே உத்தமம்**" என்று ஓதப்பட்டுள்ளது. திருமங்கையாழ்வாருடைய நக்ஷத்ரமான க்ருத்திகையும், நம்மாழ்வாருடைய நக்ஷத்ரமான விசாகமும் விசேஷித்தோதப்பட்டன. (2) எதிரிகளின் செருக்கையடக்குந்திறத்தில் **பராங்குச**னென்கிற திருநாமமும் **பரகாலனென்**கிற திருநாமமும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. (3) அடியார்களை யுகப்பிக்கும் விஷயத்தில் ஒருவர் **இன்பமாரி**யென்றும், மற்றொருவர் **அருள்மாரி**யென்றும் பேர்பெற்றனர். திருவாய்மொழியில் (4-5-10) *வண்டமிழ்நூற்க நோற்றேன் அடியார்க்கு இன்பமாரியே* என்று நம்மாழ்வார் தம்மை இன்பமாரியாகத் தெரிவித்தார்; பெரிய திருமொழியில் (3-4-10) *அங்கமலத் தடவயல் சூழாலிநாடன் அருள்மாரியரட்டமுக்கி அடையார்சீயம்* என்று திருமங்கையாழ்வார் தம்மை அருள்மாரியாகத் தெரிவித்தார். முறையே ஆனந்த வர்ஷுகர், கருணை வர்ஷுகர் என்று பொருள். (4) திருவிண்ணகர்த் திருப்பதி யெம்பெருமானை உப்பிலியப்பனென்று வழங்குவதைத் தவிர்க்க நம்மாழ்வார் (6-3-9) *தன்னொப்பாரில்லப்பன்* என்றார். திருமங்கையாழ்வார் (8-1-2) *ஒருவரையும் நின்னொப்பாரொப்பிலாவென்னப்பா* என்று அதற்குச் சேமக்காப்பு சாற்றினார் (5) நம்மாழ்வார் திருவாய்மொழியில்

(4-4-8) *திருவுடைமன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்* என்று பகவத் பக்தர்களான அரசர்களை மதித்துப் பேசினர்; அதை யடியொற்றியே திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் "தென்னன் தொண்டையர் கோன்—மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும் நீண் முடிமாலை வயிர மேகன்—பல்லவன் வில்லவனென்றுலகில் பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழற் பல்லவன்—துலங்கு நீண் முடியரசர் தங்குரிசில் தொண்டைமன்னவன் திண்டிறலொருவன் செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்த கோயில்—இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்கு எழில் மாடமெழுபது செய்துலகமாண்ட திருக்குலத்து வளச்சோழன்" என்றிப்படி பகவத் பக்தர்களான சில சக்ரவர்த்திகளைச் சிறப்பித்துக் கூறினர்.

(3) கண்ணபிரான் திருவாய்ப் பாடியில் *படலடைத்த சிறு குரம்பை நுழைந்து புக்குப் பசுவெண்ணெய் களவு காணப்புகுமிடத்தில் தன்னிறத்தினிருட்சியாலும் அவ்விடத்தினிருட்சியாலும் வெண்ணெயிருக்குமிடம் தெரியாமல் தடவா நிற்கையில் யாத்ருச்சிகமாகக் கையிலே வெண்ணெய்த்தாழி தட்டின் உவப்பினால் பல்லைத் திறந்து சிரிக்க நேரும்; பூரண சந்திரனுடைய கிரணம்போலே திருமுத்துக்களின் ஒளி புறப்படவே அந்த வொளியையே கை விளக்காகக் கொண்டு வெண்ணெயை வாரி விழுங்குவனும் கண்ணன். இதை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (3-8-3) "நாளிளந்திங்களைக் கோள் விடுத்து வேயகம் பால் வெண்ணெய் தொடுவுண்ட ஆனுயர்தாயவனே!" என்ற பாசுரத்தினால் அநுஸந்தித்தார்.

இதைத் திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில் (2-10-6) "உறியார்ந்த நறுவெண்ணெயொளியால் சென்று அங்குண்டானை" என்றநுஸந்தித்தார். இங்கு '**ஒளியால்**' என்றது திருமுத்துக்களினொளியால் என்றபடி. இரண்டிடத்திலும் அடியேனுடைய திவ்யார்த்த தீபிகை நோக்கத்தக்கது. (7) திருவாய்மொழியில் (4-6) *தீர்ப்பாரையாமினியில் கட்டுவிச்சி வருகிறாள்; அவள் தேவதாந்தரக் கட்டுவிச்சியாகையாலே இகழப்பட்டாள்; சிறிய திருமடலிலும் திருநெடுந்தாண்டகத்திலும் வருகிற கட்டுவிச்சி பகவத் ப்ரவணையாகையாலே புகழப்பட்டாள். (8) நம்மாழ்வார் திருவிருத்தத்தில் "முலையோ முழுமுற்றும் போந்தில, மொய்பூங்குழல் குறிய கலையோ வரையில்லை நாவோகுழறும்" என்று பருவத்துக்கு ஏலாத தன்மையைச் சொன்னார். இவரும் "முள்ளெயிறேய்ந்தில கூழை முடிகொடா. தெள்ளியளென்பதோர் தேசிலளென்செய்கேன்" என்றார். (9) நம்மாழ்வார் *பயிலும் சுடரொளியிலும் *நெடுமாற்கடிமையிலும் பாகவத சேஷத்வத்தைப் பேசினார். இவரும் *நண்ணாத வாளவுணரிலும்* கண்சோர வெங்குருதியிலும் அதனைப் பேசினார். (10) நம்மாழ்வார் *ஊரெல்லாந்துஞ்சியிலே இராப்பொழுதில் தனிமைக்கு வருந்தினார். இவர் *தந்தை காலில் விலங்கற வென்னும் திருக்கண்ணபுரப் பதிகத்தில் அதனிலும் மிக வருந்தினார்.

(11) நம்மாழ்வார் *ஒரு நாயகத்தில் ஐச்வரியத்தின் அல்பாஸ்திரத்வங்களை விரிவாகப் பேசினார். இவர் (6-2-5)* பாண்டேன் வண்டறையுங்குழலார்கள் பல்லாண்டிசைப்ப, ஆண்டார் வையமெல்லாம் அரசாகி முன்னாண்டவரே மாண்டாரென்று வந்தார் அந்தோ!* என்று அதைச் சுருக்கமாகப்பேசினார். (12) நம்மாழ்வார் *குரவை யாச்சியரோடு கோத்தது மென்றபதிகத்தில் க்ருஷ்ணாவதாரசரிதைகளை விரிவாகப் பேசினார், இவரும் அதை *மானமுடைத்துங்களாயர் குலமென்னும் பதிகத்தில் மிக விரித்துரைத்தார். (13) நம்மாழ்வார் *இன்னுயிர்ச் சேவலும்பதிகத்தில் "என்னுயிர்க் கண்ணபிரானை நீர் வரக்கூவகிலீர்" என்று இன்னாப்போடே பேசினார். (14) நம்மாழ்வார் *மின்னிடைமடவாரில் ஊடல் ரஸமநுபவித்தார். இவர் *காதில் கடிப்பிட்டிலே அதே ரஸத்தையநுபவித்தார். (15) நம்மாழ்வார் *உண்ணிலாவிய , வைவரால்

பதிகத்திலே இந்திரியங்களுக்கு ஆற்றவொண்ணுமல் ஓலமிட்டார். இவர் *திருவுக்குந் திருவாகிய பதிகத்திலே அங்ஙனே ஓலமிட்டார் (16) நம்மாழ்வார்* ஆழியெழப்பதிகத்தில் பல அபதானங்களைப் பேசினர். இவர் *ஏழையேதலனில் அப்படியே. (17) நம்மாழ்வார் "கடியன் கொடியன் நெடியமால் ......ஆகிலுங்கொடிய வென்னெஞ்சமவனென்றே கிடக்குமெல்லே" என்று குணக்ருத தாஸ்யமன்றிக்கே ஸ்வரூபப்ரயுக்தமான அடிமையை யநுஸந்தித்தார். இவரும் "வேம்பின்புழு வேம்பன்றியுண்ணுது, அடியேன் நான்பின்னுமுன் சேவடியன்றி நயவேன்" என்று அதனை விவரித்தார். (18) நம்மாழ்வார் திருவிருத்தத்தில் *சூட்டு நன்மாலைகள் பாசுரத்தில் கண்ணன் வெண்ணெய் தொடுவுண்பதற்காகவே திருவாய்ப்பாடிக்குப் போந்ததாக அருளிச்செய்தார். இவரும் "காணுயன் கடிமனையில் தயிருண்டு நெய்பருக நந்தன் பெற்றவாணுயன்" என்றுர். (19) நம்மாழ்வார் "எத்திறமுரலினேடிணைந் திருந்தேங்கிய வெளிவே" என்று ஒருகால் சொல்லித் தரைப்பட்டார். இவர் "அவன் காண் மினின்றுய்ச்சியரால் அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே" என்று ஒருகால் சொன்னுப்போலே ஒன்பதின்கால் சொல்லித் தரைப்பட்டார். இங்ஙனே யெடுத்துக்காட்டி யநுபவிக்க வேண்டியவை அபரிமிதம்

(20) திருவாய்மொழிக்கும் பெரிய திருமொழிக்குமே மிகச்சிறந்த தனியன் அமைந்தது. "பக்தாம்ருதம் விச்வஜநாநு மோதனம்" *"நெஞ்சுக்கிருள்கடிதீபம்" இவ்விரண்டு தனியன்களிலும் ஆச்சரியமான ஐந்து விசேஷணங்கள் தேனிலுமினியவை. "சீரார்சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெறவும், *பொங்குபுகழ் மங்கையர் கோனீந்த மறையாயிரமனைத்தும் தங்குமனம் பெறவும், இராமாநுசமுனியை வணங்கி வேண்டுதல் இவ்விருவர் அருளிச்செயல்களுக்கே ஒக்கும். *

---

## கோயில் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஆளுடையார் கோயில் | திருப்பெருந்துறை ஆனித் திருமஞ்சன விழா. |
| திருவாழ்கொளிபுத்தூர் | வைகாசி விசாக விழா, (11-6-65). |
| திருமயிலைக் கபாலீச்சுரம் | நூருயிரம் திருவிளக்குப் பெருவிழா (13-6-'65). |
| தம்பிக்கு நல்லவன் கோட்டை | வைகாசி விசாக விழா. |
| திருமுருகன் பூண்டி | வைகாசி விசாகப் பெருந்திருவிழா. |
| திருநெல்வேலி | நெல்லையப்பர் கோயில் சங்கபிடேகம், பாலபிடேக விழா. |
| சேலம் | தசுவனேசுவரர் கோயில் பிரம்மோற்சவ விழா. |
| திருப்பாதாளேச்சுரம் | ஸ்ரீ நாகநாதசுவாமி கோயிற் பெருவிழா. |
| வளையமாதேவி | வேத நாராயணப் பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேகம், (9-5-65) |
| உத்தமர் கோவில் | பிட்சாடனேசுவரர் கோயிற் பெருவிழா. |
| கோடியக்காடு | குமரர்கோவில் வைகாசி விசாக விழா. |
| கன்ருப்பூர் | நடுநறிநாதர் கோயில் ,, ,, |

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

உடையவர் சென்றதுமே வித்வான்களிற் பலருக்கு உள்ளம் பொத்துக்கொண்டு வந்தது. அக்கிரந்தம் இருக்கும்வரை தங்கள் வித்தைகள் பலியாது என்று தீவிரமாக நினைத்த பலர் மீண்டும் சதி செய்தனர். சில கயவர்களை ஏவி உடையவர் கோஷ்டியைப் பிரயாண மத்தியில் வழிமறித்துக் கிரந்தத்தைப் பறித்துப் போயினர். உடையவர் உள்ளம் மிக நொந்து ஏங்கி நின்றார். கூரத்தாழ்வான் அவரிடம் சென்று ஸ்வாமி கிரந்தம் போய்விட்டதென்ற கவலையா? வேண்டாம். அடியேனிருக்கின்றேன். அந்த க்ரந்த முழுவதையும் இப்போதே திருச்செவி சாத்தவா அல்லது ஆற்றிடைக் குறையிலே வந்து செவிமடுக்கிறீரா ?" என்று வினவினார். உடையவர் வியப்புமேலிட்டு "ஆழ்வான்! என்ன சொன்னீர்? கிரந்தம் முழுவதையும் பாடம் செய்து விட்டீரா! என்று கேட்க ஆழ்வானும் தலையை அசைத்து 'ஸ்வாமீ! தேவரீர் திருவடிபலம் எதைத்தான் சாதியாது?" என்று விநயமாக விண்ணப்பித்தார். உடையவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

"உடையவர் எழுந்து சிந்தனை களித்து, ஈதுரைத்த ஆழ்வான்தனை நோக்கித் தடையறப்புல்லி என்னுயிரனையாய், சார்வு மற்றுன்னையே உடையேற்கு இடையிலோர் துன்பம் வருங்கொலோ வென்ன இயம்பினர்."

ஆழ்வானை ஆரத்தழுவினார். என் உயிர்போன்ற நின்னைப் பக்கபலமாக உடைய எனக்குத் துன்பம் என ஒன்று வருமா? என்று ஆழ்வானைக் கொண்டாடி விட்டு, கிரந்தம் போயிற்றென்ற நினைப்பிலே அவர்கள் இருக்கட்டும். நீர் உமது ஞாபகத்திலே அனைத்தையும் தரித்தீர் என்பதறிந்தால் உமக்கும் ஏதேனும் தீங்கு நினைப்பினும் நினைப்பர். எல்லாம் பெரியபெருமாள் ஸன்னதி போய்ப் பார்த்துக்கொள்ளலாம் எனக்கூறித் தம் பிரயாணத்தைத் தொடர்ந்து பதரிகாச்ரமம் வந்து சேர்ந்தார்.

'முற்ற மூத்துக் கோல் வளையாமுன்' என்று தொடங்கித் திருமங்கை யாழ்வாரால் மங்களாசாஸனம் பெற்றதும், நரநாரணனாய் உலகத்து அறநூல் சிங்காமை விரித்த க்ஷேத்திரமுமாகிய ஸ்ரீ பதரிகாச்ரமத்தை அநாயாசமாகச் சென்று சேர்ந்த உடையவர், அங்கே எம்பெருமான் திருவடியைத் தீண்டி மீண்டும் புனிதம் பெற்றோடும் கங்கா நதியையும், அதன் இரு கரையும் ஓங்கி வளர்ந்து பசுமையாய்ச் செழித்த மரங்களோடு விளங்கும் மலைச்சாரல்களின் அழகையும் கண்டு உள்ளம் பரவசமடைந்தார். அத்தலத்திலே திருவெட்டெழுத்தின் வடிவமாய் நிற்கும் எம்பெருமானை ஸேவித்து மனம் உருகினார். அங்கே முன்னம் பிறமதத்தார் வந்து செய்து போன உள்ளக் குறும்புகளை யெல்லாம் அஷ்டாக்ஷரபத உண்மைப் பொருள் என்ற வாள் கொண்டறுத்து அவர்களுடைய மனமாசுகளை எல்லாம் அகற்றினார். மீண்டும் அங்கே அஹங்காரமதக் குறும்பு தலைகாட்டாதபடி காவலிட விழைந்தவராய் சிங்கப்பிரான் என்ற ஒருவரைத் தேர்ந்து அவரை அங்கு வைஷ்ணவ தளபதியாக்கினார். அவரும் அப்பதவிபெற்று உள்ளம் பூரித்தார். (பின்னர் அவர் முதலியாண்டான் சீடரானார் என்று தெரிகிறது). உடையவரும் கிருதகிருத்யராய் உளம் மகிழ்ந்து மீண்டும் வதரி நாராயணனை வலங்கொண்டு வணங்கி விடை பெற்றுக் கொண்டு சாளக்கிராமம் என்னும் தலத்தை ஸேவிக்க எண்ணிப் புறப்பட்டார்.

அந்தத் தலமானது உலகோர் உய்ய எம்பெருமான் "லக்ஷ்மீநாராயணம், ஸீதாராமம், ததிவாமனம்" என்று இவைபோன்ற பலம் சிறந்த வடிவங்களாய், ஸகலதீர்த்த ஸ்தபங்களாய், பலதிவ்ய தேசங்களிலுமுள்ள அடியார்கள் தங்கள் ஆராதன மூர்த்தங்களாக எழுந்தருள் வித்துக் கொள்ளப் பாங்காகப் பல்வித சாளக்கிராமங்கள் உற்பத்தியாகும் புண்ணிய க்ஷேத்திர

மாதலின் அதனை ஸேவித்து ஹரிக்ஷேத்ரம் என்ற அவ்விடத்து எம்பெருமானை வணங்கிப் பல்வித சாளக்ராம மூர்த்தங்களையும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டார். அப்பிரதேசத்திலுள்ள க்ஷத்திரியர்களை எல்லாம் தம் உபதேசத்தாலே திருத்திப்பணிகொண்டு கண்டகி நதியிலே சக்கரதீர்த்தத்திலே நீராடி அவ்வரி க்ஷேத்ரத்திலே மூன்றிரவு தங்கிப் புறப்பட்டார்.

அங்ஙனம் புறப்பட்டவர் விரஜையால் சூழப்பெற்ற வைகுந்தமாநகர் போன்று, தாய் முலை போன்று பாயும் சரயுவால் சூழப்பெற்றதும் 'நில மகள் முகமோ, திலகமோ கண்ணோ, நிறை நெடுமங்கல நாணோ' என்று உலகம் படைத்தான் கவியான கம்பனால் வருணிக்கப் பெற்றதும், ராமாநுஜரான தம்முடைய முன்னைய அவதார ஸ்தலமானதும், "அறம் தலைநிறுத்தி வேதம் அருள் சுரந்தமைந்த நீதித், திறம் தெரிந்துலகம் பேணச் செலுத்தித்தீயோர், இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைக்க" எம்பெருமான் அவதரித்த தலமுமான திருவயோத்திக்கு எழுந்தருளினர். அங்கே மூன்றிரவு தங்கி ரகுவீரனின் நாம குணங்களிலே ஈடுபட்டு, "தயரதற்கு மகன் தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்றபடி அவன் திருவடித்யானத்திலே ஊன்றினர். அவனால் நற்பாலுக் குய்விக்கப்பட்ட தாதலின் அங்குள்ளாருடைய ராமப்ராவண்யம் அதிசயிக்கத் தக்கதாயிருந்தமை கண்டு உளம் பூரித்தார். பெருமான் அவதாரத்தலம் ஸேவித்த உடையவருக்கு, எம்பெருமானிலும் சேதனரிடத்திலே க்ருபையுடையளாய், தேவமாதர் தஞ்சிறை நீக்குதற்குத் தான் சிறைபுக்க செல்வியாய்த் திகழ்ந்த மைதிலி அவதரித்த மிதிலையையும் சேவிக்கப் பாரித்தது. அதன்படியே அயோத்தியினின்றும் பயணமாய் ஸ்ரீ மிதிலாபுரிக்கு எழுந்தருளி அந்தத் தலத்து மண்ணைத் தலையிலே தரித்து வணங்கிப் பிராட்டியின் தாயன்பை உள்ளத்தே உன்னிப் பரவசரானர்.

அங்கு நின்று அவ்வடநாடெங்கும் திரிந்து தீர்த்தகராய் அங்குள்ளாரனைவரையும் திருத்திப் பணிகொண்டு பின்னர் "நலம் திகழ்சடையான் முடிக்கொன்றை மலரும் நாரணன் பாதத் துழாயும், கலந்து இழி"யும் புனல் பரந்த கங்கையின் கரைமேல் உள்ள திருக்கண்டங்கடிநகர் சென்று அங்குள்ள எம்பெருமானை ஸேவித்து மகிழ்ந்தார். அங்கு நின்றும் வாரணசிக்கு எழுந்தருளி நைமிசாரண்யம், சித்ரகூடம், தண்டகாரண்யம் முதலிய பிரதேசங்களை எல்லாம் ஸேவித்துக் கிழக்கு நோக்கி எழுந்தருளிக் கலிங்க நாட்டிலே கடகம் என்ற பகுதி சென்று அப்பிரதேச ராஜாவான புருஷோத்தம கஜபதி என்பவனால் மிகவும் கௌரவிக்கப்பெற்று ஸ்ரீ புருஷோத்தம க்ஷேத்திரத்திற்கு எழுந்தருளினர்.

அங்கே, முன்னர் 'நீலாத்ரிநாதன்' என்று நித்ய சூரிகளால் பூஜிக்கப்பட்டவரும், பின் இந்த்ரத்யும்னன் என்ற கஜேந்த்ரனால் ஆராதிக்கப் பெற்றவரும், அப்பால் காலமாதவனால் ஆராதிக்கப் பெற்றவரும் இக்கலியிலே கடக தேசாதிபதியாகிய புருஷோத்தம கஜபதியால் ஆராதிக்கப்பெற்ற வருமான ஸ்ரீ ஜகந்நாதப்ரபுவைக் கிட்டி ஸ்ரீரங்க நாதனையும் ஜகந்நாதனையும் ஒன்றுகச் சேர்த்து அநுஸந்தித்து "ரங்கநாத ஜகந்நாத நாததுப்யம் நமோ நம:" என்று வந்தித்து வணங்கினர்.

அந்தத் தலத்திலே ஆராதன முறையெல்லாம் உடையவர் திருவுள்ளத்திலே துராசாரமாய்த் தோற்ற அவர் அம்முறையை மாற்ற முயல வேண்டாவோ என்று எண்ணமிடுகையில், ஸ்ரீ ஜகந்நாதன் அவர் கனவிலே தோன்றி "எம்பெருமானரே! மூதுவராம் என்ற வ்ருத்தமந்த்ரிகள் கோல் கீழ் வானிளவரசு வைகுந்தக் குட்டனாய் நின்றோம். நம்முடைய ஸ்வாதந்த்ர்யத்தாலே நந்தகோப னிளவரசானோம். அங்கே யாதவ பக்த கோஷ்டியிலே குறும்பு செய்வானோர் மகனாய், தருமமறியாக் குறும்பனாய், ஏலாப் பொய்களுரைப்பானாய், பட்டிமேயும் காரேறாய்த்திரிந்து மகிழ்ந்தோம். அவ்விருப்போடுள்ள நிலையில் தான் இங்கும் எழுந்தருளியுள்ளோம். ஆகையால் உள்ளன்பொன்றே கொண்டு விதிக்ரமங்களின் றிக்கே நமக்கு இங்கு செய்யப்படும் ஆராதனத்தை இங்குள்ள நம் நிலையிலே நமக்குப் பரம போக்யமாக ரஸித்துக்கொண்டிருக்கிறோம். நீர் அதற்கு எவ்வித பங்கமும் செய்து விடாதேயும். உம்முடைய ஸேவை தேவையான இடமிருக்கிறது. அங்கே உம்மைச் சேர்ப்பிப்போம்" என்

றருளி மறைந்தார். உடையவரும் அக்கனவை உன்னிக்கொண்டே தம்மை மறந்து நித்திரை போனார்.

உறங்கிக் கொண்டிருந்த உடையவரை, பெரிய திருவடி ஜகந்நாதன் ஆணையால் எடுத்துச்சென்று கூர்ம க்ஷேத்ரத்திலே கொண்டு வைத்து மறைந்தார். விடியற்காலம் கண்விழித்த உடையவர் தாம் ஜகந்நாத க்ஷேத்திரத்தில் இல்லை என்பதையும் வேறெங்கோ இருப்பதையும் உணர்ந்தார். உடனே ஜகந்நாதனை தியானம் செய்து "ஸ்வாமீ! அடியேனை இப்படி எங்கோ திசை தெரியாக் காட்டிலே தேவரீர் ஸன்னதியின்றி இதர தேவதாந்தரங்களின் வடிவங்கள் தோன்றுமிடத்திலே கொண்டு நிறுத்தும்படி அடியேன் தேவரீர் திருவடிகளுக்குச் செய்த பிழை என்ன என்றும் அறிகிலேனே. என்ன சோதனை இது? அப்பனே!" என்று வேண்டினார். எம்பெருமான் அசரீரியாக "உடையவரே! நேற்றுக் கனவிலே உம்முடைய ஸேவை தேவையான இடமிருக்கிறது. அங்கே உம்மைச் சேர்ப்பிப்போம் என்று சொன்னோமன்றோ. அதன்படியே நம் பக்ஷிராஜனைக் கொண்டு இங்கே சேர்ப்பித்துள்ளோம். இது நம்முடைய கூர்ம க்ஷேத்ரம். இங்குள்ளார் பிறர் மயக்குக் குட்பட்டு நம்மை மறந்து வர்த்திக்கின்றார்கள். அவர்கள் அறியாமையை நீக்க உம்மையன்றி வேறுதக்கவர் யார்? அதனாலேயே இங்கு உம்மைச் சேர்ப்பித்தோம். இங்குள்ளாரைத் திருத்தி மீண்டும் அவர்கள் முன் போல் நம் அடியராம்படி செய்யும்" என உரைத்தருளினான். உடையவரும் பரமன் கிருபை இருந்தபடிதான் என்னே! என வியந்தவராய் அவன் பணித்த பணியில் ஈடுபடலானார். ஆனால் அவர்கூட ஜகந்நாதம் வந்தவர்கள் அங்கேயே இருந்தனர். காலையில் அவர்கள் எழுந்ததும் உடையவரைக் காணமல் பதைத்து நடுங்கி என்ன நிகழ்ந்ததோ என்று மனம் ஒடிந்து கலங்கி நிற்க, பரமன் ஓரந்தணன் வடிவாக அவர்கள் முன் தோன்றி உடையவர் ஸ்ரீகூர்மக்ஷேத்ரத்திலே எழுந்தருளி யிருப்பதை யறிவித்துச் சென்றான். ஸ்ரீவைஷ்ணவர்களும் கலக்கம் நீங்கியவர்களாய் கூர்மக்ஷேத்திரம் சென்று உடைவரை சேவித்து மனம் மகிழ்ந்தனர். உடையவர் அங்கே பன்னாள் அங்குள்ளாரை யெல்லாம் திருத்தி ஆட்கொண்டு ஸ்ரீ கூர்மமூர்த்தியின் கோயிலை முன்போல் நல்ல நிலைக்குக் கொணர்ந்து, ஸ்ரீகூர்மமூர்த்தியை "அடலாமையான திருமால் நமக்கோரரணே" என்று அநுஸந்தித்துச் சேவித்து அத்திருப்பதியினின்றும் விடைகொண்டார்.

அங்கு நின்றும் சிம்மாசலம் சென்ற உடையவர் அங்கே "வல்லெயிற்றுக் கேழலுமாய் வாளெயிற்றுச் சீயமுமாய்" என்றவாறு வராகமூர்த்தியாயும், மானுடமடங்கலாயும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானது மூர்த்தங்களைச் சேவித்து இன்புற்றார். அங்குள்ள அனைவருக்கும் செய்ய வேண்டிய உபதேசங்கள் அனைத்தும் செய்து திருத்தி அங்கே கிருஷ்ணமாசாரியார் என்பவரைத் தலைமையாக ஸ்தாபனம் செய்து அங்கு நின்றும் போந்தார்.

அங்ஙனம் போந்தவர் உறங்கல் நகருக்குவந்து அங்கே தம்மைத் தருக்கத்திலே அடர்க்கவந்த பாஷண்டிகள் அனைவரையும் வெற்றிகொண்டு அங்குள்ள பாஞ்சாலராயனைத் தபித்து மீண்டார். பின்னர் ஸ்ரீ காகுளம் சென்று அங்குள்ளார் தலைவராய வல்லபன் என்பவனைத் திருத்திச் "செங்கண்மால் தெலுங்கராயன்" என்று திருநாமம் இட்டு அங்குள்ள புறச்சமயிகளைத் தம் வாதத்தானே கண்டித்துத் திருத்தி அவர்களுக்குத் தஞ்சமாக பாஞ்சாலராயன் என்ற எம்பெருமானையும் பிரதிஷ்டை செய்து போந்தார். —தொடரும்

---

வடதிசை மதுரை சாளக் கிராமம் வைகுந்தம் துவரை அயோத்தி
இடமுடை வதரி இடவகை யுடைய எம் புருடோத்தமன் இருக்கை
தடவரை அதிரத் தரணிவிண் டிடியத் தலைப்பற்றிக் கரைமரம் சாடிக்
கடலினைக் கலங்கக் கடுத்திழி கங்கைக் கண்டம் என்னும் கடி நகரே.

—பெரியாழ்வார்.

# பாரதப் பண்போவியங்கள்

முதுபெரும் புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார், திருவண்ணுமலை.

## (வேத வியாசர்)

**மனம்:**

உலகத்தில் உடலுறுதியால் சிறந்தன மாக்களே. ஆனுல், எத்திற மாக்களேயும் மக்கள் எளிதில் அடக்கி ஆண்டுவருவதைக் காண்கின்றேம். இதற்கு ஏதுவென்ன? மாக்களுக்கில்லாத ஒரு சிறந்த பொருள் மக்களிடத்தில் நிறைந்திருக்கிறது. அது யாது? அம்மாண்புள்ள பொருள் மனந்தான். மனநுட்பம் சிலவிலங்குகளினிடத்தும் மக்களே வியக்கும் அளவு மாண்புற்று, விளங்குகிறது. அது வருவதற்குள்ள வாய்ப்பு மாக்களுக்கில்லே, மக்களுக்குத்தான் சிறந்துளது. "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" எனப் பெரியவர் பேசுவர். "மனத்தால் ஆம் மாந்தர்க்கு உணர்வு" என உள்ளியலுரைக்கும், வள்ளுவர் வகுக்கின்ருர்.

மனம், வெளிப்படத் தோன்ருதவொரு உள்வயிறு. அது வாயால் உண்டு நிரம்பும் வயிறல்ல, செவிகளால் சிறப்புற்று வாழும் திருவயிறு. "செவி வாயாக நெஞ்சு களனுகை" என்ருர், மாணவர் பன்புரைக்கவந்த மாமுனிவர். மனத்திற்கு எக்காலும் அடங்காத பசியுண்டு. அது, உணவுப் பசியல்ல, உணர்வுப் பசி. அது, புத்துணர்வுகளேப் பெறுந்தோறும், பெருமகிழ்வெய்து கின்றது. அம்மன வயிறு மகிழ்ச்சியில் நிஜனக்கும்பொழுது, இவ்வுடல் வயிறு ஓய்ந்துகிடக்கிறது. இதன் வாலாட்டம் அதன்பால் செல்லுகிறதில்லே. துள்ளிக்குதித்துச் சோர்ந்து போகும் ஊண் வேட்கையை, எள்ளி நகையாடுகின்ருர் வள்ளுவர். "செவிக்குணவில்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்." இதிலுள்ள, "வயிற்றுக்கும்" எனவரும் இழிபும்மையையும், 'ஈயப்படும்' என்ற பெருமிதத்தையும் சித்திரித்துக் காட்டிச், சிரிப்பிக்கின்ருர் பரிமேலழகர். உணர்வுப் பசிகொள்ளாத மக்கள், தாம் மீட்டும் மாக்களாகி விடுகின்ருர்களாம். அவர்கள், இருந்தாலென்ன, இறந்தால்தான் என்ன, என்கின்ருர் மேலும் வள்ளுவர். மனம் மக்களுக்கு உணர்வென்னும் ஆக்கத்தைத் தேடித்தருகின்றது. "மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம்." உண்ட பொருளே ஒருவேளேயோடு ஒழித்து, இழிவுப் பொருளாக்கும் வயிற்றை யொத்ததல்ல மனம். "மன நலத்தி னுகும் மறுமை" யென்பதனுல் அது, பிறவிதொறும் தொடர்ந்துவரும், பெரும் பொருளேத் தேடித்தரும், பெருமையுள்ள தென்பது, தெளிவாகின்றது.

**உணர்ச்சியின் ஊற்று**

காட்சியின்பங்களாலும், கேள்விச் செல்வங்களாலும், உள்ளத்தில் உணர்ச்சி யுண்டாகிறது. அவ்வுணர்ச்சி, மனத்தில் இடம்பெற்றிருந்து, சிறிது பெரிதாகித் திடம்பெறுகின்றது. ஆகவே உணர்ச்சிக்கு ஊற்றுவாய் எது? உலக நிகழ்ச்சிகளே. ஒரு சிறு இடத்தில் நிகழும் நிகழ்ச்சிகளேத்தான், கண்களினுல் காண முடியும். கண்களுக்கெட்டாத மிகு தொலேவில் நிகழும் நிகழ்ச்சிகளேயும், கேள்வியினுல் தெளிய முடியும் அல்லவா? இதனுல் காட்சியால் பெருகும் ஊற்றைவிட, கேள்வியில் உணர்வுற்ற பெருவெள்ளமாகப் பெருக்கெடுக்கின்றது. மனத்தில் இந்த உணர்ச்சி நலம் நிறைய நிறைய, அந்நலம் பெருகும் மக்கள் தேவர்களாகித் திகழுகிருர்கள். தேவர்கள் மக்களுக்கு எளிதில் தோன்றுகின்றவர்களல்லர். ஆதலால், அவர்களால் எந்நலங்களேயும் எளிதில் பெற முடிவதில்லே. - மக்களாக நம்மிடையில் தோன்

றிக், கேள்வியால் மேன்மையுற்ற, நம்மிடையிலேயே வாழும் இத்தேவர்களால், நாம் எளிதாகப் பல நன்மைகளையெய்தலாம். "செவியுணர்வி்ற் கேள்வியுடையார் அவியுணவின் ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து"

அவியுணவிற்கு ஆசையுறும் அவ்வுலகத்துத் தேவர்கள், என்றுமே ஒரு வரையறைக் குட்பட்டவர்களாம். அவர்கள் எண்ணிக்கை, எந்நாளிலும் பெருகுவதைக் காணேம். "முப்பத்து முக்கோடி-முப்பத்து முக்கோடி" யென்றே அவர்களையெந்நாளிலும் நூல்கள் இசைக்கின்றன. செவியுணர்வாற் சிறக்கும், இந்நிலத்துத் தேவர்களுக்கோர் எல்லையில்லையாம். அவர்களே கற்றும் கேட்டும், கீழ்மைகள் துறந்து மேன்மைகள் நிறைந்த, மேலவராகின்றார். "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று."

இதுவரை, உயிர்களுக்கு உணர்வுப் பசியைத் தோற்றுவித்து, பெற்றுழிப் பெற்றுழி அவற்றை ஒன்று சேர்த்து, அவ்வுணர்வை அழியாமல் காத்து வளர்த்தளித்து, மக்களை வானவராக்கும் மாண்பு, மனத்திற்குண்டென்பதனைக் கண்டோம். செவிகளின் வழியாக, மக்கள் மனத்தில் பாயும் உணர்ச்சி வெள்ளத்தின் இருப்பிடம் எது, என்பதனை யெண்ணினல், நிலை பேறுள்ள பெரு நூல்களே முன் வந்து நிற்பனவாம். இப்படி உணர்வூற்றெடுத்து, வற்றாத வாறுறுகள், ஆயிரம் ஆயிரம் பாயும் அறிவுப் பெருமலை ஒன்றுண்டு. அதுதான், **வேதவியாசா** என்னும், திருப்பெயரால் சுட்டப்பெற்றுத் திகழ்வது.

**வேதம் :**

பாரத நாட்டிற்கு வந்த பாதிரிமார்கள், பைபிளைப் பைபிளென்று சொல்லுவதில்லை. அவர்கள் அதனைக், கிறிஸ்த்து வேதம் என்றே கூறுகிறார்கள். உலக அறிஞராகிய, வள்ளுவரின் தெள்ளிய திருக்குறளைச் சிறப்பிக்கவரும் பெருமக்களும், திருக்குறளைத் "தமிழ் மறை" யென்று சாற்றுகின்றார்கள். இவற்றால், பைபிள் திருக்குறள் என்ற இயற் பெயர்களோடு, வேதம் மறையென்ற, சிறப்புச் சொற்களும் சேர்க்கப்பெற்றால், மக்களின் உள்ளத்தில் அந்நூல்களின் மாண்பு, எளிதாகப் பதிகின்றதென்பதல்லவா இப் பெரியவர் எண்ணம்? அறிந்தவர்களோ அறியாதவர்களோ, பாரத நாட்டில் தோன்றிய மக்கள் அனைவருக்கும், தொன்மையானதும் சிறப்புள்ளதுமான ஒரு நூலுண்டு, அதன் பெயர் வேதம் என்ற கருத்து, அழிவற்றதாக அமைந்திருக்கிறது.

வேதம், வடமொழியிலுள்ளது. வடமொழி, அக்காலத்தில், உலகத்து அறிஞர்கள் எல்லோராலும், கையாளப் பெற்றிருந்த, ஒரு பெருவாழ்வுள்ள மொழி. பல்வேறு மொழிகளில் ஆற்றல் பெற்றிருந்த அரும்பெரும் ஆன்றோர்களெல்லாம், தாங்கள் ஒருவரோடு ஒருவர் உறவாடுவதற்கு, உதவுபடியாக இருந்த மொழி அது. தங்கள் தங்கள் தாய் மொழிகளோடு, ஆங்கிலமும் தேர்ந்த அறிஞர்களை, இக்காலத்தவர் எப்படி மதிக்கின்றனரோ, அப்படி மதிக்கப் பெற்று வைகினர், அக்காலத்தில் வடமொழிவல்ல மாண்பினர். முன்னர் நாம் ஆய்ந்த முறைமையால், நுண்மாண் நுழைபுல னுள்ள புலவர்களை, மண்ணுலகத்துத் தேவர்கள் எனவும் மக்கள் வழங்கி வந்தார்கள், தம்மில் உயர்ந்தவர்களுக்குத் தக்கோர் வரையும் வரைவெல்லாம், தேவரீர்!! என்னும் விளிப்பொடு தொடங்கும் வழக்கம், இன்றும் இருக்கின்றது. இதனை எளியவர் வழக்கியலெனத் தள்ளிவிடுவதற்கில்லை. "தேவா நின்னடி சேவிக்க வந்தனன் நாவாய் வேட்டுவன் நான், **குகன்** என்றனன்" என உரைக்கும் கம்பரும், இவ்வழக்கியலைக் கையாள்வதனைக் காணலாம். ஒவ்வொரு மொழியிலும், உயர்ந்தவரெல்லாம் ஒருங்குறப் பயின்ற உயர்வுடைத்தாதலின், புலவர்கள்-தேவர்கள், அத்தேவர்கள் பயிலும் ஒரு மொழி, தேவமொழியெனச் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்திருந்தது வடமொழி. அன்று அம்மொழியில் சிறந்து, பழமையுற்று" ஓதி

ஓதி உணருந்தோறும் உணர்ச்சி யுதவும்'' நூலாக விளங்கி நின்றது வேதம். அவ் வேதத்தைத் தேர்ந்த, மேதைகள் போற்றும், போதத்தில் மிக்க புண்ணியப் பொருப்பாக, நமது வேதவியாசர் வீற்றிருந்தார்,

**நுண்பொருள் நோக்கர்:**

வேதம் வியாசரால் செய்யப்பெற்றதல்ல. வேதத்தை வகைதொகை செய்தவர் வியாசர். அது கர்ம காண்டம் ஞானகாண்டம் என்னும் இருபிரிவுகளால் முடிவது. அதனுள் ஞானகாண்டத்தையே பல உருவங்களாக்கி, நாட்டிற்கு உதவிய உத்தமர் அவர். கற்றவர்பால் இக்காலத்தில் ஒரு அருவருக்கத்தக்க செயல்பரவிவருகிறது. விரிவுரை அரங்கிற்குவரும் புதியவர்கள், பழையவர்கள்மேல் ஏதாவது ஒரு குறைகூறுவது, இவர்களது நிறைவை நிலைநாட்டுவதாக, நினைக்கின்றார்கள். தம்பின்வருபவர்களும், இப்படித்தான் தம்மையிகழ்வார்களென்பதனைச், சிறிதும் சிந்திப்பதில்லை. இத்தகையவர்களால், பரிமேலழகர் படும்பாடு கொஞ்சமல்ல. ஆனால், புத்துரைகாணும் வித்தகர் எவர்முன்னும், பரிமேலழகர் இருப்பதைப் பார்க்கலாம். எங்கோ ஒரு திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை ஒன்றவில்லையென்றால், அதற்குக் காலத்திற்கும் குறைகூறிக் கொண்டுதிரிவதா? இச்சிறுகுறையால் ஒரு பெரியவர் தேடித்தந்த செம்பொருட் செல்வங்களை யெல்லாம் தெருவிலா எறிந்துவிடுகிறோம். எண்ணிப்பார்க்க வேண்டும்.

கடைக்காலிலுள்ள கல்லும் சுண்ணமும், கண்ணுக்குத் தெரிவதில்லை. மாடியின் கலசத்திலுள்ள பூச்சுப்பொருள் தான், கண்களைக் கவருகிறது. எது எதனால் வாழுகிறது. கடைக்கால் கலசத்தைத் தாங்குகிறதா? கலசந்தான் கடைக்காலைத் தாங்குகிறதா? நூல்கள் படியெடுக்கப் படியெடுக்கத் திருத்தம் பெற்றுத் திகழ்வது உண்மையே. திருத்தம் செய்து சிறப்பிப்போர் முதல் நூலைப் பழிக்கக்கூடாது. இப்பெரிய கருத்து வியாசரிடத்தில் எவ்வளவு சிறந்திருக்கிறது என்பதை நோக்க வேண்டும். வேதவியாசர் செய்தளித்த நூல்களை யொருபக்கம், அவருக்கு மூலநூலான வேதத்தை ஒருபக்கம் எழுதிவைத்தால், ஒரு பனையின் பக்கத்தில் ஒரு தினையை நட்டதுபோலல்லவா தெரியும். இவ்வளவு நூல்களைப் படைக்கும் ஆற்றல் படைத்த அண்ணல், முன்னோருக்கு எவ்வளவு முதன்மைதந்து போற்றுகிறார். வேதத்தில் கடுகளவாகத்தோன்றும் கருத்துக்களை யெடுத்து மலையளவாகக் காட்டும் இவர் தம் நுண்பொருள் நோக்கம் எவ்வளவு கூர்மையுடையது.

**பரந்த பார்வையர்:**

'வேதத்தை வேதியர் படிக்கலாம் வேற்றவர் படிக்கக் கூடாது, வேதியருள்ளும் மாதர்கள் படிக்கக் கூடாது' என்ற வரம்புகள், வியாசர் தோற்றத்திற்கு முன்பே யிருந்தவை. வியாசர் பராசரருக்கும் ஒரு வலைச்சிக்கும் பிறந்த மகன், என்ற சிறுமொழி, அப்பொழுதே பேசப்பட்டது என்றால், வியாசர் பிறந்தா சாதி பேதத்தை உண்டுபண்ணினார். வேதத்தை மற்றவர் படிக்கக்கூடாது என்ற வழக்கத்தை மாற்றவேண்டுமானால், இரண்டு தடைகளை நீக்க வேண்டும். ஒன்று, படிக்க உரிமைகொண்டிருந்தவர்களை, மற்றவர்களையும் படிக்க விடும்படிச் செய்ய வேண்டும். மற்றொன்று, அதுவரை படிக்காதிருந்து வந்தவர்களையும், அதைப் படிக்க ஒப்புக்கொள்ளச் செய்யவேண்டும். இதில், கைப்பற்றிக் கொண்டிருந்தவர்கள், கனமான ஊதியங் கிடைக்கின்றதென்றால், ஒருவேளை விட்டுக்கொடுக்கவும் இசைவார்கள். படிக்காதவர்களைப் படியுங்கள் என்றால், அது பாம்போ தேளோ ஒருவருக்கே உரியவொன்றை நாம் தொடப்போனால், நமது குடி வாழுமோ தாழுமோ, என்ற பயத்திற்குட்பட்டு அடியோடு மறுப்பதும் உண்டு. அறியாமையில் மூழ்கியவரை, அறிவுடையவராக்குவது எளிய செயலல்ல. இப்பெருஞ் செயலில் இறங்கினர், பெருமனம் படைத்த வியாசர்.

அவர் வேற்றுமையின்றி யாவரும் கற்க எண்ணற்ற நூல்களை இயற்றினர். வேதத்தில் உள்ள யாகம் முதலிய சடங்குகளின் அளவில் நிற்பதல்ல, வியாசர் வழங்கும் அரும்பெருங் கருத்துக்கள். அவை வேதத்திற்கும் வழிகாட்டியாக வயங்கும் வீடு பேற்றிற்குரிய கருத்துக்களேயாகும். ஒரு அறிஞன் வேதத்தைப் படித்து, உள்ளத்தின் ஒருமைப்பாட்டிற்த வழி காணுவது அருமை. ஆனல், வியாசர் செய்த பெருநூல்கள், அருகிய பொருள்களைப் பெருகிய விளக்கத்துடன் காட்டுவதைத், தெரிந்து தெளிய முடியும்.

வியாசர், சிறந்த அறிஞர்களுக்கு மாத்திரம் நூல் செய்யவில்லை. கற்கப் புகும் எளிய அறிவினரையும், அணைத்தழைத்துப் பேரறிஞராக்கிப், பெருமை தரும் வகையில், அவர் தமது நூல்களைப் படிப்படியாக அமைத்து வைத்திருக்கின்ருர். ஒரு சமையல் தொழிலாளர், அவர் சமைத்த தனைத்தையும் மற்றவர் உண்டு சுவை கண்டு மெச்சுகின்றபொழுதுதான், தனது வேலை முடிந்ததாக எண்ணுவார். அதுபோல, ஒரு அரிய நூலைச் செய்தளிப்பவர், அதனை மக்கள் மகிழ்ந்து படித்து, ஏற்று இன்பமுறும்பொழுதுதான், தனது செயல் சிறப்புடையதுதான் என மகிழ்வார். அளவிடற்கரிய நூல்களையருளிய வியாசரும், உலகர் விருப்பத்தையே உற்று நோக்கி உழைத்தார்.

## அன்னையே அனையவர் :

சமயச் சண்டைக்கு வித்திட்டவர் வியாசர், சாதி வேற்றுமையை விளைவித்தவர் வியாசர், என்றெல்லாம் பேசுவதுண்டு. இப்பழிச் செயலின் வழி நிற்பவர் அவரல்லர். பாரத நாட்டுப் பண்டைய நூல்கள் எதைத் தொட்டாலும் வியாசருடையதாக விளங்குகிறது. அவ்வளவு கலைச் செல்வம் நிறைந்த ஒரு பேரறிஞர், நாட்டிற்குத் தீங்கிழைப்பதிலேயே கருத்தாக இருந்திருப்பாரெனக் கொள்வோமானல், கல்வியறிவிற்குப் பயன்தான் என்ன? அழிவதையும் ஆவதையும் முன்கூட்டியறிவது கல்வி. எத்துணை வளம்பெற்ற நாடும் வேற்றுமை சிறிது இருக்குமானலும் அது விளங்குவதில்லை. நாடழிந்தால், அதிலுள்ள கலைச் செல்வமும் அழிந்துவிடும். செல்வத்தைத் தேடி வைப்பவர் அதை வைத்து வாழும் செல்வ மக்களையும் தேடி வைப்பது இயல்பு. அளவிலாத நூல்களை ஆக்கி வைத்தவொரு அண்ணல், அதைப் படித்துப் பயனடையத்தக்க மக்களைச், சாதியின் பெயராலும் சமயத்தின் பெயராலும், சண்டையிட்டுச் சாக்காடடையவும் வழி வகுத்தாரென்பது, எங்ஙனம் பொருந்தும்? எண்ணுதல் வேண்டும்.

அக்கினியைச், சூரியனை, அயனை, அரியை, அரனை, அம்பிகையை, கணபதியை, அறுமுகனை, யெல்லாம், தனித்தனியாக அவர் சிறப்பிப்பார். ஒரு தெய்வத்தைச் சிறப்பிக்கும்பொழுது, அதற்கு மேல் ஒரு தெய்வமும் இல்லையென அவர் உறுதி கூறுவார். இது வியாசர் மரபு. இதற்கு மக்கள் காணும் உரை, வேற்றுமையை விளைவித்தாரென்பதா? ஒரு பெரிய குடும்பத்தில் மூன்று பெண்களும் ஒரு ஆணும் பிறந்து வளர்ந்தார்கள். முறையாக உற்ற வயதடைந்த காலங்களில் ஒவ்வொரு மணளனுக்கும் மணஞ் செய்து கொடுத்துப் பெண்கள் மூவரையும் வாழ வகை செய்துவிட்டார்கள், அவர்களின் தாய் தந்தையர். மூத்த மகள் உழவுத் தொழிலில் சிறந்த தனது சொந்த அம்மான் மகனுக்கு வாழ்க்கைப் பட்டாள். அடுத்தவள் அளவற்ற ஆக்கமுள்ள ஒரு வாலிபனை மணந்து சென்ருள். இளையவள் இணையற்ற ஊதியம் பெறும் ஒரு அரசாங்க ஊழியனுக்கு வாழ்க்கைத் துணைவியாக மன்னினள். சில ஆண்டுகள் சென்றபின் இவர்கள் மூவருக்கும் இளையவனுக்குத் திருமணஞ் செய்யப் பெற்ருேர்கள் நாள் கொண்டார்கள். மூத்த மகளும் மருமகனும் பல நாள் முன்னரே வந்திருந்து எல்லா வேலைகளையும் பார்த்துக்கொண்டார்கள். திருமணத்திற்கு முதல் நாள்தான் இரண்டாம் மகளும் கணவனும் எய்தினர்கள். திருமண நேரத்திற்குத் தடபுடலாக வந்து சேர்ந்தாள் இளையவள் தனது காளைப் பருவமுள்ள கணவனேடும். திருமணம் முடிந்ததோ இல்லையோ

மனைவியைப் புறப்படு என்றான் இளைய மருமகன். பெண் கண் கலங்கினாள், அவளது இளம் பருவத் தோழிகளோடு அளவளாவ அவளுக்கு நேரம் போதவில்லை. காரசாரமான தனது கணவனது முடுக்கு அவளுக்குப் பிடிக்கவில்லை. தனித்துச் சென்று தாயிடம் நின்று வருந்தினாள் அவள்.

அறிவில் மிக்க அவளுடைய அன்னை சொன்னாள்; "மகளே!" இவ்வளவு நேரமாவது அவர் உன்னை அழைத்துக் கொண்டுவந்து எங்களுக்குக் காட்டினாரே, உன்னை மணந்த அவருடைய மரியாதை உனக்குத் தெரியவில்லையா? உனது தமக்கைமாரும் நாங்களும் உனக்குக் கிடைத்த மேலான வாழ்க்கையைப்பற்றி யெவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறோம், புறப்படம்மா! உனக்குப் புடவையும் அவருக்குச் சட்டைகளும் உங்களப்பா தாம் பூலத்தோடு அதோ தயாராக வைத்துக் கொண்டு காத்திருக்கிறார். உங்களுக்கென்ன, வாகனமுள்ளவர் வழிக்கஞ்சப் படுபவரல்ல, நினைத்தால் வரலாம் போகலாம் என மகிழ்வுபடக் கூறினாள். இளைய மகள் தனது தாயின் உரையினால் தனது கணவன் பெருமையை யறிந்து மகிழ்வோடு புறப்படலானாள்.

வணிக மருமகன் மாலை நேரத்தில் புறப்பட்டனன், நடு மகளுக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக இரண்டு மக்களுண்டு. அவர்கள் பாட்டியார் வீட்டு மண மகிழ்ச்சிக்கு முதல்வர்களாக மன்னுகிறார்கள். அவர்களைத் தேடிப் பிடித்துக்கொண்டு வெளிவருவது அவளுக்குப் பெரிய வேலையாக இருக்கிறது. கணவனோ காரை முடுக்கிவிட்டு வந்தாயிற்று என்கிறான். என்ன செய்வாள் பாவம். தாயை நோக்கினாள். இவருக்கென்ன அரசாங்க அலுவலா? ஒரு நாள் தங்க வேண்டுமென்றால் யாரிடத்திலாவது உத்தரவா வாங்கவேண்டும்? இப்படி துடிக்கிறாரே, அவர் அப்போதே போய் விட்டாராம், இன்னுமிருப்பது இவருக்கு மரியாதைக் குறைவாம், நல்ல இடம் பார்த்து என்னைத் தள்ளி வைத்தாயே அம்மா, என்று வருந்தினாள் அவள்.

அது கேட்ட அன்னை "ஏனம்மா. உனக்கென்ன பைத்தியமா? அவர் போய் விட்டாரென்று இவர் புறப்படுகிறார். அவர் பொறுப்பென்ன இவர் பொறுப்பென்ன? 'மாடு மேய்த்தோமாம் கோலைப் போட்டோமாம்' என்று முடிந்து விடுகிறது அவரது உத்யோகம். வரவிற்கும் செலவிற்கும் பொறுப்பாளி இவர். இந்நேரம் எத்தனை பேர் வந்து கடை முன்னர்க் காத்துக் கிடக்கிறார்களோ? மிகுந்த செல்வம் உள்ளவர்கள் எங்கும் இராத் தங்க முடியாது. நகையும் தொகையும் உள்ள வீட்டை விட்டுவிட்டுத்தான் எப்படியம்மா துணிகிறாய் இராத்தங்க" என்று அவளது கணவனின் செல்வச் சிறப்பை நினைவூட்டினாள் அன்னை. ஆமாம் என்று அகமகிழ்ந்து புறப்பட்டாள் நடுமகள். திருமணம் முடிந்து கொட்டகையும் பிரித்து அவரவர்கள் பொருள்கள் அவரவர் வீடு சேர்ந்த பின்னர், வண்டி பூட்டப்பெற்று வெளியில் நிற்கிறது, ஏன் புறப்படலாமே யென்றான், பெரியவளை மணந்த பெருந்தகை. மண வேலையெல்லாம் தலையில் போட்டுக்கொண்டு செய்தவள், பல நாட்களாக இராப்பகலாகக் கண் விழித்தவள். ஏனம்மா வருகிறோமேயென்று தாயிடம் சொல்லிப் புறப்படுகிறாள். அவளது ஏக்கமிக்க ஓசை அவளது எண்ணங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது. எங்களுக்கென்ன மணிக்கு அறுபது மயிலாகப் பறக்கின்ற ஊர்தியா? அதிகாரமா? பணக்குவியலா? என்ற ஏக்கக் கருத்தையெல்லாம் காட்டிற்று அவளது இரக்க இசை.

நுண்மதியுள்ள தாய் "என்ன அம்மா! என்ன எண்ணுகிறாய், உலகத்து வாழ்விற்கெல்லாம் அடிப்படையான வாழ்வு உங்கள் வாழ்வுதான். என்றும் மாறாத இருப்பிடம் உங்கள் இருப்பிடம்தான். மாற்றின இடத்திற்குப் பறக்கிறவர் உனது இளைய தங்கையின் கணவன், விலையுள்ள இடத்தில் கடை பரப்ப நினைப்பவர் உனது பெரிய தங்கையின் கணவனார். உங்கள் நிலை என்றைக்கும் மேழிச் செல்வம் கோழைபடாது என்றபடி நிலைபேறுள்ளதல்லவா என நினைப்பித்தாள்.

அவள் அநுபவம் மிக்கவள், புக்ககமும் பிறப்பகமும் ஒன்றென எண்ணும் பெருமிதத்திற்கு வந்தவள். ஆதலால் தாய் சிறிது நினைப்பூட்டியவுடன் தங்கள் மேன்மையை நினைந்து மகிழ்ந்து புறப்பட்டாள். திருமணச் செயல்கள் எல்லாம் நறுமணமாகச் சிறந்து முடிந்தன. இதைவிட்டு ஒவ்வொரு மகளும் தன் கணவனுக்குள்ள பெருமையை மறந்து மிகச் சிறிய சிறுமைகளைப் பெரிதாக்கிக் கொண்டு வருந்துகின்றபொழுதெல்லாம், அந்தத் தாயும் வருந்துகின்றவளாக இருந்திருந்தால், அந்த வீடு மணவீடாகவா இருந்திருக்கும்?

இந்த அரும்பெருந்தாய் எண்ணுவதென்ன? உலகம் ஒருபடித்தானதல்ல. ஒவ்வொரு செயலும் இயலும் சேர்ந்துதான் உலகம். பல்வேறு வகைப்பட்ட வேற்றுமைகளும் ஒற்றுமைக்காகவே விளங்குகின்றன. ஒவ்வொருவரும் அவரவருக்குக் கிடைத்த கணவனையும் அவனது சிறந்த பண்புகளையும் நினைத்து மகிழ்ந்திருந்தாலன்றி நலம் பெற வாழ முடியாது என்ற அருள் நீர்மையல்லவா? இந்த மாபெரும் அன்னையே அனையவர் தான் **வேத வியாசர்.** அவர் எந்தத் தெய்வத்திற்கும் இசைக்கும் முதன்மைப்பாடு ஒரே நிலையானதுதான். உறுதியாக ஒரு பொருளைப் பற்றிக்கொண்டு வழிபட்டால், அவரவர் பற்றிய உருவமும் பெயருங்கொண்டு, வரும் ஆற்றலும் அருளும் உள்ளது ஒரு பொருள் உண்டு, என்பதே யாகும். **வியாசர்,** ஒருவனே பல உருவங்களை வைத்துக்கொண்டு இதிலும் அதிலும் எதிலும் பற்றில்லாது, வழிபாடு செய்வதுபோலப் பாவனை செய்யுமாறு எங்கும் சொல்லவில்லை. இத்தகைய வேதவியாசர், மகாபாரதத்திற்கு ஆசிரியராகவும் அந்நூற் பண்போவியங்களுள் ஒருவராகவும் அமைகின்றார்.

—தொடரும்

---

**செய்திச் சுருக்கம்:**

**திருவள்ளுவர் வைகாசி அநுஷ விழா:** சென்னைத் திருமயிலைத் திருவள்ளுவ நாயனார் கோயில் திருப்பணிக் குழுவின் சார்பில், 11-6-65 வெள்ளிக்கிழமை மாலை, சென்னை மவுண்ட் ரோட் அரசினர் மாளிகைப் பாலர் அரங்கில், டாக்டர் திரு. மு. வரதராசனார், M.A.Ph.D., அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்புற நடைபெற்றது. மணலி திரு. S. இராமகிருஷ்ண முதலியார், B.A., அவர்கள் வரவேற்புரையும், நமது அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A.,B.L., அவர்கள் தொடக்கவுரையும் நிகழ்த்தினார்கள். 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. புலவர் N. R. முருகவேள், M.A.,M.O.L., துணை ஆணையர் திரு. D. இராமலிங்க ரெட்டியார், M.A., B.L., இராவ் சாகிப் திரு நல். முருகேச முதலியார், B.A., திருமதி ஜெயகுமாரி பாஸ்கரன் மாம்பாக்கம் குருகுலம் அருட்டிரு. அழகர் அடிகளார் ஆகிய பெருமக்கள் சொற்பொழிவுகள் ஆற்றினர். திரு. கு. அய்யா சுப்பிரமணிய முதலியார், J. P., அவர்கள் நன்றியுரை கூறினார்கள். விழா மிகவும் சிறப்புற நிறைவெய்தியது.

# மாசாத்தனார்

கோவை திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.

திருத்தொண்டர் புராணப்படி திருக் கயிலையில் அருளிச் செய்யப்பட்ட சைவத் திருமுறை நூல்கள் இரண்டு. ஒன்று சுந்தர மூர்த்திகள் அருளிச் செய்த திரு நொடித்தான் மலைத் தேவாரம். மற்றொன்று சேரமான் பெருமாள் நாயனார் அருளிச் செய்த திருக்கயிலாய ஞான உலா. இவ்விரண்டும் இறைவன் திருமுன் அரங்கேற்றப்பட்டன. அவ்விரண்டு திருமுறை நூல்களும் எப்படி தென்னாட்டிற்கு வந்தன என்பதைத் திருத்தொண்டர் புராணமே கூறும். சுந்தரர் அருள் செய்த ஏழிசைத் திருப்பதிகத்தை முந்நீர் ஆழி வேந்தனும் வருணனுக்கு உலகில் ஏற்றிட அளித்திட, அவனும் திருவஞ்சைக் களத்தில் உய்த்துணர்வித்தான். ஆகவே அத் திருப்பதிகம் கருங்கடல் மூலம் தென்னாட்டிற்கு வந்தது.

சேரமான் பெருமாள் அருளிச்செய்த திருவுலாவைத் திருக்கயிலையில் கேட்ட மாசாத்தனார் அதனை உலகோர் கேட்டிட வேதியர் வாழும் திருப்பிடவூர் தன்னில் வெளிப்படப் பகர்ந்தார். ஆகவே கயிலையில் அருளப்பட்ட இந்த இரண்டு திருமுறைநூல்களும் உலகோர்க்கு அறிவிக்கப்பட்ட முறையினைச் சேக்கிழார் வெகு தெளிவாகக் கூறியிருக்கின்றார். அப்பாடலை நினைவு கூர்வோம்;—

> வாழி மாதவர் ஆலால சுந்தரர்
> வழியிடை அருள் செய்த
> ஏழி சைத்திருப் பதிகம்இவ் வுலகினில்
> ஏற்றிட எறி முந்நீர்
> ஆழி வேந்தனும் வருணனுக்கு
> அளித்திட அவனும் அவ்வருள் சூடி
> ஊழி யிற்றனி யொருவர்தம் திருவஞ்சைக்
> களத்தி னுய்த்துணர் வித்தான்.
>
> (வெள்ளானை 51)

> சேரர் காவலர் விண்ணப்பம் செய்த
> அத்திருவுலாப் புறம் அன்று
> சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா
> சாத்தனார் தரித்திந்தப்
> பாரில் வேதியர் திருப்பிடவூர்தனில்
> வெளிப்படப் பகர்ந்தெங்கும்
> நார வேலைசூழ் உலகினில் விளங்கிட
> நாட்டினர் நலத்தாலே. (52)

முதற் செய்யுளில் திருநொடித்தான் மலைத் தேவாரத்தை வருணன் திருவஞ்சைக் களத்திற்குச் சேர்த்தித் தந்தான எனக் கூறியிருக்கிறது. கடல் மேற்கே யல்லவா இருக்கிறது. கயிலை திருவஞ்சைக் களத்திற்கு வடக்கே அல்லவோ இருக்கிறது. அதுவும் கடல் மீது வருவது என்றால் சிந்திக்கக்கூடிய ஒரு செய்தி. பிற சமயத்தவர்கள் நாயன்மார் மேற்கே கடலில் சென்றார் என்று கூறுவதற்கு இது ஒரு காரணம் ஆகுமோ ஆராய்க.

இரண்டாம் செய்யுளில் கயிலாய ஞான உலாவைக் கயிலையில் கேட்ட மாசாத்தனார் அதனைத் திருப்பிடவூரில் வெளியிட்டார் என்று கூறுகிறது. இதனைச் சற்று ஆராய்வோம்.

திருப்பிடவூர் என்ற தலத்தைத் திருச்சி மாவட்டத்தில், திருச்சி சென்னை நெடு வழியில் வடக்கே சென்று, அங்கிருந்து சிறிது மேற்கே ஒரு குறு வழியில் சென்றால் அடையலாம். அவ்வூரில் ஒரு பெரிய சிவாலயம் இருக்கிறது. தற்போது அவ் வூர்ப்பெயர் திருப்பட்டூர் என மருவி வழங்குகிறது. அவ்வூருக்கு வெளிப்புறத்தில் ஒரு உறுதியான கோயில் இருக்கிறது. அக்கோயில் நன்கு செதுக்கின கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. அதன் சுவர்களில் அரிய கல்வெட்டுக்கள்

பல இருக்கின்றன. அவைகளைப் படித்தால்தான் இவ்வூரின் பெயர் பிடவூர் என்றும், கோயிலின் பெயர் சாத்தனார் கோயில் என்றும் தெரியும். பொது மக்கள் இதனை மறந்து விட்டார்கள். கோயிலுக்குப் போவதும் இல்லை. வழிபடுவதும் இல்லை. அக்கோயில் நமது திருமுறைகளில் திருத்தொண்டர் புராணத்தில் கூறப்பட்டுள்ளதால் அதனைச் சீராக வைத்திருக்க வேண்டியது நமது கடமை.

திருவஞ்சைக்களம் சேரநாட்டில் உள்ள ஒரு பாடல் பெற்ற புனிதத்தலம். திருப்பிடவூரோ சோழநாட்டில் திருச்சி மாவட்டத்தில் உள்ளதொரு தலம். இரண்டிற்கும் இருநூற்றி இருபத்தைந்து மைல் தொலைவு இருக்கும். அந்தக் காலத்தில் இத்தனைத் தொலைவு அந்தத் திருவுலாக் கொண்டு வந்து உணர்த்தப்பட்டது என்றால் வியப்பே. மக்களுக்கு இலக்கியச் சுவை பெற்ற திருநூல்களை அறியவேண்டும் என்ற ஒரு சிறந்த நல்லுணர்ச்சி ஆயிரத்தி இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தது என்று அறிந்து மகிழலாம். இக்காலத்தில் ஆதி உலாவை எத்தனைபேர் படித்துப்பொருள் உணர்ந்து மகிழுகிறார்கள். அகப்பொருள் மிளிர்ந்த அவ்வுலாவைப் படித்து அதன் உள்ளுறையை அறியும் மக்கள் குறைந்திருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். மாசாத்தனார் அருளிய பேருதவி எவரே செய்தார்.

இனிச் சாத்தன் என்ற சொல் தமிழ் நாட்டில் மிகுதியாக வழங்குவதில்லை. ஏதோ ஒன்றிரண்டு ஊர்களுக்கு வழங்குகின்றன. நெல்லை மாவட்டத்தில் சாத்தன்குளம் ஒன்றும், வடஆற்காடு மாவட்டத்தில் சாத்தனூர்க் குளம் ஒன்றும் வெளிப்படையாக வழங்குகின்றன. கோயில்களில் மேலே சொன்ன பிடவூர்க்கோயில் ஒன்றுதான் தெரிகிறது. ஆட்கள் பெயர்கள் வெகுவாய் இல்லை. சிலப்பதிகாரத்தில் கோவலன் தகப்பன் பெயர் மாசாத்துவன் என்று காண்கிறோம். அது தெருக்கூத்தில் 'மாசோட்டான்' ஆகிவிட்டது. ஆனால் சங்க இலக்கியங்களில் சாத்தன் மிக வழங்கப்பட்டது. மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் என்று காண்கிறோம். கூல வாணிகன் சாத்தனார் என்ற பெயரினால் வாணிபர்கள் அப்பெயரை வைத்திருந்தார்கள் எனலாம். சாத்தன் பெயர்கள் மேற்கொண்டும் இருந்தன. சாத்தன் ஒரு ஊர்த்தேவதையாக வணங்கப்பட்ட தெய்வம் எனக் கூறவேண்டும்.

ஆனால் இந்நாளிலும் மலையாள தேசம் ஆகிய கேரளத்தில் சாத்தன் என்ற பெயர், தொழிலாளர்களுக்கும் உண்டு. தேவதைகளும் மிகவுண்டு. சபரிமலை சாஸ்தா, சோட்டானிக்கரைச் சாஸ்தா முதலிய பல புகழ்பெற்ற சாஸ்தாக் கோயில்கள் உள்ளன. ஐதீகப்படி அவைகள் ஐயப்பன் அல்லது ஐயனார் கோயில்கள் ஆகும். அய்யப்பன் வணக்கம் இக்காலத்தில் எங்கும் பரவினதன்றி நாடகமேடையும் ஏறிவிட்டது. அய்யப்பனை அரிஹர புத்திரன் என்று சொல்லும் புராணங்களும் ஐதீகங்களும் ஏற்பட்டுவிட்டன. இந்த வரலாறுகள் மலையாள நாட்டில் மிகுதியாக இருக்க, தமிழ் நாட்டில் இருந்தனவோ என்று கேட்கலாம். தற்கால மலையாளச் சொற்கள் முற்காலத் தமிழில் இருந்ததை நாம் அறிவோம். அந்தச் செய்தியை நாம் காணும்போது சாத்தன் என்ற பெயர் மலையாளத்தில் இப்போது பிரசித்தியாக இருக்க, முன்னாளில் தமிழ் நாட்டில் சிறந்திருக்கவேண்டும் என்று எண்ண இடமிருக்கும் அல்லவா!

"பார்த்தனுக் கருளும் வைத்தார்
பாம்பரை ஆட வைத்தார்

சாத்தனை மகனா வைத்தார்
சாமுண்டி சாம வேதம்

கூத்தொடும் பாட வைத்தார்
கோளரா மதியம் நல்ல

தீர்த்தமும் சடைமேல் வைத்தார்
திருப்பயற் றூர னாரே"

எனவரும் தேவாரப் பாடலில், மாசாத்தனார் சிவபிரானின் திருமகனார் ஆவர் என்று, திருநாவுக்கரசு சுவாமிகள் குறிப்பிட்டிருத்தல் அறிந்து இன்புறத் தக்கதாகும்.

# வடதிருச்சிற்றம்பலம் - கல்வெட்டுக்கள்

[டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனுர்.]

மதுராந்தகத்தில் திரு அயோத்திப் பெருமான் (கோதண்டராமர்) கோவில், கடப்பேரி-திருவெண்காட்டீசர் கோவில், திரு அருணாசலேசுவரர் கோவில், திரு ஏகம்பமுடையார் கோவில், வடதிருச்சிற்றம்பலம் கோவில் என்பன சோழர் காலத்தில் இருந்தன என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இன்று, முதல் மூன்று கோவில்கள் நன்னிலையில் உள்ளன. திரு ஏகம்பமுடையார் கோவில் இருந்ததை வெண்காட்டீசர் கோவில் கல்வெட்டு ஒன்று கூறுகிறதே தவிர, அது பற்றிய வேறு விவரங்கள் அறியத்தகும் சான்றுகள் இப்போது கிடைக்கவில்லை. காசிப் பாட்டையை அடுத்த வயலில் உள்ள பெரிய லிங்கமும் அப்பாட்டையில் உள்ள பெரிய நந்தியும் அக்கோவிலைச் சேர்ந்தனவாயிருக்கலாம். வடதிருச்சிற்றம்பலம் கோவில் இன்றுள்ள குமரவேள் மேட்டில் அமைந்திருந்தது. அங்கு இன்றும் லிங்கமும் முருகன் சிலையும் நன்னிலையில் உள்ளன. பெரிய கோவில் இருந்தமைக்குரிய அடிப்படைக் கற்கள், உறை கிணறுகள் முதலியன காணப்படுகின்றன. "இக்கோவில் சிலைகளுள் சில மேட்டுத்தெருப்பிள்ளையார் கோவில் முன் புறத்தில் உள. இக்கோவில் கற்களைக் கொண்டே கி.பி 1798இல் மதுராந்தகப் பேரேரியின் படிக்கட்டுகளும் மதகுகள் இரண்டும் கலிங்குவும் கட்டப்பட்டன. இக் இக்கோவில் கல்வெட்டுக்கள் அவ்விடங்களில் உள்ளன" என்று ஊர் முதுமக்கள் மொழிகின்றனர்.

அவர்கள் கூறுவது உண்மையா? அவர்கள் கூறிய இடங்களில் 48 கல்வெட்டுத் துண்டுகள் கிடைத்துள்ளன. அவற்றில் மூன்றில் வடதிருச்சிற்றம்பலம் என்னும் கோவிற் பெயர் காணப்படுகிறது. மதகுகளில் வள்ளியம்மை, இராஜராஜசோழன் காலத்து இலக்குமி போன்ற சிலைகள் பதிக்கப்பட்டுள்ளன. கோவில் கருவறையின் வெளிப்புறத்தில் வைத்துக் கட்டப்படும் குறுகிய அகலமுள்ள கருங்கல் வரிசை, பெரிய மதகில் கல்வெட்டுடன் காணப்படுகின்றது.

கலிங்குவில் உள்ள பல கற்கள் வேலைப்பாடு அமைந்தவை. அவை கோவிற் கற்களே என்பதை அறிவுடையோர் அவற்றைப் பார்த்தவுடன் ஒப்புக்கொள்வர். அங்குள்ள கற்களிலும் எழுத்துக்கள் உள்ளன. இந்த 48 கல்வெட்டுத் துண்டுகளிலும் உள்ள எழுத்துக்களைக் கொண்டு சோழர் கால மதுராந்தகம் பற்றியும் வடதிருச்சிற்றம்பலம் பற்றியும் சில செய்திகளை அறியலாம்.

## இக்கல்வெட்டுக்கள் உணர்த்தும் செய்திகள்

### முன்னுரை

மதுராந்தகப் பேரேரியின் படிகளிலும் கலிங்குவிலும் மதகுகளிலும் பிற இடங்களிலும் சிதறியுள்ள 48 கல்வெட்டுத் துண்டுகளுள் ஒன்றேனும் முழுக் கல்வெட்டுச் செய்தியைக் கொண்டதாயில்லை. 5, 8, 20, 21, 47-ஆம் எண்களைக் கொண்ட ஐந்து கல்வெட்டுக்களில் மெய்க்கீர்த்தியின்[1] தொடக்கம் காணப்படுகிறது. அவற்றுள் 20, 47-ஆம் எண்களையுடைய கல்வெட்டுக்கள் இரண்டே அரசன் பெயரை வெளிப்படையாகக் கூறுவன. மற்றவை அரசன் பெயர் சிதைந்த நிலையில் உள்ளவை. 8, 16-ஆம் எண்களைக் கொண்ட கல்வெட்டுத் துண்டுகளில் கல்வெட்டு முடிவு காணப்படுகிறது. 39-ஆம் எண்ணுள்ள கல்வெட்டு முதலாம் இராசராசன் மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதியாகும். 26, 42, 45-ஆம் எண்களைக் கொண்ட கல்வெட்டுப் பகுதிகள் முதலாம் இராசராசன் மகனை முதலாம் இராசேந்திரன் மெய்க்கீர்த்தியைச் சேர்ந்தவையாகும். 2-ஆம் எண்ணைக் கொண்டுள்ள கல்வெட்டின் தொடக்கம் வீரரா

சேந்திரனைக் குறிப்பதென்று உத்தேசமாகக் கூறலாம். 21-ஆம் கல்வெட்டுத் தொடக்கம் இதுவரையில் கிடைத்துள்ள எந்தச் சோழன் கல்வெட்டிலும் இல்லாததாகும். இது விக்கிரம சோழன் காலத்ததென்று உத்தேசமாகக் கூறலாம். 40-ஆம் எண்ணுள்ள கல்வெட்டு எந்த அரசனது என்பது தெரியக்கூடவில்லை.

இவைபோக எஞ்சியுள்ள கல்வெட்டுக்கள் கோவில் அறங்களைப் பற்றிக் கூறுவன. அவற்றில் அரசன் பெயர் இல்லை; அறம் செய்யப்பட்ட காலம் இல்லை; அறம் செய்தவர் பெயர் இல்லை; அரைகுறையாகச் சில செய்திகளே உள்ளன. இக்குறைபாடுகட்குக் காரணம், எழுத்துக்களையுடைய பிற கற்கள் தலைகீழாகப் படிக்கட்டு முதலிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கலாம் என்பதேயாகும். வீட்டுக் கிணறுகளிலும் பிற இடங்களிலும் கல்வெட்டுத் துண்டுகள் இன்றும் இருத்தலை நோக்க, அழிந்த கோவிலின் கற்கள் கேட்பாரற்ற நிலையில் பலவாறு எடுத்துச் சென்று பயன்படுத்தப் பட்டன என்பது தெரிகிறது.

இவற்றுள் மூன்று கல் துண்டுகளில் வடதிருச்சிற்றம்பலம் என்னும் சிவன் கோவிலின் பெயர் தெளிவாகக் காணப்படுவது சிறப்புச் செய்தியாகும். மதுராந்தகத்தில் உள்ள பெருமாள் கோவிலும் திருவெண்காட்டீசர் கோவிலும் அருளாளேசுவரர் கோவிலும் இன்றளவும் நன்னிலையில் இருத்தலால் இச்சிதறுண்ட கல்வெட்டுத் துண்டுகள் அவற்றைச் சேர்ந்தன என்று கூறுதல் இயலாது. திரு ஏகம்பமுடையார் கோவிலைக் குறிக்கும் கல்வெட்டுச் செய்திகள் இந்த 48 துண்டுகளிலும் இல்லை. எனவே, இவை அழிந்து மறைந்த வடதிருச்சிற்றம்பலம் என்ற சிவன் கோவிலைச் சேர்ந்தவை என்று கொள்வதே பொருத்தமாகும்.

[1] மெய்க்கீர்த்தி என்பது, அரசனுடைய போர்ச் செயல் போன்ற சிறப்புக்களை எடுத்துக் கூறும் பகுதி. இது கல்வெட்டிலோ செப்பேட்டிலோ முதலில் அமைந்திருக்கும்.

இனி இக்கல்வெட்டுத் துண்டுகளில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு அறியலாகும் அரசர், அரசாங்க உயர் அலுவலர், ஊரவை, கோவில் அறம், நீர்ப்பாசனம், அளவைகள், மக்கட் பெயர்கள் முதலியன பற்றிய விவரங்களை இங்குக் காண்போம்.

### அரசர்கள்

கி பி. 9-ஆம் நூற்றுண்டின் இறுதியிலிருந்து 13-ஆம் நூற்றுண்டின் இறுதிவரையில் தமிழகப் பேரரசராய் இருந்த சோழமன்னருள் நால்வர் இக் கல்வெட்டுத் துண்டுகளில் இடம் பெற்றுள்ளனர்.

| | |
|---|---|
| இராசராசன் 1 | கி.பி. 985–1014 |
| இராசேந்திரன் 1 | கி.பி. 1012–1044 |
| வீர ராஜேந்திரன் | கி.பி.1063–1044 |
| விக்கிரம சோழன் | கி.பி.1118–1135 |

### உயர் அலுவலர்

சோழ மன்னர், தம் ஆட்சியில் உயர் அலுவலராயிருந்தவர்க்கு, அவர்தம் ஆற்றலையும் ஊழியத்தையும் மதித்துப் பல பட்டங்கள் வழங்கினர். அவை மாராயன், அரையன், பேரரையன், விழுப்பரையன், விழுப்பேரரையன், மூவேந்த வேளான், காடவராயன், கச்சிவராயன் முதலியன. இவற்றுள் காடவராயன் (5), விழுப்பரையன்[2] (13), மூவேந்தவேளான் (24) என்ற பட்டம் பெற்ற அரசியல் உயர் அலுவலர் இக்கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளனர். "இவ்வூர்க் காடவராயன்" (5) என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டிருத்தலால், அந்த அதிகாரி நிலையாக இருந்தான் என்பது பெறப்படும்.

மூவேந்தவேளான் என்பவன் பெரிய அதிகாரி. இவன் முன்னிலையில் உத்தரமேரூர் ஊரவையார் ஊரவைக்குரிய விதிகளை அமைத்தனர் என்று அவ்வூர்க் கல்வெட்டு உரைக்கின்றது. மதுராந்தகத்திற்கு அத்தகைய ஒரு வேலையை முன்னிட்டு இராஜசூளாமணி மூவேந்த வேளான் என்பவன் வந்திருந்தான் (24) என்று கருதலாம்.

[2] விழுப்பரையன்புரம் காலப்போக்கில் விழுப்புரம் என மருவி வழங்குகிறது என்பது இங்கு அறியத்தகும்.

திருமந்திர ஓலை (36) என்பவன் அரசன் திருவாய் மொழிந்தருளின ஆணைகளையும் செய்திகளையும் நேரில் கேட்டுவந்து அவ்வப்போது ஓலையில் எழுதும் அதிகாரியாவான்.

அரசு ஆண்டுதோறும் குடிகளிடம் நிலவரி வாங்க நியமித்த அலுவலர் ஆகியவரைக் கொண்ட நிறுவனம் புரவுவரித் திணைக்களம் எனப்பட்டது. நிலவரி வசூலித்த சாதாரண அலுவலன் 'புரவு வரி' எனப்பட்டான். மதுராந்தகத்தில் அப்பணி செய்துவந்தவன் புரவுவரிச் சிறு குடாரையன் என்பவன் (35).

ஊராட்சி மன்றம்: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர் சதுர்வேதிகள் எனப்பட்டனர். அவர்கட்கு விடப்பட்ட ஊர் சதுர்வேதிமங்கலம் எனப் பெயர் பெற்றது. மதுராந்தகன் என்ற முதற் பராந்தக சோழனால் விடப்பட்ட ஊர் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் (4) எனப் பெயர் பெற்றது. அப்பெயரே குறைந்து இன்று மதுராந்தகம் என வழங்கப்படுகிறது. எனவே இவ்வூரில் பிராமணரே ஊராட்சி மன்றத்தை நடத்தியவராவர். அவர்களது பொதுச்சபை பெருங்குறி சபை (7) எனப்பட்டது. மதுராந்தகத்தில் பல சேரிகள் (வார்டுகள்) இருந்தன. ஒவ்வொரு சேரிக்குள் ஒருவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாரைக் கொண்டதே ஊர் அவை. இதுவே பெருங்குறிசபை. அவ்வுறுப்பினர் ஊராட்சி முறைக்கு ஏற்பப் பல உட்குழுவினராகப் பிரிந்து வேலை செய்தனர். அவ்வுட்குழு 'வாரியம்' எனப்பட்டது; உட்குழுவினர் வாரியர் எனப்பட்டனர். உத்தரமேரூரில் சம்வற்சரவாரியர், ஏரிவாரியர் தோட்டவாரியர், பொன்வாரியர், பஞ்சவாரவாரியர் எனப் பல உட்குழுவினர் இருந்தனர். அத்தகைய உட்குழுவினர் மதுராந்தகத்திலும் இருந்திருத்தல் கூடும் என்பது "........வாரியரும் பிரமாசநத்தவரும்"[3] என்னும் தொடர் கொண்டு தெளியலாம்.

ஊராட்சி மன்றம் சபை எனப்பட்டது. "சபையார்" (3) "சபையும்" (19) என்பன மதுராந்தகத்து ஆட்சிமன்றத்தாரையும் ஆட்சி மன்றத்தையும் குறிப்பனவாகும். ஊராட்சி நடைமுறைகளை எழுதியவன் கணக்கன் (7). நிறை ஓலை (10) என்பது குறிப்பிட்ட ஒன்றின் முழுச் செய்தியைக் கொண்ட பத்திரம் ஆகும். விலை ஓலை (33) என்பது, விற்பனைப் பத்திரம் (Sale Deed). அறை ஓலை (35) என்பது, ஒன்றனை வரையறை செய்யும் பத்திரம். "நாங்கள் கைக்கொண்ட மாடைக்குலார் இசைவுக்குச் சபையார் செலுத்தக்கடவோம்" (8) என்ற தொடர், சபையார் ஓர் அறத்தைச் செய்ய உடன்பட்டு அதற்குரிய பொருளை ஒருவரிடம் பெற்றதை உணர்த்துகிறது.

மத்யஸ்தன் என்பவன், ஊரவைக்கூட்டங்களில் செய்யப்படும் முடிவுகளை ஊரவையார் நடுவில் இருந்து அவர்கள் கூறியபடி நிகழ்ச்சிக் குறிப்பில் (Minutes Book) எழுதுபவன். இவன் சபையில் செயலாளன் நிலையில் இருந்தவன். ஊரவை நிகழ்ச்சிகளில் எத்தகைய தொடர்பும் கொள்ளாமல் நடுவு நிலைமை தாங்கிய காரணம் பற்றி இவன் 'மத்யஸ்தன்' எனப்பட்டான்போலும்! 9-ஆம் கல்வெட்டில் கையொப்பம் இட்டவருள் மதுராந்தகம் மத்யஸ்தனும் ஒருவனுவன். 15-ஆம் கல்வெட்டில் "உடைய பிராட்டியார் ஸ்ரீ செம்பியன் மகா (தேவியார் மண்டபத்திற் கூடிய ஊராட்சி மன்றத்தார் கூட்டத்தில்)[4] எங்களூர் மத்தியஸ்தரான ராஜ......" என்பது காணப்படுகிறது. 28-ஆம் கல்வெட்டில் மத்யஸ்தர் இருவர் ஒரு பத்திரத்தில் கையெழுத்திட்டனர் என்பது காண்க. "கணக்கிலும் இட்டுக் கொள்வதாகவும்" (36) என்பது காணப்படலால், இது கல்வெட்டில் குறிக்கப்பட்டதன்றி அரசாங்கக் கணக்குப் புத்தகத்திலும் குறிக்கப்பட்டு வந்தது என்பது தெளிவாகும்.

[3] தருமாசநத்தவர் என்பது நீதிபதிகளைக் குறிப்பது. அது போலவே பிரமாசநத்தவர் என்பது, வேதசாத்திர நூல்களில் வல்ல சான்றோர்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

[4] மதுராந்தகத்தில் செம்பியன் மகாதேவி மண்டபம் என்று ஒன்று இருந்தது என்பதும், அதனில் ஊரவையார் கூடி ஊர் நிகழ்ச்சிகளைக் கவனித்தனர் என்பதும், திருவெண்காட்டீசர் கோவில் கல்வெட்டு ஒன்றால் அறியப்படுவனவாகும். தென் இந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி 5, எண் 1008.

அரசன் ஓர் ஊரிலுள்ள நிலத்தைக் கோவிலுக்கோ தனிப்பட்ட மனிதனுக்கோ ஒரு கூட்டத்தார்க்கோ வழங்கும்படி அரசாங்க அலுவலன் வாயிலாக அனுப்பும் ஓலையை, ஊர்அவையாரும் அவ்வூரைத் தன்னகத்தே கொண்ட நாட்டை ஆள்பவரும் மிக்க மரியாதையுடன் வரவேற்று அவ்வூரைச் சுற்றி வந்து அரசன் ஆணையை ஊரார்க்கு அறிவித்து, ஓலையில் குறிக்கப்பட்ட அளவு நிலத்தை அளந்து அதற்கு எல்லை கட்டி, அது இறையிலி நிலம் என்று கணக்குப் புத்தகத்தில் எழுதுதல் வழக்கம். இவ்வழக்கம் மதுராந்தகத்திலும் பின்பற்றப்பட்டது என்பது,

"கரை நாட்டு நாட்டோம் நாட்டாளரும்உடனின்று பிடாகை நடப்பி......... " (30)

என்னும் தொடரால் அறியப்படும்.

**நீர்ப்பாசனம்**

"களரும் உவரும் ஓடையும் மடையும்.........திக் கொண்டு நீர்பாய்ச்சப் பெறுவதாகவும். அவ்வாய்க்கால்........." (30), "4-ஆம் கண்ணாறு", "ஸ்ரீகண்டவாய்க்கால்", "ஏரிக்கு மேல்லயிட்ட" (31), "கூடைநீர் இறைக்கவும்" (34), "நிலத்துக்கு நீர்க்கு உயர்ந்தவாறு வா(ய்க்)கால்.........குற்றேத்தம் பண்........." (35), "இவ்வூர்.........பாய்ந்திட்ட பின்பயிருக்கு வேலி ஒன்றுக்குப் பாடிகாவல்......... கொல்லைப் புன்பயிர் செய்த நிலத்துக்கு......... இறுக்கவும்" (36).

இக்கல்வெட்டுத் தொடர்கள், மதுராந்தகத்து ஏரியிலிருந்து பல கால்வாய்கள் வயல்கட்கு நீரைக் கொண்டு சென்றன. கூடைநீர் இறைத்தும் பயிர் செய்யப்பட்டது, குற்றேத்தம் வாயிலாகவும் நீர் இறைக்கப்பட்டது, பயிர்களை ஊர்க் காவலர் பாதுகாத்தனர், அவர்கட்கு இவ்வளவு நெல் என்று 'பாடிகாவல்' நெல் கொடுக்கப்பட்டது, நீர் பாயப் பெற்றதால் பின்பயிரும் பயிராக்கப்பட்டது. கொல்லைப் புன்பயிரும் (புன்செய்ப் பயிர்) செய்யப்பட்டது என்னும் செய்திகளைத் தெளிவாக விளக்கி நிற்றலைக் காணலாம். பாடிகாவலாக இவ்வளவு நெல் தரவேண்டும் என்று திருமந்திர ஓலை என்ற அதிகாரி திட்டமிட்டான் (36)-என்னும் செய்திகளைத் தெரிவிக்கின்றன.

**அளவைகள்**

(1) சோழர் காலத்தில் நெல், அரிசி, உப்பு, நெய், பால் முதலியவற்றை அளக்கச் செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலம் என்னும் முகத்தல் அளவைக் கருவிகள் இருந்தன. அவற்றுள் நாழி, பதக்கு, குறுணி, மரக்கால் என்பன (14, 20) இக்கல்வெட்டுக்களில் இடம் பெற்றுளளன.

| | | |
|---|---|---|
| 8 நாழி | — | ஒரு குறுணி |
| 2 குறுணி | — | ஒரு பதக்கு |
| 8 படி | — | ஒரு மரக்கால் |

மதுராந்தகன் பெயரால் ஒரு மரக்கால் மதுராந்தகத்தில் வழங்கப்பட்டது என்பது, "நம்மூர் மதுராந்தகன் மரக்கால் (20) என்னும் தொடரால் அறியலாம். இது பட்டினம் மரக்காலுக்குச் சிறிதளவு குறைந்தது.

(2) மணி, பொன், வெள்ளி முதலிய உயர்ந்த பொருள்கள் குன்றி மஞ்சாடி கழஞ்சு என்ற நிறைகளாலும், செம்பு முதலிய உலோகங்களும் கடைப் பொருள்களும் பலம் என்ற நிறையாலும் நிறுக்கப்பட்டன. இக்கல்வெட்டுகளில் கழஞ்சு (15), பலம் (44) என்னும் நிறைகள் குறிக்கப்பட்டுள்ளன. அக்காலத்தில் சேர், வீசை, தூக்கு, மணங்கு என்பன வழக்கில் இல்லை.

| | | |
|---|---|---|
| 2 குன்றிமணி | — | 1 மஞ்சாடி |
| 20 மஞ்சாடி | — | 1 கழஞ்சு |

(3) வேலி, மா, பாடகம் என்பன நில அளவைக் குறிப்பன.

இக்கல்வெட்டுக்களில் வேலி (5), பாடகம் (24)

| | | |
|---|---|---|
| 100 குழி | — | 1 மா |
| 20 மா | — | 1 வேலி |
| 14¼ செண்ட் | — | 1 பாடகம்[5] |

[5] 'பாடகம்' மலையாள நாட்டில் இன்றும் வழக்கில் உள்ளது என்று இந்த அளவைக் கூறியவர் திரு. கே. வி. குஞ்சன்பிள்ளையாவர்.

தொடரும்

# திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள்
(சிவராஜ யோக மடம், மேலையூர், திருவெண்காடு.)

## சிற்றிற் பருவம்

விரிநீர் ஞாலத் திருளோட்டி
விளங்கு கதிரோ னெனஉயிருள்
விரவ மனாதி மலஇருளை
வீட்டும் ஞானக் கதிரோனே!
வெருநீர் மைவிழிக் கடைசியர்கள்
விளைபூந் தேறல் நனிமாந்தி
விம்மும் தம்மென் முலைநீழல்
வேரிக் கமலமென வாங்கும்
பெருநீர் வளமும் தமிழ்வளமும்
பேணும் பொன்னித் திருநாடா!
பிரசச் செழுமா மலர்தூவிப்
பெரியோர் வணங்கும் நின்றுளால்
திருநீற் றணிகொள் மணிமார்பா!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
சீரார் காழிப் பதிதந்த
செல்வா சிற்றில் சிதையேலே! 1

தழைவண் கமுகின் முடியேறித்
தடவத் தாழை மடலோடும்
தாவிப் படர்ந்த கொடி முல்லை
தழுவும் ஊசற் கயிறாகக்
குழைவண் மலர்ப்பூங் குழல்விரியக்
கொடிநுண் ணிடையார் ஆடுவபோல்
கோலத் தோகைக் களிமஞ்ஞை
குலவும் ஊசற் பயின்றாடும்
மழைவண் பொழிலார் காவிரிசூழ்
வளவர் பொன்னித் திருநாடா!
மங்கைக் கரசின் திருவுள்ளம்
மகிழக் கூடல் நகராண்ட

செழியற் கருளும் பெருமானே
சிறியேம் சிற்றில் சிதையேலே!
சீரார் காழிப் பதிதந்த
செல்வா சிற்றில் சிதையேலே! 2

காணு உயிர்க்கும் கையற்றுக்
கசியும் உள்ளம் உடையார்போல்
கதறித் திரிந்து நள்ளிரவில்
கனலார் கொள்ளி கைக்கொள்ள
நாணு நடுங்கா வல்லமணர்
நாலும் பாழி இதுவன்று;
நாளும் அகிம்சை கொழிநாவால்
நாடிக் கோழூன் சுவையார்ந்து
பேணு அறங்கள் பிதற்றுவாப்
பிடகர் வாழ் பள்ளியுமன்றால்;
பேணித் தொழுவார் வினைநுங்கப்
பிறவா நெறிசேர் பெருவாழ்வாம்
சேணு ரின்ப வீடருள்வோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே!
சீரார் காழிப் பதிதந்த
செல்வா சிற்றில் சிதையேலே! 3

பைவைத்த மணிச் சுடிகைநெடும்
பாந்தள் முடியாற் றுங்குமெனும்
பரவைக் கடல்மா ஞாலமெலாம்
பாழுற் றிருள்கூ ரந்நாளில்
மெய் வைத்த கலைச் செல்வத்தால்
வீறுற் றெழுந்த மன்பதையாய்
விரிநீர் ஞாலப் பெருமனையில்
வியன் நாகரிக விளக்கேற்றி
மொய் வைத்த புகழ்பெற் றோங்கும்
முன்னைத் தமிழர் வழிவழியே
மும்மைப் பொருளார் சைவநெறி
முழுதும் தழையக் கண்டபுகழ்த்

தெய்வத் தமிழர் பெருமானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே!

சீரார் காழிப் பதிதந்த
செல்வா சிற்றில் சிதையேலே! 4

அவமாம் மாயைக் குழிவீழ்ந்தே
அஞ்சும் புலனுக் கஞ்சாதே

அறமே தெரிந்தும் அறிவின்றி
அல்லா தனவே பயில்வாகிப்

பவமார் கடலின் கரைகாணூர்
பத்தி நெறிக்கே படர்வாகப்

பாதத் தோணி தரவந்தாய்!
பரமர் தோணிதனில் வந்தாய்!

தவமார் நெறியாம் நாவாயும்
தணியாப் புனல்சேர் நாவாயும்

தமிழால் நடத்திக் கரைகாணூஉத்
தலைவ னருளே தாபித்த

சிவஞா னத்திண் போரேறே!
சிறியேம் சிற்றில் சிதையலே!

சீரார் காழிப் பதிதந்த
செல்வா சிற்றில் சிதையலே! 5

பூம்பாவை யெழக் கனிவாயால்
புனிதப் பதிகத் தமிழ்தந்தாய்!

பொன்னங் கொடியின் முயலகநோய்
போமா றருள்கூர் பூமானே!

காம்பார் தோளின் திருவணையார்
கைத்தாமரைநீ பற்றியநாள்

கடவுட் சோதிப் பெருவாயில்
கண்டும் பிற்பால் பேழ்கணித்தார்,

ஆம்பா லவர்க்கே யாகுமெனல்
அறிந்தே யிருந்தாங் கலமருமார்

அழியாப் பெருவீ டணவர்க்கும்
அருளிப் புக்க பெருவாழ்வே!

**தீம்பால்** கமழும் மலர்வாயா !
சிறியேம் சிற்றில் சிதையேலே !

சீரார் காழிப் பதிதந்த
செல்வா சிற்றில் சிதையேலே ! 6

**கவனப்** புரவித் திண்டேரும்
கடமா கரியும் ஏறுதே

காளைச் சில்லே றேறிவரும்
கங்கா ளன்றன் கண்மணியே !

**தவனச்** சடையா னிடமேவும்
தையல் துடைத்த கண்ணீரைத்

தமியேம் பெருக்கக் காண்பதுவோ ?
தகவிங் குனக்குப் புகலாய்நீ !

**புவனந்** தழைத்த பெரியோருள்
பொன்னங் கொடியார் தமையிகழாப்

புனிதன் ஒருநீ எனநாளும்
போற்றித் தழைவேம் மனம்நோவச்

**சிவனைம்** பதநற் றிறலோனே
சிறியேம் சிற்றில் சிதையேலே !

சீரார் காழிப் பதிதந்த
செல்வா சிற்றில் சிதையேலே ! 7

**செவிகை** பொத்தித் துணுக்குறுமார்
தீமைபயில் வெஞ்சமணரையும்

சேர்வீர் இறையே சார்மினெனத்
தெரித்தா யருட்பா சுரமோதிக்

**குவிகை** மன்னர்க் கந்நாளே
கூனும் ஊனும் ஒழித்தாய்நீ !

கோதி லருளே குணக்குன்றே !
கொத்தார் முத்தின் தத்தொளிசூழ்

**கவிகை** நிழற்றச் சின்னமுதற்
காள மூத அருளறியார்

கண்ணும் செவியும் கண்டறியக்
கவினுர் தரளத் தொகைவேய்ந்த

**சிவிகை** நடத்திச் செல்வோனே !
சிறியேம் சிற்றில் சிதையேலே !

சீரார் காழிப் பதிதந்த
செல்வா சிற்றில் சிதையேலே! 8


பூவைக் கிளிசோர் மழலைப்பூம்
பொழிலூ டோங்கும் பூங்கமலப்
பொய்கை குடைந்தா டிளமகளிர்
பூவார் குழல்வண் டோலமிடக்
கோவைக் கனிவாய் விளர்ப்பெய்தக்
கூர்வேல் விழிகள் சிவப்பூறக்
குளிர்நீர் அரமா மடந்தையரின்
கொங்கை குலுங்கப் பாய்ந்தாடும்
மாவைப் பனைய மருதம்சேர்
வளவர் பொன்னித் திருநாடா!
வாதம் புரியின் ஏதமென
மதிகெட் டமணர் நள்ளிரவில்
தீவைப் பொழித்த திறலோனே!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
சீரார் காழிப் பதிதந்த
செல்வா சிற்றில் சிதையேலே! 9

அந்தா மரைமேல் இந்திரவில்
அமைந்தாலென ஒண்பவளத்தால்
அங்கேழ் தரளம் நீலத்தால்
அம்மனை யாடும் மனைகள் தொறும்
கொந்தார் மலர்ப்பூங் குழலையக்
குறுவேர் நுதலிற் குங்குமமும்
கொங்கைத் திமிர்வண் களபமதும்
கூடிக் களிந்தி கன்னியெனப்
பந்தார் விரலார் பந்தாடும்
பண்பார் சோழவள நாடா!
பரிவாற் சுமக்கும் திருத்தாதை
படர்மார் பகலம் துகளேறச்
சிந்தா மணியே நின்றாளால்
சிறியேம் சிற்றில் சிதையேலே.
சீரார் காழிப் பதிதந்த
செல்வா சிற்றில் சிதையேலே! 10





தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருப்பணித் தொடக்க விழாவில், நமது தமிழக முதலமைச்சர், அறநிலைய ஆணையர், தஞ்சை மாவட்டக் கலெக்டர் திரு. P. N. வேதநாராயணன் I.A.S. முதலிய பெருமக்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தல். (1-5-65)



கேடிலியப்பர் கோயில் தோற்றம், திருக் கீழ்வேளூர்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34, Printed at Manorama Press, 39, M. J. B. St., Madras-5.